கிறிஸ்மஸ் சிறப்பிதழ்
இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்
PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876
St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633
மலர் : 144 | இதழ் : 20 | திகதி : 25.12.2020 | விலை : 50.00

## தோற்றிடாத் தொற்று

குளிரூட்டிகளுக்கே கொதிக்கிறது
விசிறிகளுக்கே வியர்க்கிறது
மருந்துகளே நஞ்சாகிறது
மலர்களே முள்ளாகிறது
மனிதநேயம் மரித்ததால்
உயிர்த்தது கொரோனா

இத்தனைக்குப் பிறகும்
நாம் நாமாக இல்லை
நாம் யார் என்பது இறைவன் தந்த பரிசு
நாம் யாராக வாழ்கிறோம் என்பது
நாம் அவருக்கு கொடுக்கும் பரிசு
பரிசு பொய்த்ததால்
மொய்த்தது கொவிட் – 19

கிறிஸ்து பிறப்பில்
ஏரோதன் கலங்கினான்
கொரோனா கலங்குமா...?
கலங்கும்.. நாம் பாதையில் பயணித்தால்
கலக்கும்.. நாம் பாதை மாறினால்

பாதையில் பயணிப்போம்
ஏரோதனாக அன்றி
மூவிராசாக்களாக...
யூதாசாக அன்றி
சீரேனூர் சீமோனாக...
இடப்பக்க கள்வனாக அன்றி
வலப்பக்க கள்வனாக...
லேவியனாக அன்றி
நல்ல சமாரியனாக...
மூத்த மகனாக அன்றி
மனம் திருந்திய மகனாக....

சமூக இடைவெளி – முகக்கவசம்
தனிமைப்படுத்தல் – முடக்கம்
நோய்த்தொற்றைத் தடுக்கும் காப்பரண்கள்
மனித நேயத்தை ஒடுக்கும் மதில்களல்ல
நற்செய்தியாய் நற்செய்தியில் வாழ்வோம்
வானில் ஒலிக்கிறது "அஞ்சாதீர்கள்"

**கிறிஸ்மஸ் புத்தாண்டு வாழ்த்துக்கள்**

இ.இ. வசீகரன்

## திருத்தந்தையின் நத்தார் செய்தி



கிறிஸ்மஸ் குடில், கிறிஸ்மஸ் மரம் ஆகிய இரண்டும் எல்லாக்காலத்திலும், குறிப்பாக துன்பம் நிறைந்த காலகட்டத்தில் நம்பிக்கையின் அடையாளங்கள். இந்த அடையாளத்தை நிறுத்தி விடாமல் இருப்பதில் நாம் உறுதியாயிருப்போம், அத்துடன் அவற்றின் அர்த்தத்தைப் புரிந்துகொள்வோம். அதாவது கடவுள் நமக்கு வெளிப்படுத்திய, இந்த உலகத்தில் அவர் ஒளிரச் செய்த தம் எல்லையற்ற நன்மைத்தனத்தை, அவை நமக்கு வெளிப்படுத்துகின்றன.

எந்தவொரு தீமையாலும் கிறிஸ்மஸ் ஒளியை அணைக்க முடியாது. கிறிஸ்மஸ் என்பது நம்பிக்கையின், எதிர்நோக்கின் உன்னத நிகழ்வு. எந்த தீமைக்கும் முடிவு உண்டு, விடிவு உண்டு என்பதே கிறிஸ்து மனிதனாக வந்த நோக்கம். இக்கொடிய தொற்றின் காலத்தில் கிறிஸ்மஸ் கொண்டாடுவது எம்முன் திணிக்கப்பட்டதோதோ அல்லது கற்பனையானதோ அல்ல. மாறாக எல்லோருடைய மனித மாண்பையும் மதிக்கின்ற ஓர் கொண்டாட்டமாகும். பிறக்கவுள்ள குழந்தை இயேசு உலகின் பிணி நீக்கி மக்கள் அனைவருக்கும் அன்பும், மகிழ்ச்சியும், நிறை அமைதியும் அருள்வாராக.

# இன்றைய பெரும் தொற்று நோய்க்காலத்தில் நவீன சாதாரண வாழ்வியல் முறைமையைக் கற்று வாழ்வோம்

## கிறிஸ்மஸ் செய்தியில் யாழ் ஆயர்

கிறிஸ்து பிறப்பு விழா வாழ்த்துக்களை திருநிலையினருக்கும், பொதுநிலையினருக்கும் தெரிவித்து மகிழ்கின்றேன்.

இம்முறை வித்தியாசமான சூழலில் கிறிஸ்மஸ் மற்றும் புதுவருடத்தைக் கொண்டாட நாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். இது எமக்கு மட்டுமல்ல, முழு உலகையும் பெரும் துயருக்கு உள்ளாக்கிய விடயமாகும். இன்று நாம் அனைவரும் கொவிட் - 19 நோய் காரணமாக நவீன சாதாரண வாழ்வியல் முறை (New Normal Life) என்ற வாழ்வியல் முறையினுள் பழக்கப்படவேண்டும். அதாவது, சமூக இடைவெளி பேணி, முகக் கவசங்கள் அணிந்து, சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்து வாழப் பழகிக் கொள்வதாகும். உயிர்கொல்லி நோயான கொரோனாவால் ஏற்பட்ட ஆபத்தான சூழலிலிருந்து நாமும் முழு உலகும் விடுபட மண்ணைத் தொட்ட இறைவனின் இரக்கத்தை கொண்டாடும் கிறிஸ்து பிறப்பு விழாவில் இறைவனிடம் வேண்டுவோம்.

கிறிஸ்து பிறப்பு என்பது **"நன் மனத்தோருக்கு அமைதி உண்டாகுக"** என்ற நற்செய்தி உலகிற்கு அறிவிக்கப்பட்ட நாளாகும். எனவேதான் கிறிஸ்து பிறப்பு விழா நிறை நம்பிக்கையின் திருநாள் எனப்படுகின்றது. ☞ 02








ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## அன்பிய ஆண்டை அர்த்தமுள்ளதாக்குவோம்

2020ம் ஆண்டு உலகம் முழுவதற்கும் துன்பக் கலசத்தை கையளித்து விட்டு விடைபெற 2021ம் ஆண்டு நிச்சயமற்ற சூழலில் மலர்கிறது. பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் ஆரம்பமாகுமா என கல்வி உலகு அங்கலாய்க்கிறது. நாட்டின் அபிவிருத்தி, பொருளாதார நிலை என்னவாகும் என அரசியல் பீடங்கள் அங்கலாய்க்கின்றன. அன்றாட வாழ்வாதாரம் கிடைக்குமா என பொதுமக்கள் ஏங்கி நிற்கின்றனர். உறவுகளுடன் இன்ப துன்பங்களில் பங்கெடுக்கும் காலம் வருமா என உறவுகள் அல்லற்படுகின்றனர்.

இத்தகைய ஏக்கங்கள் ஒருபுறமிருக்க சமூக இடைவெளி பேணுவதே கொரோனாத் தொற்றைத் தடுக்க சிறந்த வழியாக் கப்பட்ட இக்காலத்தில் சமூக இடைவெளி பேணுகிறோம் எனக் கூறி நாம் நமது உறவுகளுடனான அன்புப் பகிர்வுகளை உதறி எறிந்தவர்களாக வாழும் ஓர் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளோம். சமூக இடைவெளி நோய்த்தொற்றை தடுப்பதற்காகவே பேணப்படுகின்றது. அதனை வைத்து உறவுகளை முறித்து, மனித நேயத்தைக் களைந்து "நாமுண்டு நம் பாடுண்டு" என வாழ்வது அதன் அர்த்தமாகாது.

எனினும் இக் கொடிய தொற்றுக்கு எமது சமூகப் பொறுப்பற்ற பல செயற்பாடுகள் காரணமாக அமைந்து விடுகின்றது. சமூகத்தில் வாழும் பலர் மனிதநேயத்தை மிதித்து தம் சுயநலத்தையும், சுய இலாபத்தையும் கருத்திற்கொண்டு வாழத் தலைப்படுவதால் கொத்தணிகள் உருவாக நாம் காரணமாகின்றோம்.

இன்றைய உலகில் அறிவியலும், தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியும் மனித வாழ்வை அதி நவீன ஒன்றாக மாற்றியுள்ள போதிலும் மனிதநேயமும், பிறர் அன்பும், ஆன்மீக அக்கறையும் அற்றுப்போகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இன்று உலகில் எம்மத்தியில் ஏற்பட்டிருக்கும் மிகக் கொடிய வறுமை அன்புப் பஞ்சம் ஆகும். இதன் காரணமாகவே அன்பு மயமாக வாழ அழைக்கப்பட்ட நாம் "வன்முறை" என்ற ஒழுக்கமற்ற கலாசாரத்தில் காலடி பதித்துள்ளோம்.

இலங்கைத் திருஅவை 2021 ஆம் ஆண்டை அன்பிய ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. அன்பியம் என்பது ஆதிக் கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறைமையைப் பின்பற்றுவதாகும். **நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாய் இருந்தனர். எல்லா உடைமைகளையும் பொதுவாய் வைத்திருந்தனர். பேரு வகையோடும், எளிய உள்ளத்தோடும் வீடுகள் தோறும் அப்பத்தைப் பிட்டு உணவைப் பகிர்ந்து உண்டு வந்தனர். இறை நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர். நற்செய்தியை வாழ்ந்து தமது வாழ்வியல் அனுபவங்கள் ஊடாக நற்செய்தியை அறிவித்தும் வந்தனர். (திருத்தூதர்பணி 2:44-47, 4:32-37)**

இவ் இறைவார்த்தைக்கு அமைய அன்பிய சமூகமாக வாழ அழைக்கப்பட்ட நாம் சாதி, மதம், மொழி, இனம், நிற வெறி பிடித்தவர்களாக, இறை இயல்பைத் தொலைத்தவர்களாக, கடவுளை மறந்தவர்களாக வாழத்தலைப்பட்டதன் விளைவே உலகை உலுக்கும் இக்கொடிய வாதையாகும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. கடவுள் அன்று தனது சாயலாக, அன்பின் சாயலாக மனிதனைப் படைத்தார் என ஆதி ஆகமம் (தொடக்க நூல்) எடுத்துரைக்க மனிதர்களாகிய நாம் இன்று மனித இனத்தின் இறுதி ஆகமத்தை (முடிவுநூல்) விரைவாக - விறுவிறுப்பாக எழுதிக்கொண்டிருக்கின்றோம் என்பதே உண்மை.

சாவுக் கலாசாரமும், வன்முறைக் கலாசாரமும் தாண்டவமாடும் எம்மத்தியில் சாவுக் கலாசாரத்தை வாழ்வுக் கலாசாரமாகவும், வன்முறைக் கலாசாரத்தை அன்புக் கலாசாரமாகவும் மாற்றியமைக்கவே அன்பிய ஆண்டாக இவ்வாண்டு எம் மத்தியில் மலர்கின்றது.

கிறிஸ்து உயிர்ப்பின் பின் அடுத்து என்ன நடக்குமோ என எண்ணி நின்றவேளை, பெந்தக்கோஸ்தே நாளில் அன்னை மரியாளுக்கும், சீடர்களுக்கும் தூய ஆவியானவர் தோன்றி அருட்பொழிவு செய்து, நற்செய்தியை உலகெங்கும் சென்று பரப்ப அழைப்புக் கொடுத்தார். அதேபோல் இன்று அடுத்து என்ன நடக்குமோ என்ற சூழமைவில் வாழும் நமக்கு நற்செய்தியைப் பகிர்ந்து, நற்செய்தியை எமது வாழ்வாக்கி, வாழ்வின் அனுபவங்கள் ஊடாக நற்செய்திக்கு சான்று பகர்ந்து அன்பு சமூகமாக வாழ 2021 ம் ஆண்டு நமக்கு அழைப்பு விடுக்கின்றது.

இவ் அழைப்பை ஏற்று நாம் ஒருவரோடு ஒருவர் பகிர்ந்து வாழ முயலவேண்டும். பகிர்வு என்பது கிறிஸ்மஸ் விழாவின் மையப்பொருளாகும். கிறிஸ்து தம்மையே நம்மோடு பகிர்ந்து கொண்டார். ஏழைகளுடனும், ஞானிகளுடனும் முதலில் தம்மை பகிர்ந்து கொண்டவர், பின்பு கல்வாரியில் நம் அனைவருக்காகவும் தம்மை பகிர்ந்து கொண்டார். இந்த அன்பின் பரிமாணத்தை உணர்ந்தவர்களாக நமக்கு அடுத்திருப்பவர்களுடன், துன்பப்படுபவர்களுடன் இயேசுவின் அன்பைப் பகிர்ந்திடுவோம். இதுவே பிறக்கும் குழந்தை இயேசுவும், இக்கட்டான இக்காலமும் நம்மிடம் எதிர்பார்த்து நிற்கும் வேண்டுகை ஆகும்.

**அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்**

## கிறிஸ்மஸ் ஒரு நிறை நம்பிக்கையின் திருநாள்

**இலங்கை ஆயர் பேரவை**

'கிறிஸ்மஸ்" என்பது இறைவன் மனித வரலாற்றில் நுழைந்த நிகழ்வான பெத்லகேமில் நடந்த இயேசுவின் பிறப்பை நினைவு கூருதல் ஆகும். இயேசுவில் நம்பிக்கை கொள்ளவும், அவரின் பெயரில் வாழ்க்கை அனுபவம் பெறவும் கிறிஸ்மஸ் எமக்கு அழைப்பு விடுக்கின்றது (யோவான் 20:30-31) இவ்வாண்டு கொவிட்-19 தொற்று நோய்க்கு மத்தியில் இயேசுவின் பிறப்பை நினைவு கூருகின்றோம். ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் சோக அனுபவங்களுக்கு பின்னர் நல்லெண்ணம் கொண்ட அனைவரும் நீதிக்காக காத்திருக்கின்றோம். நம் உள்ளிருந்தும், எம்மைச் சூழவும், சுழலும் உலகளாவிய நிலையிலும் நடைபெறும் நிகழ்வுகள் ஊடாக எம்முடன் என்றும் பேசும் இறைவனின் குரலை கவனத்துடன் உய்த்தறிவோம்.

இயேசுவின் பிறப்பை நினைவுகூருவது கடவுளின் அன்பையும் (யோவான் 3:16) மனிதத்துவத்தின் மாண்பையும் நமக்கு அறிவிக்கின்றது. இது எம்மை ஏழைகளுடன் ஒரே குடும்பமாக ஐக்கியப்படுத்துகின்றது. கொவிட் - 19 காரணமாக நாம் ஒரு நம்பிக்கையற்ற சூழ்நிலையை எதிர்கொண்டாலும், கிறிஸ்மஸ் உண்மை கிறிஸ்மஸ் உணர்த்தும் நம்பிக்கையை நமக்கு தருகின்றது.

திருத்தந்தை பிரான்சிஸ் தமது இறுதித் திருமடலில் ஒவ்வொரு மனிதனும் சகல கலாசாரத்துக்கும் அப்பால் ஆன ஒரு மாற்ற முடியாத மாண்பைக் கொண்டவன் என்ற உண்மை மனித இயல்பாகும். திருத்தந்தை மனித மாண்பு பற்றியும், சகோதரத்துவம் பற்றியும் நற்செய்தியில் இயேசு வெளிப்படுத்தும் ஆழமான உண்மைகளை வெளிப்படுத்துகின்றார். இது உலகளாவிய முழு மனித குடும்பத்தினதும், சமூக உறவுக்கு வழிகோலுகின்றது. இது எம்மனைவருக்குமான அழைப்பு என திருத்தந்தை வலியுறுத்துகின்றார். இக்கொடிய தொற்றுநோய் மத்தியில் கிறிஸ்மஸ் கொண்டாடுவது எம்முன் திணிக்கப்பட்டதோ அல்லது கற்பனையானதோ அல்ல. மாறாக எல்லோருடைய மனித மாண்பையும் மதிக்கின்ற ஒரு கொண்டாட்டமாகும்.

எனவே எமது அழைப்புக்கு ஏற்ப நாம் துன்புறுவோர், ஏழைகள், குழந்தைகளுக்காக எமது இதய வேண்டுதல்களை இறைவனை நோக்கி உயர்த்துவோம். ஏழைகளின் உள்ளங்களை நினைவிற்கொண்டு எமக்குள்ளவற்றை இயன்றளவு பகிர்ந்து வாழ்வோம். எம் முன்னுரிமைக் கடமையாக பாதிக்கப்பட்டு, நீதிக்காக ஏங்கும் அனைவரோடும் செபத்தில் ஒன்றித்திருப்போம். அனைத்து இறை மக்களுக்கும், நல்மனம் கொண்ட அனைத்து மக்களுக்கும் கிறிஸ்மஸ் நல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

## இலங்கை ஆயர் பேரவையின் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் 2019 மீதான அறிக்கை

சமீபத்தில் நிறைவுற்ற இலங்கை ஆயர் பேரவையின் அமர்வில், 250க்கும் அதிகமான அப்பாவி உயிர்களை காவு கொண்டும் பலரை குற்றுயிராகவும் மற்றும் பலரை பலத்த காயப்படுத்தியும் நின்ற ஈஸ்டர் தாக்குதல் முக்கிய கவனம் எடுத்து ஆராயப்பட்டது. இத்தாக்குதல் நடைபெற்று 20 மாதங்கள் கடந்த நிலையிலும் இதற்குப் பொறுப்பானவர்களும், சூத்திரதாரிகளும் இன்னும் சட்டத்தின் முன் கொண்டுவரப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தாக்குதல் பற்றிய அனைத்து தகவல்களும் ஏற்கனவே திரட்டப்பட்டுள்ளது என்பதை ஊடகங்கள் மூலம் புரிந்து கொள்கின்றோம். மனிதகுலத்திற்கு எதிரான இந்தக் கொடூரமான பயங்கர தாக்குதலுக்கு காரணமானவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கக்கூடிய வகையில் விசாரணைகள் ஒரு முடிவுக்கு வர வேண்டிய நேரம் இது.

உயிரை இழந்த அனைவருக்கும் மற்றும் மிருகத்தனமான தாக்குதலால் ஏற்பட்ட உடல் மற்றும் உளவியல் ரீதியான காயங்களால் எதிர்காலம் சிதைக்கப்பட்ட பலருக்கும் இது நீதிகோரும் முழுமையான தேவையாகும். குற்றவாளிகள் நாட்டின் பாதுகாப்பையும், இனம் மதம் ஆகியவற்றினை கருதாத மக்களின் விலைமதிப்பற்ற உயிர்களின் பாதுகாப்பையும் கருத்திற்கொண்டு சட்டத்தின் முன் கொண்டுவரப்பட வேண்டும். குற்றவாளிகளும், அவர்களின் உதவியாளர்களும், உடந்தையாக இருந்தவர்களும் தண்டிக்கப்படாவிட்டால் எதிர்காலத்தில் கத்தோலிக்கர்கள், பிற மதத்தினர் மற்றும் வெளிநாட்டவர்களுக்கு எதிராக மோசமான தாக்குதல்கள் தவிர்க்க முடியாததாகி விடும்.

இத்தகைய கொடிய குற்றங்களுக்கு உரியவர்கள் மீது விரைவாக நீதி நடவடிக்கைகள் மேற்கொண்டால் அன்றி சாத்தியமான எதிர்கால தாக்குதல்கள் பற்றி மக்களின் மனதில் அச்சமும் பதட்டமும் நிலைகொண்டிருக்கும். நாட்டின் எதிர்கால நலனுக்காக நீதியான விசாரணை நடைபெறுவதானது எந்த சிறு வேறு பாடுகளும், கட்சி அரசியல் மற்றும் சொந்த நலங்களின் பொருட்டும் தடைப்பட்டு போகக்கூடாது என்பதே எங்கள் உருக்கமான வேண்டுகோளாகும். மாறாக நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசாங்கமும், நீதித்துறை செயல்முறைகளும், சட்டத்தை செயற்படுத்தும் அதிகாரிகளும் மற்றும் பொறுப்புள்ள ஒவ்வொரு நபரும் கொண்டிருக்க வேண்டிய விருப்பாகும். இலங்கை விலைமதிப்பற்ற பண்பாட்டுப் பாரம்பரியத்தைக் கொண்டுள்ள ஒரு நாடாகும். எதிர்காலத் தலைமுறைக்காக நமது நாட்டையும், பண்பாட்டையும், மக்களையும் பாதுகாத்து அமைதியையும், ஒற்றுமையையும், செழிப்பையும் உறுதிப் படுத்துவது எமது கடமையாகும்.

## இன்றைய பெரும் தொற்று (யாழ் ஆயரின் வாழ்த்துச் செய்தி)

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டவர் தம் மகனின் பிறப்பின் வழியாக மக்களுக்கு மீட்பை அளித்தார். இரக்கத்தின் ஆண்டவராகிய கிறிஸ்து மனித அவதாரம் எடுத்து மனித அவலத்தில் இரண்டறக் கலந்து கொண்ட நாளாக கிறிஸ்மஸ் பெருவிழா அமைகின்றது. இதை நாம் நன்கு உணர்ந்தவர்களாக வெளி ஆடம்பரங்களில் ஈடுபடாது, உதவி தேவைப்பட்ட மற்றும் ஏழ்மை நிறைந்த மக்களுக்கு இரக்கச் செயல்களை கிறிஸ்மஸ் காலத்தில் செய்வதில் தான் கிறிஸ்து பிறப்பு விழாவின் முழுமையான அர்த்தம் வெளிப்படுகின்றது. எனவே நாம் கிறிஸ்து பிறப்பு வாரத்தில் எம்மால் இயன்ற இரக்கச் செயல்களில் ஈடுபடுவோம்.

பிறக்க இருக்கும் புதிய ஆண்டு உலகத் திருஅவையால் திருஅவையின் பாதுகாவலரான புனித சூசையப்பரின் ஆண்டாகத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பிரகடனப்படுத்தியுள்ளார். எனவே உலகத் திருஅவையின் வளர்ச்சிக்காக புனித சூசையப்பரின் பரிந்துரையை நாடுவோம். இலங்கைத் திருஅவை அனைத்து மறைமாவட்டங்களிலும் அன்பிய ஆண்டாக இப்புதிய ஆண்டைப் பிரகடனம் செய்கிறது. எனவே அன்பியம் எமக்குக் கற்பிக்கும் ஆதிக்கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறைமைகளைப் பின்பற்றி, நற்செய்தியின் விழுமியங்களை எமது வாழ்க்கையின் அனுபவங்களாகக் கொள்வோம். பகிரும் திருஅவையாக கிறிஸ்தவ விசுவாசத்தில் நாம் மேலும் உறுதி பெற்று, இலங்கைத் திருஅவையின் உன்னதமான கிறிஸ்தவப் பணிக்கு உறுதுணை புரிவோம்.

எத்தகைய சூழ்நிலையிலும் நம்பிக்கை இழக்காது, இறை விசுவாசத்தில் ஆழ வேரூன்றியவர்களாக வாழ்வதற்கு அன்னை மரியாளின் பரிந்துரையை இரக்கத்துடன் நிறைவாக வேண்டி நிற்போம்.

அனைத்து மக்களுக்கும் எனது கிறிஸ்மஸ் புத்தாண்டு நல்வாழ்த்துக்களையும்
இறையாசீரையும் வழங்கி நிற்கின்றேன்.

# அன்பியங்கள் மலருமா?

இற்றைக்கு சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே பலஸ்தீன நாட்டில் வாழ்ந்தவர் இயேசு. பலஸ்தீனத்தின் சிறியதொரு கிராமமாகிய பெத்லேகேமில் பிறந்து இன்னுமொரு சிறு கிராமமாகிய நசரேத்தில் அவர் வளர்கின்றார். சாதாரண தச்சுத் தொழில் செய்கின்ற குடும்பத்தில் பிறந்து வளர்ந்த அவருடைய போதனைகளும், செயற்பாடுகளும் குறிப்பாக அவரது சிலுவை மரணமும் அவருக்குப் பின்னான மானுட வரலாற்றில் செலுத்திய செல்வாக்கு அளவிடற்கரியது. இதற்குக் காரணமாக அமைவது அவரது வாழ்க்கைக் காலத்தில் அவரில் நம்பிக்கை கொண்டு அவரது கருத்துக்களை ஏற்று அவரைப் பின்செல்லத் தீர்மானித்த அவரது சீடர்கள் குழாமுமாகும். அவரை மெசியா என்றும் இறைமகன் என்றும் மனித குலத்தின் மீட்பர் என்றும் அவர் மரணத்தின் பின் உயிர்தெழுந்தார் என்றும் நம்பிய அவர்கள் அவரின் பணிப்பின்படியே உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் அந்த நற்செய்தியைப் பறைசாற்ற முனைந்து நின்றனர். மேலும் இயேசுவின் படிப்பினைகளை அடியொற்றிய ஒரு குழுமமாகவும் அவர்கள் வாழ முயன்றனர்.

## இயேசுவும் திருச்சபையும்

இன்று உள்ளது போன்ற ஒரு மாபெரும் அமைப்பாக அதன் அனைத்து தன்மைகளோடும் திரு அவையை உருவாக்க இயேசு எண்ணியிருந்தார் என்று நாம் கருதமுடியாது. ஆனால் திருச்சபை அவரது ஆளுமையாலும் அவரது போதனைகளாலும் ஆகர்சிக்கப்பட்ட அவரது சீடர்கள் குழாமின் பரிணாம வளர்ச்சியூடாகவே ஏற்படுகிறது. இயேசு தமது இவ்வுலக வாழ்வின் போது இறையாட்சி என்ற இலக்கு வாழ்வை தம் சீடர்கள் முன் வைத்தார். சொத்துச் சேர்ப்பு, வகுப்புவாதம், ஏற்றத்தாழ்வு, ஆட்சியதிகாரம், வன்முறை போன்றவற்றின் மீது கட்டப்பட்டிருந்த தமது சமகால சமூக அமைப்பை அவர் உலகின் ஆட்சி அல்லது தீமையின் ஆட்சி என்கின்றார். அதற்கு மாற்றாக அவர் சொத்துப் பகிர்வு, சகோதரத்துவம், சமத்துவம், அன்பு வழி என்பவற்றில் கட்டப்படும் இறை யாட்சியை முன் வைக்கிறார். இயேசுவின் வாழ்க்கை காலத்தில் அதனை ஏற்றுக்கொண்டு வாழ முயன்று இயேசுவின் பின்னாகவும் ஒரு சபையாக இணைந்து அந்த வாழ்க்கையை ஆழப்படுத்த முயன்றனர் அவரது சீடர்கள். ஆகவே இயேசுவின் பகிரங்கப்பணிக்காலத்தில்அடியிடப்பட்டுஇயேசுவுக்குப்பின் திருத்தூதர்களின் காலத்தில் உருப்பெற்று வளர்ந்த யேசுவின் சீடர்களின் குழாமே திருச்சபை அல்லது திரு அவை என்று அழைக்கப்படுகின்றது. இயேசு போதித்த இறையாட்சியின் உயர்ந்த விழுமியங்களை கொண்ட குழாமாக வாழ்வதே இத்திருஅவையின் நோக்கமாகும். தொடக்கத் திருஅவை பல்வேறு சவால்கள் மத்தியிலும் இந்த இலக்கு வாழ்வை வாழ முனைந்தது.

## தொடக்க திருஅவை

இயேசுவின் சீடர்களுள் பன்னிருவர் முதன்மை பெற்றிருந்தனர். அவர்கள் திருவிவிலியத்திலே திருத்தூதர்கள் என அழைக்கப்படுகின்றனர். இத் திருத்தூதர்களே தொடக்கத் திருச்சபையின் தூண்களாக இருந்தனர். இவர்களோடு மூப்பர்கள், கண்காணிப்பாளர்கள், கற்பிப்போர், திருத்தொண்டர் போன்ற பலவகையான பணிகளை ஏற்றோர் தொடக்கத் திருச்சபையை கட்டியெழுப்புவதிலே பெரும் பங்காற்றினார்.

இவர்கள் அனைவரதும் ஒரே நோக்கம் திருச்சபையை இயேசுவின் போதனைகளுக்கு அமைவான வாழ்க்கையை வாழும் குழுமமாக கட்டியெழுப்புவதும் அவர் விட்டுச்சென்ற பணியை தொடர்ந்து முன்னெடுப்பதும் என்பதாகவே இருந்தது. இவர்களின் நெறிப்படுத்தலில் வாழ்ந்த தொடக்கத் திருச்சபை இயேசு முன்வைத்த இறையாட்சியின் விழுமியங்களை தமது சூழமைவுக்கு ஏற்ப கடுமையாக வாழமுயன்றமையை திருத்தூதர் பணி நூலிலிருந்தும் ஏனைய திருமுகங்களிலிருந்தும் நாம் புரிந்து கொள்ளலாம். இதன் பயனாக தொடக்கத்திருச்சபை இயேசு முன்வைத்த இறையாட்சியின் இலட்சிய விழுமியங்களை சிறுசிறு குழுமங்களாக வாழும் ஒரு சபையாக அமைந்திருந்ததை நாம் அவதானிக்கலாம்.

## இடைக்காலத் திருச்சபை

தொடக்கத் திருச்சபை இயேசுவின் போதனைக்கு பிரமாணிக்கமாக இருந்து உயர் கிறிஸ்தவ விழுமியங்களைக் குழுமங்களாக வாழ முயன்றாலும் இரண்டாம் நூற்றாண்டில் ஆரம்பித்து மூன்றாம் நூற்றாண்டில் இப்போக்கில் படிப்படியான ஒரு தளர்வு ஏற்படுவதையும், உயிர்த்துடிப்புள்ள குழும வாழ்வுக்குப் பதிலாக பாரிய நிறுவனமாகவும் ஆதிக்க சக்தியாகவும் திருச்சபை வளர்ச்சி பெறுவதையும் அவதானிக்கலாம். பல்வேறு காரணங்களால் இடைக்காலத்தில் ஏற்பட்டு வந்த இத்தகைய மாற்றங்கள் திருச்சபையை அதன் ஆரம்ப

"அசிப்பா' என்று அழைக்கப்படும்
மேய்ப்புப்பணி அணுகுமுறையில்
இலங்கையில் அன்பியங்கள் ஆரம்பிக்கப்பட்டு
இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு
இலங்கை ஆயர் பேரவை 2021ம் ஆண்டை
அன்பிய ஆண்டாக பிரகடனம் செய்துள்ளது.
தற்போதைய பெருந்தொற்
றுப் பின்னணியில் இவ்வாண்டை நடைமுறையில்
எவ்வாறு ஒழுங்கமைப்பது என்பது சவாலாகவே
காணப்படும் நிலையில் குறைந்த பட்சம் திரு
அவையின் எதிர்காலம் இத்தகைய சிறிய
குழுமங்க ளிலேயே தங்கியுள்ளது என்கின்ற
விழிப்புணர்வையாவது ஏற்படுத்துவது
அவசியமானது"




நோக்கிலிருந்து விலகச் செய்தன. இயேசுவின் போதனைகளுக்கு மாறானதும் சில சமயங்களில் முற்றிலும் எதிரானதுமான கருத்துக்களும் நடைமுறைகளும் திருச்சபையினுள் நுழைந்தன. இப்போக்கு 15ம் நூற்றாண்டளவில் உச்சம் கண்ட போது திருச்சபையில் பாரிய பிளவுகளும் ஏற்பட்டன. இப்பிளவுகள் மற்றும் மாற்றுக்கருத்துக்கள் மட்டில் ஆரம்பத்தில் திருச்சபை கடுமையான நிலைப்பாட்டை எடுத்திருந்தாலும் படிப்படியாக திருச்சபையில் மாற்றங்கள் புதுப்பித்தல் வேண்டும் என்ற கருத்தும் மேலோங்கத் தொடங்கியது. 1962 இல் கூட்டப்பட்ட இரண்டாம் வத்திக்கான் சங்கம் நீண்ட காலமாக வேண்டப்பட்ட இப்புதுப்பித்தலின் ஊற்றாக அமைந்தது.

## புதுப்பித்தலின் காலம்

1962-1965ம் ஆண்டு காலப்பகுதியில் வத்திக்கானில் கூட்டப்பட்ட இந்த இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் திருச்சபையின் வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும். ஏனெனில் இச்சங்கம் திருச்சபையை புதுப்பிக்கும் தன் முயற்சியில் அதன் ஊற்றுக்குச் செல்லத் தீர்மானித்தது. தொடக்க திருச்சபை வாழமுயன்ற இறையாட்சி விழுமியங்களுடனான இலட்சியகுழும வாழ்வே திருச்சபையின் சாரம் என்பதை இச்சங்கம் கண்டுணர்ந்தது. இச்சங்கத்தின் திருச்சபை பற்றிய மறைக் கொள்கைத் திரட்டு என்னும் ஏட்டின் இரண்டாவது இயல் திருச்சபையை ஒரு இறைமக்கள் சமுதாயம் என அடையாளம் கண்டது. இறைவன் மனிதனை தனிப்பட்டவனாக அல்ல மாறாக ஒரு குழுவாகவே மீட்க திருவுளம் கொண்டார் என இவ்வேடு வலியுறுத்துகிறது.

மேலும் இச்சங்கத்தின் இருபதாவது ஆண்டு நிறைவை நினைவு கூருமுகமாகவும், சங்கத்தின் மீதான ஒரு மீள் பார்வையை வலியுறுத்துமுகமாகவும் 1985ல் கூட்டப்பட்ட உலக ஆயர் பேரவையின் முடிவும் "குழுமத் திருச்சபையியல்" தான் (Communion Ecclesiology) இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் சாரம் என்றுரைக்கின்றது. உண்மையில் சங்கத்தின் பின்னான திருச்சபையை புரிந்து கொள்ளும் அறிவுத்தேடலின் தொடர் மையமாக அடையாளம் காணப்பட்டு வருவது குழுமத்திருச்சபையியலே ஆகும். சங்கம் மற்றும் சங்கத்தின் பின்னான இறையியல் வளர்ச்சி உயரிய கிறிஸ்தவ குழும வாழ்வே திருச்சபையாய் ,ருப்பதன் சாரம் என்பதை தொடர்ந்து பறைசாற்றி வருகின்றது.

## அடிப்படை கிறிஸ்தவ குழும வாழ்வு இயக்கம்

இரண்டாம் வத்திக்கான் சங்கம் தனது புதுப்பித்தல் முயற்சியின் பயனாக திருச்சபையின் குழுமத்தன்மையை கோட்பாட்டு ரீதியில் வலியுறுத்தியிருந்தாலும் அதற்கு நடைமுறை வடிவம் கொடுக்கும் தேவையொன்று மேய்ப்புப்பணி சார்ந்து எழுந்தது. ஏற்கெனவே திருச்சபையில் காணப்பட்ட பக்திசபைகளும், குழுக்களும் இத்தேவையை பூர்த்தி செய்ய போதாத்தன்மை கொண்டவையாக காணப்பட்டன. சங்கத்தின் பின்னாக ஆரம்பிக்கப்பட்ட இளையோர் கழகங்கள், கலைக்குழுக்கள், வழிபாட்டு ஒன்றுகூடல்கள் போன்றவையும் போதாதவையாகவே அமைந்திருந்தன.

இந்த நிலையில்தான் 1960களில் லத்தீன் அமெரிக்காவிலே கருக்கொண்ட அடிப்படை கிறிஸ்தவ குழுமங்கள் என அழைக்கப்பட்ட குழும வாழ்வு முறை திருச்சபையின் கவனத்தை பெறத் தொடங்கியது. பெரிய பங்குகள், அருட்பணியாளர் பற்றாக்குறை போன்றவற்றை நிவர்த்தி செய்ய பொதுநிலையினர் தலைமை தாங்கும் சிறிய சிறிய குழுக்களை ஒவ்வொரு பங்கிலும் தோற்றுவித்து அந்த குழுமங்களிலே கிறிஸ்தவ வாழ்வும் வழிபாடும் இடம் பெற வகை செய்வதே இவ்வியக்கத்தின் ஆரம்பமாக அமைகிறது.

முதலில் பிறேசில் நாட்டிலே ஆரம்பித்த இத்தகைய சிறிய குழுமங்கள் மிகவிரைவில் ஏனைய தென் அமெரிக்க நாடுகளிலும் தொடர்ந்து பிலிப்பின்ஸ், ஆபிரிக்கா போன்ற இடங்களுக்கும் பரவியது. படிப்படியான இந்தியா மற்றும் ஆசிய நாடுகளிலும் பரவிய ,வ்வியக்கம் தற்போது ஐரோப்பிய நாடுகளிலும் பரவி வருகிறது. ஆரம்ப திருச்சபையில் காணப்பட்ட குழும வாழ்வை புதுப்பிக்கும் ஆகப் பிந்திய பயனுறு இயக்கமாக அடிப்படை கிறிஸ்தவ குழும வாழ்வு இயக்கம் காணப்படுகிறது.

## இலங்கையில் அடிப்படை கிறிஸ்தவ குழும இயக்கம்

மேற் சொல்லப்பட்டது போல உலகளாவிய ரீதியில் பரவத் தொடங்கிய கிறிஸ்தவ குழும வாழ்வு இயக்கம் இலங்கையைப் பொறுத்தளவில் முதலில் 1970களிலும் பின்பு ஒழுங்கமைக்கப்பட்ட விதத்தில் 1995,ல் இருந்தும் பரவத் தொடங்கியது. தற்போது இலங்கையிலுள்ள அனைத்து மறைமாவட்டங்களிலும் இவ்வியக்கம் பரவிக் காணப்படுகிறது. இவ்வியக்கத்தின் மூலம் இரண்டாம் வத்திக்கான் சங்கம் அவாவி நின்ற குழும வாழ்வுக்கான புதுப்பித்தல் முயற்சியை முன்னெடுக்க இலங்கை ஆயர் மன்றம் பல கூட்டு முயற்சிகளை எடுத்து வருகிறது.

யாழ் மறைமாவட்டத்தை பொறுத்த வரையில் 1994ல் கூட்டப்பட்ட 'புதுப்புனல்' என்னும் மேய்ப்புப்பணி மாநாட்டிலிருந்து ஆரம்பித்த இவ்வியக்கம் தொடர்ந்து பயணித்து வருகின்றது. கடந்த இருபத்துஐந்து ஆண்டுகாலபயணத்தில்இவ்வியக்கம் பல முன்னேற்றங்களையும், பின்னடைவுகளையும் சந்தித்துள்ளது. 'அசிப்பா' என்று அழைக்கப்படும் மேய்ப்புப்பணி அணுகுமுறையில் இலங்கையில் அன்பியங்கள் ஆரம்பிக்கப்பட்டு இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இலங்கை ஆயர் பேரவை 2021ம் ஆண்டை அன்பிய ஆண்டாக பிரகடனம் செய்துள்ளது. தற்போதைய பெருந்தொற்றுப் பின்னணியில் இவ்வாண்டை நடைமுறையில் எவ்வாறு ஒழுங்கமைப்பது என்பது சவாலாகவே காணப்படும் நிலையில் குறைந்த பட்சம் திரு அவையின் எதிர்காலம் இத்தகைய சிறிய குழுமங்களிலேயே தங்கியுள்ளது என்கின்ற விழிப்புணர்வையாவது ஏற்படுத்துவது அவசியமானது.

அருட்பணி ம.வி.இ.இரவிச்சந்திரன்

# அனைவரும் உடன் பிறந்தோர்



அருட்பணி. அமிர்த யெயசேகரம்

## திருத்தந்தையின் திருமடலின் மீது ஓர் பார்வை

"அனைவரும் சகோதரங்கள்" என்ற தலைப்பில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் விறத்தெல்லோ துத்தோ (Fratelli Tutti) என்ற திருச் சுற்று மடலை இத்தாலிய மொழியில் அசிசி நகரில் வெளியிட்டுள்ளார். மகளிரும் இப்பதத்தில்இணைவதனால்தமிழிலில் "அனைவரும் சகோதரங்கள்" என்ற தலைப்பு ஏற்புடமை.

மனிதனைச் சுற்றியுள்ள உலகம் எழுப்பும் உள்ளத்துணர்வுகளின் வெளிப் பாடுகளிற்கு எழுத்துருவ நயத்துடன் இலக்கியமாகப் பரிணமிக்கிறது இம்மடல். பிற உலக உண்மையை புலப்படுத் தும் ஒரு உரைகல்லாக அமைகிறது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் புனித அசிசியாரின் சிந்தனையில் உள் வாங்கப்பட்டு கடும் சொற்பதங்களையும் திரு அவைக் கோட்பாடுகளையும் மரவு வழிச் சித்தாத்தங்களைப் பயன்படுத்தாது சகோதரங்கள் மூலமாக இறையன்பை அனுபவித்து வாழுவதற்கு இத்திருமடல் அறைகூவல் விடுக்கிறது. இது திரு அவையின் வரம்புகளைக் கடந்தஉலக ளாவிய சிந்தனைகளையும் பிரபஞ்ச மதிப்பீடுகளையும் கொண்டு ஒரு அசைவியக்கத்தை உருவாக்கும் ஒரு ஊக்கி ஆகும்.

இம் மடலின் கருத்துக்கள் ஒரு பிழிவாக குறுந் தலைப்புக்களில் இங்கு நகர்த்தப்பட்டுள்ளது.

**நல்ல சமாரியனது வினைத்திறன்**

இவரது மடலில் - திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் சமாரியன் உவ மையை உரைகல்லாக உலகப்பார் வையில் வரிந்து கொள்கிறார். "யார் எனது அயலவன் என்ற கேள்வியை" வேறு கோணத்தில் "நான் எவ்வாறு அடுத்தவனுக்கு, அயலவன்" ஆகமுடி யும். அன்பு ஒன்றுதான் எமது அயல வன் யார் என்று தீர்மானிக்கிறது.

**அந்நியர் இறையியல்**

சமாரியன் உவமை பின்புலத்தில் அனைவரும் எம்மில் காயப்படுத்தப்பட்ட அந்நியரைக் கண்டதும், காணாதவர் போன்று நழுவிச் செல்பவரா? அல்லது நல்ல சமாரியரா? இதில் நாம் யார் என்று அடையாளப்படுத்திச் செயலாக்கத்தில் ஈடுபட வேண்டும். நாம் நல்ல சமாரி யரா அல்லது கவனமற்ற நழுவல் பேர் வழியா!

**தொற்று மனநோய்!**

உலகை ஆட்டிப்படைக்கும் சம கால தொற்றுநோய் உலகம் ஒரு குடும்பம் என்ற உணர்வை பதித்துள்ளது. அனை வரும் ஒரே படகில் - ஒருவருடையது அடுத்தவருடையது ஒருவரின் பிரச் சினை மற்றவருடையது. ஒரு தரும் தனியாகப் பாதுகாப்பைத் தேட முடியாது. நாம் அனைவரும் ஒட்டு மொத்தமாகத் தான் காப்பாற்றப்பட முடியும்.

**உலகமயமாக்கல்**

மனித உரிமை பாதுகாப்பு மையத்தில் உலக மயமாக்கல் சுழர வேண்டும்- உலக மயமாக்கல் ஒரு மனித குடும்ப உணர்விற்கு எடுத்துச் செல்கிறதா? சமூக மாற்றத்துக்கான தொடக்கப்புள்ளி தனிமனிதன். சமூகத்திலுள்ள குழம் பலுக்கு குடும்பக் குழம்பலும் காரணம் - குடும்பக் குழம்பல் சமூகக் குழம்பலை மிகு வெகுவாகப் பாதிக்கும்.

**நுகர்வும் வீசிஎறிதலும்**

மனிதர் அனைவரும் சிதைக்க முடி யாத மாண்புடையவர்கள்மதிப்பிற்குரிய வர்கள் - ஆனால் அவர்கள் வறியவர் களாயின் வலது குறைந்தவர்களாயின் பயன்பட முடியாத முதியவர்களாயின் ஒதுக்கப்படுகிறார்கள். குப்பையாக அனைத்தையும் எறியும் பழக்கத்திற்கு அடிமையாகியிருக்கிறோம் - உணவை வீணாக விரயம் செய்தல் மிகவும் கவ லைக்குரியது. பொருட்கள் மட்டுமல்ல மனிதர்களும் வீசப்படுகிறார்கள்.

நுகர்தல் - எறிதல் பரவலாக வீடுகளுக்குள் பரவியுள்ளது. - நான் எறிவ தென்ன ஏன் வீணாக்குகிறேன் - ஏன் எறிகிறேன் என்பது ஆழமாக சிந்திக்கப்பட வேண்டும்.

**மதில்கள் நிறைந்த உலகு**

மதில்களை அமைக்கும் ஒரு பண்பாட்டுக் குள் இவ்வுலகம். மனித மனங்களில் மதில்கள் - நாடுகளிற்கிடையில் மதில்கள். இவை அனைத்தும் மனிதஉகளையும் பண்பாடுகளையும் சந்திக்கும் தடைமதில் கள். அடுத்தவரின் தேவைக்குத் தம்மை மூடிக்கொள்பவர்கள்.

எவர் சுவர்களை அமைக்கிறார்களோ அவர்களே தாங்கள் கட்டும் சுவர்களுக் குள் அடிமையாகி விடுகிறார்கள். சுவர் கள் என்ற சொற்பதம் 14 தடவை எமக்கு வரும் சோதனையாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளது.

**செவிட்டு உலகம்!**

மற்றவருக்குச் செவிமடுப்பது, அவ தானித்துக் கேட்பது அருகிப்போகிறது. அரைகுறையாக அவதானித்து அடுத்தவர் கருத்தின் நிறைவிற்கு முன்னர் முடிவுகள் எட்டப்படுகிறது. இது பன்னாட்டு மட்டத்தில் இடம்பெறுகிறது. கேட்கும் திறனை நாம் இழக்க முடியாது.

**போர் மானிடத்தின் பெரும் தோல்வி**

மனிதனது அரசியல் சிந்தனைகளில் போரும் மரணதண்டனையும் நியாயப் படுத்தப்படுகின்றது! 27 ஆசிய நாடுகளுள் 17 நாடுகளில் மரணதண்டனைகள் நிறை வேற்றப்படுகின்றதென மியன்மர் கருதினால் சாள்போ அவர்கள் ஆசிய ஆயர்கள் கூட்டுமன்றத்தின் அறிக் கையை மேற்கோளாகத் திருத்தந்தை குறிப்பிடுகிறார். மரணதண்டனை ஏற் றுக் கொள்ள முடியாது இது முற்றாக மனித வர்க்கத்தில் இருந்து களையப் பட வேண்டும். "கொலைஞனும் தனது தனித்துவ மாண்பை இழப்ப தில்லை."

**ஒதுக்கப்படும் புலம்பெயர்விகள்.**

ஒவ்வொரு மனிதப் பிறவியும் அழிக்க முடியாத மாண்பைக்கொண் டிப்பதால் அனைவரும் எமது சகோத ரிகள் சகோதரர்கள் ஆயின் இவ்வுல கம் அனைவருக்கும் உரிமைச் சொத்து. எனது அயலவர் தனது நாட்டில் அல்லது பிற நாட்டில் பிறப் பது பொருள் அற்றது 'யாதும் ஊரே யாவரும் கேளீர்'.

**மறைகளின் வகிபாகம்.**

சமய உரையாடலின் நோக்கு சமயங்களுள் நட்புறவு அமைதி இசைவாக்கம் இவைகளை உருவாக்க அத்துடன் மதங்களில் பொதிந்துள்ள ஆன்மீக அறம்சார் நெறிகளை உண்மையிலும் அன்பிலும் பகிர்தல்.

**இனப்பாகுபாடு.**

இது ஒரு கிருமி மனிதமனங்களை முடக்குகிறது மட்டுமல்ல அது அழிந்து போகாமல் அது ஒழித்துக் கொண்டு சந்தர்ப்பங்களைத் தேடிக் கொண்டிருக்கிறது என்கிறது திரு மடல்.

## இம் மடலின் தனித்துவத் துணுக்குகள்.

- திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்தான் முதல் திருத்தந்தையாக அனைத்தையும் இணைத்துக்கொள்ளும் சொல்லாடல்களைப் பயன்படுத்துபவர் (inclusive language). கத்தோலிக்க திருஅவை உலகத்திற்காகவே என்ற கருத்தியல் அவரது சுற்றமடல்களில் ஆழமாக இளையோடுகிறது.
- முன்பின் அறியப்படாதவரை, அந்நியரை குடும்ப உறவு கலந்த உணர்வில் ஏற்றுக்கொள்ளும் பக்குவத்திற்கான இறையியல் சிந்தனைகள் பட்டறிவின் பின்புலத்தில் பதியப்பட்டுள்ளன.
- 12 ஆயர்மன்றங்களின் கருத்துக்கள் மேல் கோள்களாகப் பிணைந்துள்ளது. ஒவ்வொரு பிராந்தியத்திலிருந்து ஆயர்மன்றக் கருத்துக்களை இணைத்தது ஒரு சிறப்பம்சம். விடுதலை இறையியலாளர் லெனோட் பொவ் அவர்களின் கருத்துக்கள் இதனுள் வாடை அடிக்கிறது.
- விக்ரர் கூக்கோவின் மிகப்பரிதாபமானவர் (Les Miserables) என்ற நாவலில் ஜின்வல்ஜின் என்பவர் தன்னைக் கள்வனாக, தப்பியோடிய கைதியாக, ஒரு ஆயருக்கு மிக ஆபத்தானவராக வெளிப்படுத்தியுள்ளார். அதற்கு ஆயர் "எனக்கு உம்மைத் தெரியும் - உமது பெயரும் தெரியும் - உமது பெயர் சகோதரன்" இது தான் "அனைவரும் சகோதரங்கள் என்ற இச்சுற்றுமடலின் பிழிவு

## இருள்....

(5ம் ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவை அனைத்தும் சேர்ந்து என்னில் ஒரு நிழலை உருவாக்கி விடுகின்றது .வாழ்க்கையில் வளர, மனம் மாறி ஓர் ஆன்மீகப் பயணத்தை மேற்கொள்ள, நல்ல உறவுகளை வளர்க்க இந்த நிழல் தடையாக வரலாம். அதனால் இந்தத் தடை நீங்க வேண்டுமாயின் நான் இந்த நிழலில் இருந்து விடுபட வேண்டும். அது அவசியம்.

முதலில் எனது நிழலை நான் அடையாளங்காண வேண்டும். பின்னர் எனது நிழலுடன் நான் நண்பனாக வேண்டும். "எனது நிழலை எனது எதிரியாகப் பார்ப்பது ஆரோக்கியமற்றது. அதிலிருந்து விடுபட உதவியாகாது. பின்னர் இந்த நிழலிலிருந்து நான் விடுதலை பெற நித்தமும் முயற்சி செய்யவேண்டும்.

நிழல் கடுமையாகவும், தடிப்பாகவும் இருக்குமானால் எனக்கு உளவளத்துணை தேவைப்படலாம். இந்த இருளில் இருந்தும் நான் ஒளிக்கு வருவது அவசியம். முகமூடிகள், பொய்யான நான், நான் என்ற மமதை வேறு, இந்த நிகழ் வேறு.

### நிறுவன நிழல் (Corperate Shadow)

பௌத்த சிங்கள வெறி, சாதி வேற்றுமை, சாதிக் கொரு கோவில் போன்றவை நிறுவன நிழலாகும். வட அமெ ரிக்க ஆயர் கூட்டம் இப்படிப்பட்ட ஒரு நிறுவன நிழலை வளர்த் துள்ளார்கள். அதனாலேயே, ஒரு கத்தோலிக்க ஜோ பைடனை எதிர்த்து, இனத் துவேசத்தைப் பகிரங்கமாகவே வளர்த்து வரும். அரசியல் கலாசாரத்தை கிஞ்சித்தும் பின்பற்றாத மனித உரிமை களை மதிக்காத, சுற்றுச் சூழலை எதிர்க்கும் பிரிவினை களை வளர்த்து வரும் டொனால்ட் ரம்பைப் பகிரங்கமா கவே ஆதரித்தனர். வெள்ளைத் தோல் கொண்ட பல வட அமெரிக்கர்கள் கிறிஸ்தவத்தையும் இனத் துவேசத்தையும் இணைத்து வாழப் பழகிக் கொண்டார்கள். இவைதான் நிறுவன நிழல். ஒளி இந்த உலகிற்கு வந்தும், இவர்கள் இருளையே விரும்பினார்கள். இன்னமும் விரும்புகிறார்கள். எந்த விண்மீனையும் இவர்கள் காண வாய்ப்பில்லை

## விண்மீன்

அரவது (இயேசுவின்) விண்மீன் எழக் கண்டோ"(மத் 2:2) இந்த விண்மீனைக் கண்டவர்கள் யார்? தலைமைக் குருக்கள்காணவில்லை, அறிஞர்கள்காணவில்லை, மெய்யிய லாளர்கள் காணவில்லை, இறையியலாளர்கள் காணவில்லை, ஞானிகள்தான் கண்டார்கள். ஞானிகளின் ஞானக் கண்ணுக் குத்தான் அந்த விண்மீன் தெரிந்தது.

ஒளியை நோக்கிப் பயணிக்கும் மக்களுக்குத்தான் இன்றும் விண்மீன் தெரியவரும். அந்த விண்மீன் எம்மைப் பெத்லேகமுக்கு அழைத்துச் செல்லக்கூடாது. அது பின்னடைவு (regression) குடில் அமைத்து, அக்குடிலில் இயேசுவைக் குழந்தையாக்கி, சிலையாக அதை வடித்து, இதுதான் நத்தார் என்று நினைப்பது பின்னடைவு. அந்தக் குடிலுடன் எம்மை இணைத்துக் கொண்டு, இயேசுவைக் குழந்தையாக்கி, அந்தச் சிலையை வழிபடுவோருக்கு அந்த விண்மீன் தெரியாது. அந்த மதப் பழக்க அடிமைத்தனத்தில் விண்மீன் தெரியாது.

முரணாக ஒளியை நோக்கிப் பயணிக்கும் மக்கள் தங்கள் மனக் கண்ணில் (Inner eye) அந்த விண்மீனைக் காண்பார்கள். துணிவுடனும், நம்பிக்கையுடன் அந்த விண் மீன் காட்டும் வழியில் பயணிப்போர் இயேசுவின் வாழ் வைப் பார்ப்பார்கள். அந்த விண்மீன் கல்வாரி வழி சென்று, கல்லறையினூடாக அதாவது ஒளியை நோக்கிப் பயணிப் போர் தம்மை வெறுமையாக்கும் பொழுது, அந்த வெறுமையில் ஒரு நிறைவை அனுபவித்து, அந்த அனுபவத்தில் கிறிஸ்துவை சந்திப்பார்கள். இறுதியில் கிறிஸ்துவில் வாழ்வார்கள்.

**முடிவுரை**

இருளில் இருந்து ஒளியை நோக்கிப் பயணிப்போர் இந்த ஆன்மீகப் பயணத்தில் இயேசுவின் பிறப்பையும், உயிர்த்த கிறிஸ்துவையும் ஒன்றாகவே பார்ப்பார்கள். பிரித்துப் பார்க்க மாட்டார்கள். இருமையில் (இரட்டை வாதம் Dvlism) வளர்ந்த மதம் அவற்றைப் பிரித்துப் பார்ப்பது மட்டுமல்ல, அந்தப் பிரிவில் இருமையில் அவற்றைப் புறம்பாக்கி வழிபாடுகளை யும், ஆராதனைகளையும் வளர்த்து விட்டன. ஆனால் இயேசு வின் அழைப்பு ஒர்மை உணர்வை நோக்கி (uritive consususness) நாம் வளர வேண்டுமென்பதே. வளர் வோமா? வாழ்வோமா?

# இருள் நிழல்

## ஓர் உளவள ஆன்மீக நோக்கு

**முன்னுரை**

2020 முடிவை நோக்கி நகர்கின்றது. இந்த ஆண்டைத் திரும்பிப் பார்க்கும் பொழுது ஓர் இருள் சூழ்ந்த ஆண்டாகவே தோன்றுகின்றது. பல கோணங்களில் இருந்து பார்க்கும் பொழுதும் ஓர் இருள் மயமான ஆண்டாகவே காட்சி தருகின்றது. எங்கும் இருளாகவே தோன்றுகின்றது.

**இருள்கள்**

முதலாவதாக எங்கள் அனைவரின் கவனத்தை ஈர்த்தது கோவிட் - 19 கொரோனா முதல் அலை பங்குனி வந்த பொழுது நாம் ஓரளவு பாதிக்கப்பட்டோம். பல நாடுகளில் இந்தக் கொரோனா கோரத் தாண்டவம் ஆடியபொழுது எங்கள் நாட்டில் அரசும், சுகாதார நிறுவனமும் நாம் கொரோனாவைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து விட்டோம் என்று மார் தட்டினார்கள். உலக சுகாதார நிறுவனமும் எம்மைப் பாராட்டியது. ஆனால், இரண்டா வது அலை இப்பொழுது பல இடங்களி லும் பரவி வருகின்றது. அரசும், சுகா தாரத் துறையும் கட்டுப்படுத்த முடியாமல் கைவிரித்து விட்டார்கள் போலவே தோன்று கின்றது. பாராளுமன்றத் தேர்தலை அவசர மாக சுய நலத்திற்காக நடத்தியது தான் முக்கிய காரணமோ என்று கேட்க வைக் கின்றது. மக்களிடையே ஒரு பாரிய பயத்தை உருவாக்கி விட்டது.

அடுத்ததாக பௌத்த சிங்கள நாடு இந்த நாடு. சிறுபான்மையினர் எங்களுக் குத் தேவையில்லை என்ற கூற்றை ஜனாதி பதித் தேர்தலும், அதை அடுத்த பாராளு மன்றத் தேர்தலும் நிரூபித்து விட்டது.

அதுமட்டுமல்ல இந்தப் பௌத்த சிங்களத்துவேஷம் வளர்ந்து வருகின்றது. சிறுபான்மையினர் பயந்து வாழுகின்றார் கள். அதுவும், குறிப்பாக வடகிழக்குப் பகுதி களில் இராணுவ முகாம்கள், முப்படையின ரால் பிரமாண்டமான அளவில் நிறுவப்பட் டுள்ளன. இவை எதற்கு? என்பது ஒரு பெரிய கேள்வி.

வடகிழக்குப் பகுதிகளில் உள்ள நிலங்கள் பறிபோகின்றன. புத்தர் சிலைகள் பௌத்தர்களே இல்லாத இடங்களில் நிறுவப் படுகின்றன. இப்பகுதிகளில் சிங்களக் குடி யேற்றம் பரவலாக அரச முப்படையின ருடைய அனுசரணையுடன் நடைபெறுவது வெள்ளிடைமலை. தமிழினம் அழிவை நோக்கியா செல்கின்றது?

மூன்றாவதாக அநீதி பகிரங்க மாகவே நடைபெறுகின்றது. இதன் எதி ரொலியாகவா மேல் நீதிமன்றத்தில் தீ பற்றியது? மரண தண்டனை பெற்றவனே பாராளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று, மறியல்சாலை வாகனத்தில் பாராளுமன்றம் வருகின்றான். நத்தார் இரவு திருவழிபாட் டில் பங்குகொண்டு ஆயரிடமே நன்மை பெற்று, அந்த ஆயர் முன்னிலையிலேயே படுகொலை செய்யப்பட்ட பரராஜசிங்கத்தின் கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவரைக் கைதுசெய்யப்பட்டுவிளக்கமறியலில்இருந்து கொண்டேபாராளுமன்றத்தேர்தலில்வெற்றி பெற்று, காவல்துறையினரின் பாதுகாப்போடு பாராளுமன்றம் சென்ற பிள்ளையான் இப் பொழுது விளக்க மறியலில் இல்லை. தானே நூற்றுக்கணக்கான இராணுவத்தின ரைக் கொலை செய்தவன் என்று பகிரங்க மாகவே மார்தட்டியவன். புலிகள் இயக்கத் தின் முன்னாள் முக்கிய தளபதிகளில் ஒருவ ரான கருணா இன்று இராஜாங்க அமைச்சர்.

**முரணாக...**

மரண தண்டனைக்கு மேலாகவே சிறைப்பட்டு பூசா முகாமில் சாகாமல் செத் துக் கொண்டிருக்கும் அரசியல் கைதிகளுக்கு நீதிமன்றத்தில் விசாரணையே இல்லை. நாட்டில் எங்கும் அரசியல் கைதிகளோ தமிழ்க் கைதிகளோ இல்லையென்று இன் றைய நீதி அமைச்சர் பகிரங்கமாகவே பொய் சொல்லுகின்றாரே!

வலிந்து காணாமல் ஆக்கப்பட் டோர் எங்கே என்பதற்கு எந்தப் பதிலும் அரசிடம் இல்லை. போரின் இறுதிக்கட்டத் தில் இராணுவத்தினரிடம் சரணடைந்தோர் எங்கே? அரசு ஒரு தசாப்த காலமாக மௌனம் சாதிப்பதேன்? இவர்களின் பெற்றோர்,மனைவியர், பிள்ளைகள் கண்ணீரோடு ஒரு வருடத்திற்கு மேலாக உண்ணாவிரதமிருந்து தங்கள் உறவுகள் எங்கே என்று தேடுகிறார்களே! இவர்களுக்கு நீதி கிடைக்குமா?

**ஒற்றுமையின்மை..**

இவ்வளவு நடந்தும் சிறுபான்மையினர் ஒன்று சேர்வார்களா? இவர்களை மேலும் பிரித்து தங்கள் சுய இலாபங்களுக்காக அரசியல் வாதிகள் தேர்த லில் போட்டியிடுகிறார்களே! எரியும் வீட்டில் சுருட்டுப்பத்த விளையும் இந்தப் போலித் தலைவர்களால்மக் களுக்கு நன்மை உண்டா? ஒரு இருண்ட காலத்திற்கு மேலும் உதாரணங்கள் தேவையா?



**நிழல்** - Shadow

இந்த நிழல் (Shadow) என்பது இன்னோர் வகை இருள். இது அகத்தே உள்ள இருள். தாயின் வயிற்றிலேயே ஏற்பட்ட காயங்கள், சிறு வயதில் அனு பவித்த கசப்பான நிகழ்வுள். இழப்புகளுக்கு வருந் தாத உளவளப் பிரச்சினைகள். வாலிபத்தில் ஏற்பட்ட நோவுகள், புரியாத்தன்மைகள், ஏற்றுக்கொள்ளப் படாமை, அவமானப்பட்டமை, குற்ற உணர்வுகள், பாலி யல் குழப்பங்கள், பாலியல் ரீதியாக துஷ்பிரயோகப் பட்டமை என்று நீளும் இந்தப் பட்டியல் அகத்தே ஒரு நிழலை (Shadow) உருவாக்கி விடுகின்றது. கார்ள் யுங் (Carl Jung) என்ற உளவியலாளர் இதை விரி வாக எடுத்துரைத்தார்.

எங்கள் அனைவருக்குமே இந்த நிழல் உண்டு. ஆனால் இந்த நிழல் எவ்வளவு ஆழமானது, தடிப்பானது, அகலமானது, நீளமானது என்பதுதான் கேள்வி. இந்த எனது நிழலை அடையாளங்கண்டு பெயரிட்டு அதில் இருந்து விடுபடவில்லையென்றால் மனித வளர்ச்சி வராது. இந்த மனித வளர்ச்சி இன்றி மனித ஆன்மீகம் பேசவே முடியாது. ஒருவேளை மதத்திற்குப்பின்னால்ஒழிந்துகொண்டு, ஒருபொய்யான என்னை உலகிற்குக் காட்டுவோம். இந்தப் பொய் யான நான் முகக் கவசங்கள் (இந்த முகக் கவசம் கொரோனாவிற்குப் போடும்படி பணிக்கப்பட்ட முகக் கவசமல்ல) என்னோடு ஒட்டிவிடுமானால் நான் ஒரு மன நோயாளி.

**அடிமைத்தனம்** ( Addiction)

இதைப்பற்றி சென்ற காவலனில் நான் இதே தலைப்பில் ஒரு கட்டுரை வரைந்துள்ளேன். நாமனைவருமே ஏதோ ஒன்றிற்கு அன்றேல் சில வற்றிற்கு அடிமைகளாகவே வாழ்ந்து வருகின்றோம். பெரும்பான்மையினருக்கு இது தெரிவதில்லை. தானே புகைத்தலுக்கு அடிமையாகி, தனது மகனை புகைக் காதே என்று புத்திமதி கூறும் தந்தையர்களை எனக் குத் தெரியும். இவை அனைத்துமே எங்கள் நிழலை வளர்க்கின்றது. இப்படிப்பட்ட ஒரு சூழலில்தான் இந்த 2020 நத்தார் திருநாளும், 2021 புதுவருடமும் வருகின்றன.

**இருள் நீங்குமா,?**
**நிழல் மறையுமா?**

"இந்தமுறை நத்தாரை எப்படிக் கொண் டாடலாம்?" "சாமப்பூசை" இருக்குமா? சரி பங்கில் பகலி லாவது பூசை இருக்குமா" இது தான் பெரும்பான்மை யானோரின் அங்கலாய்ப்பு. இருளை நீக்கவோ நிழலை எங்ஙனம் அழிப்பதோ என்று இவர்கள் கேட்க மாட்டார்கள். இதுதான் இவர்களின் அவல நிலை. திருச் சபையும் எப்படியாவது மக்களுக்குப் "பூசை" கொடுக்க வேண்டுமென்று .சில பங்குகளில் 'ரோக்கன்"கொடுக் கிறார்கள். 'பூசைக்கு'வருவதற்கு அதாவது "ரோக்கன்" பெற்றோர் குறிப்பிட்ட நேரத்தில் 'பூசைக்கு வரலாம் என்பது இந்த 'ரோக்கனின்' விளக்கம். சிலர் எப்படி யாவது 'சாமப்' பூசைகாண வேண்டும் என்று சொல்லி சாமத்தில் தொலைக்காட்சிக்கு முன்னாலிருந்து ஒளிபரப் பப்படும் 'பூசை'யைப் பார்ப்பார்கள். 'எழுந்தேற்ற' நேரம் தொலைக்காட்சிக்கு முன்னால் முழந்தாள் போட்டு 'பக்தி' யோடு 'என் ஆண்டவரே! என்தேவனே' என்று சொல்வார்கள்.

சில துறவற குழுமங்களில் கொறோனாக் காலத்தில் இவ்வாறு நடந்தது எனக்குத் தெரியும். இது மதப் பழக்கத்திற்கு ஏற்பட்ட அடிமைத்தனத்தின் வெளித்தோற்றம். உணர்வார்களா? சிந்திப்பார்களா? மனம் மாறுவார்களா?

**இருளில் ஓர் ஒளி**

இருளில் வாழ்ந்த மக்களுக்கு இயேசு ஒளி கொண்டு வந்தார். அடிமைத்தனத்தில் வாழ்ந்த மக்க ளுக்கு இயேசுவே விடுதலை அளிக்க வந்தார். இல்லை இயேசுவே ஒளியானார். இயேசுவே விடுதலையானார்.

இதை யோவான் நற்செய்தியில் 'அவரிடம் வாழ்வு இருந்தது: அவ்வாழ்வு மனிதருக்கு? ஒளியாய் இருந்தது. அந்த ஒளி இருளில் ஒளிர்ந்தது. இருள் அதன் மேல் வெற்றி கொள்ளவில்லை" (1:4-5) வாசக அன்பர்களே! மீண்டும் ஒரு முறை மேலுள்ள வாசகத்தைப் படியுங்கள். இதில் ஒரு பாரிய உண்மை உண்டு.

இயேசு தனது மலை உரையில் சொன்னார் "நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்" (மத் : 5-4) அதாவது, ஒளி உங்களுள் உள்ளது. ஆனால் சூழ லால் நாம் வளர்ந்த முறைகளினால் நாம் அகத்தே பிளவுபட்டதினால் (divided within) நாம் முக மூடிகள் போட்டு வாழப்பழகினதால், நாம் ஒரு பொய்யான என்னை வளர்த்ததினால் அந்த ஒளி மறைக்கப்பட்டுள்ளது, மூடப்பட்டுள்ளது. பௌத்தத்தில் சொல்லியது போல நாம் களி மண்ணினால் மெழுகப்பட்டுள்ளோம். (Covered with mud) இவ்வளவு நடந்தும், அந்த அகத்தே என்னோடு பிறந்த ஒளி (கடவுளின் சாயலில் உருவாகிய நாம் அகத்தே அந்தச் சாயலில்தான் உள்ளோம்) எந்தக் கொறோனாவினாலும், எந்தக் கொடிய அரசியலாலும், எந்த அரசியல் அரக்கர்களாலும் சாகடிக்க முடியாது. இது நம்பிக்கை தரும் ஒரு நற்செய்தி. எங்கள் அடிமைத்தனங்களிலிருந்து விடுதலை தரும் நற்செய்தி.

**கரவையூர்ச் செல்வம்**

**ஒளிரட்டும்**

அகத்தே உள்ள ஒளியால் புறத்தில் மெழுகப் பட்டிருக்கும் களி மண்ணைக் கரையுங்கள். நீங்கள் போட்டிருக்கும் முகமூடிகளைக் களையுங்கள். பொய்யான உன்னை விட்டு விடுங்கள். அகத்தே பிளவுபட்டிருக்கும் உங்களை ஒன்றிணையுங்கள். நான் என்ற மமதையை (ego) முற்றாக அழியுங்கள். அகத்தே மறைந்திருக்கும் ஒளி இருளில் இருந்து ஒளி பிரகாசிக்கட்டும். அந்த ஒளியை நோக்கி வாழ்வது தான் ஆன்மீகப் பயணம்.

**நிழலில் ஓர் ஒளி** (Light in the Shadow)

எம் அனைவருக்கும் ஒரு நிழல் உண்டு. எம்மில் அந்த நிழல் உண்டு. இந்த நிழலும் ஓர் அருளாகலாம். இந்த நிழல் என்ற சொல்லுக்குப் பல பொருள் உண்டு. இங்கு நான் குறிப்பிடும் நிழல் எனது அடிமனதில் புதைக்கப்பட் டுள்ள ஏற்றுக்கொள்ள முடியாத நிகழ்வுகள். (உதாரணம் : நிராகரிக்கப்பட்ட தன்மை, பாலியல் துஷ்பிரயோகம் போன் றவை) நான் வருந்தி விடபடாத இழப்புக்கள், உறவுகளால் ஏற்பட்ட நோவுகள், குற்ற மனப்பான்மை, நான் செய்த தவறுகள் எனது நோவுகள் என்று இந்தப் பட்டியல் நீளும்.

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

# மழை தூறிக்கொண்டேயிருந்தது…

ஞாயிற்றுக்கிழமை. மழை தூறிக்கொண்டே இருந்தது. “இண்டைக்குப் போக ஏலாது போல கிடக்கு, பேசாமல் நிப்போம்”சித்தியின்வார்த்தைகள் யதார்த்தம் பேசின.

பயணம் குறித்த கனவுகளோடு அணிந்து கொண்ட ஆடைகளில் சேறுபடுவதுபற்றி, எந்தக் கவலைகளும் என் பக்கத்து வீட்டுத் தங்கைகளுக்கு இல்லை.

என்ன மழையென்டாலும் கட்டாயம் போக வேண்டும் என்று, என்னைப் போலவே என் தங்கையும் முடிவோடு இருந்தாள்.

மழை தூறிக்கொண்டேயிருந்தது. வாழ்க்கையைப் போலவே மழைத்துளிகள் மிக அழகாக விழுந்து கொண்டேயிருந்தன.

சமைத்த உணவை வாளியில் போட்டு எடுத்துக் கொண்டு குடை பிடித்தபடி போய், எமது வாகனத்துக்குள் எல்லோரும் ஏறினோம். வியாபாரத்துக்குப் பயன்படுத்தும் வாகனம். கீழே பாய் விரித்தும், வாகனத்துக்குள் இருந்த பெட்டிகளின் மீதும் அமர்ந்தோம்.

கடற்கரை அந்தோனியார் கோயிலில் வாகனம் நின்றது. கொஞ்ச நேரம் எல்லாரும் மன்றாடினோம்.

மழை விட்டிருந்தது. கடற்கரையில் அலையோடு விளையாடினோம். சிப்பி பொறுக்கினான் தம்பி. புகைப்படம் எடுத்தாள் தங்கச்சி, கைகளை விரித்தபடி, தலையில் விரலால் கொம்பு வைத்தபடி, சிரித்தபடி புகைப்
படத்தில் அந்த அழகான தருணத்தை உறைய வைத்தோம். பசித்தது….

றஞ்சியம்மா, மகள், பேரப்பிள்ளைகள், குஞ்சக்கா இரண்டு பிள்ளைகள், அம்மா, நான், தங்கச்சி, தம்பியாக்கள் வட்டமா இருந்து சாப்பிட்டோம். எல்லாருடைய வாளியில் இருந்தும் ஒரு கைபடி உருண்டை. எல்லா உணவும் அவ்வளவு சுவையாக இருந்தது. மழைக்காற்று ஈரம் மனது முழுக்க நிறைந்து கொண்டிருந்தது. சோற்றுப் பருக்கைகளைப் போலவே சிரிப்பும் சந்தோசமும் அந்த முற்றமெங்கும் சிதறிக் கிடந்தது. வாழ்க்கையைப் போலவே கடலும் மிக அழகாக நீண்டுகொண்டேயிருந்தது.

அந்த ஆலமரத்தடியில் எல்லாரும் சிரித்துச் சிரித்துக் குடித்த தேனீரின் சுவை இன்னமும் நாவின் ஓரத்தில் இனித்துக்கொண்டே இருக்கிறது.

அடுத்த நாள், ஒழுங்கையால் நடந்து போகிறேன்.

வேலியால் எட்டிக் குஞ்சக்கா சொன்னாள், “அஜந்தன்! நேற்று எவ்வளவு சந்தோசமாக இருந்திச்சு. என்ர மனசு நிறைஞ்சிச்சு” உண்மையான புன்னகை ஒன்று முகத்தில் ஒட்டிக்கிடந்தது.

அதன்பிறகு மூன்று முறை இதே வார்த்தைகளை றஞ்சியம்மாவும், தங்கச்சியும், சித்தியும் சொல்லிக் கொண்டே இருந்தார்கள்.

“அவ்வளவு சந்தோசமாக இருந்திச்சு”. ஒரு அழகான ஞாபகத்தைச் செய்தோம்.

மழைத்தூறலுக்காக இந்தப் பயணம் நின்று போயிருந்தால் இந்த நாள் ஒருபோதும் வராமல்கூடப் போயிருக்கலாம்.

கருவறையில் இருந்து இறங்கிக் கல்லறைக்கு நடந்து போகிற கொஞ்சத் தூரம்தானே வாழ்க்கை.கொஞ்சம் இரசித்து இரசித்து வாழ்ந்து பார்க்கலாமே.

எனக்குத் தெரிந்த ஒரு குழந்தை அளவுக்கு மீறியே அழுதுகொண்டிருந்தாள், என்னிடம் சொல்வதற்கு அவளிடம் சில கதைகளும், சின்னக் கோபங்களும் இருந்தன. தொண்டைக்குழி வரை வந்த அழுகையை அடக்கிக் கொண்டு சொன்னாள், “நான் அப்பாட்ட கேட்டேன் அப்பா என்னை ஐஸ்கிறீம் குடிக்கக் கூட்டிக்கொண்டு போங்கோ”.

‘இப்ப நேரமில்லை” என்றார்.

“மின்மினிப் பூச்சிகள் போல மஞ்சள் விளக்கெரியும் எங்களூர் திருவிழாவுக்கு தோளிலே ஏற்றித் திருவிழா காட்டுங்கோ அப்பா” என்றேன்.

“வேலை இருக்கு” என்றார்.

“அப்பா எங்கட காரிலே சுற்றுலா போவமப்பா” என்றேன் – “பிறகு பார்ப்பம்” என்றார்.

கடைசியா கெஞ்சிக் கேட்டேன். அப்பாட்ட “அப்பா ஒரு நாள் என்னோடயும் தங்கச்சியோடயும் இருந்து விளையாடுங்கப்பா. உங்களோட பேசிச் சிரிச்சுக் கொண்டிருக்க எங்களுக்கு ஆசையா இருக்கப்பா” என்றேன்.

எப்போது நான் கேட்டாலும் “எனக்கு நேரமில்லை”. “தலைக்குமேல வேலை கிடக்கு”, “பிறகு பார்ப்போம்” என்று, எப்போதும் நேரமில்லாத எங்கட அப்பா முந்தநாள் வேகமாக வேலைக்குப் போனபோது வாகன விபத்தில் மரணித்துப் போனார்.

இனி ஒருபோதும் அப்பாவுக்கு நேரம் கிடைக்கப்போவதே இல்லை.

கன்னத்தில் வழிந்து கொண்டிருந்த அவள் கண் ணீரைத் துடைத்தேன். இரத்தத்தின் அடர்த்தி.

வாழ்க்கை என்பது எங்கோ தூரத்தில் இருக்கிறது என்று, வாழ்வைத் தள்ளிப்போடும் எம் புரிதல் எவ்வளவு தவறானது.



**அருட்பணி எஸ்.அஜந்தன்**

வாழ்க்கை ஒவ்வொரு நிமிடத்தின் சதையிலும் ஒழிந்து கிடக்கிறது.

ஒரு கோப்பை தேநீரைச் சுவைத்துக் குடிப்பது போல, வாழ்வின் ஒவ்வொரு துளியையும் இரசித்துச் சுவையுங்கள்.

“இப்பொழுதே நீங்கள் சந்தோசமாக இருங்கள். நீங்கள் நினைப்பதைவிடக் காலம் இன்னும் குறைவாகவே இருக்கிறது”

இதோ புதிய வருடம் ஒரு பூந்தோட்டம் போல மழையில் நனைந்து சிரிக்கிறது. வண்ணத்துப்பூச்சியின் உதடுகளோடு புறப்படுங்கள்.

வாழ்க்கை மிகச் சுவையானது…

# 2021 வளமுடன் வாழ்த்தி நலமுடன் வாழ்வோம்!

‘வணக்கம், நல் வாழ்த்துக்கள், தயவு செய்து, வளமுடன் வாழுங்கள், மன்னியுங்கள், நன்றி’ போன்ற சொற்றொடர்களை அடிக்கடி பிரயோகிப்போம். அண்மையில் நான் பேரூந்தில் பயணம் செய்தபொழுது அதிஸ்டவசமாக இரண்டு வயதுக் குழந்தை ஒன்று எனது மடியில் இடம் பிடித்துக் கொண்டது.

அப்போது அருகிருந்த 11 வயதுச் சிறுவன் தனது பேத்தியாரிடம் கேட்டான்: “பேள்சைப் பிள்ளைக்குக் கொடுக்கட்டா?”பேத்தி “ஆம்” என்று தலையசைத்தார்.

ஒவ்வொன்றாகப் பக்குவமாகப் பரிமாறியவன் ஈற்றில் தனக்கென்று எதையும் வைத்திராது அனைத்தையுமே தாரை வார்த்துக் கொடுத்தான். இந்தச் சிறுவனின் தாராளமான மனப்பான்மை என்னைப் பெரிதும் கவர்ந்தது. சிறுவர்கள் நல்ல பழக்க வழக்கங்களில் வேரூன்றுவதற்கு பெற்றோர், பெரியோர், ஆசிரியர், நண்பர்கள் போன்றோர் நல்ல வழிகாட்டிகளாக அமைவது, பிறரை உற்சாகமூட்டி வாழ்வது இன்று அவசியமாகின்றது.

நல் வாழ்வியல் இயந்திரம்

“நல்ல பிள்ளை, நல்ல பிள்ளை” என்று அடிக்கடி பேசி ஆளை ஆள் உற்சாகப்படுத்துவோம்.

**நல்லதையே பார்ப்போம்..**

**நல்லதையே கேட்போம்.**

**நல்லதையே பேசுவோம்.**

**நல்லதையே சிந்திப்போம்.**

**நல்லதையே எழுதுவோம்.**

**நல்லதையே வாசிப்போம்.**

**நல்லதையே மனனம் செய்வோம்.**

இவ்வாறு நல்லபடி வாழ்வதற்கு மேற்படி ஏழு திறன்களை அனுசரிப்போம். நல்லபடி வாழ்வதற்கான நல்ல பழக்கங்களை நாமே நாளாந்தம் உருவாக்கிக் கொள்வோம். மன உருவாக்கத்தில் உள்ளக சக்தி பெரும் பங்கு வகிக்கின்றது. நல்ல உடற்பாங்கான தன்மை, நல்ல பழக்க வழக்கங்கள், நல்ல நட்புடமை, சீரான நடையுடை பாவனைகள் போன்றவற்றை நாளாந்தம் மெருகூட்டுவோம். போலிமுகங்களை வெளிக்காட்டாது, நாணயமாக, நேர்மையாக வாழ்ந்து காட்டுவோம்.

நாங்கள் நல்லவர்கள் என்பதைச் சொல்லாலும் செயலாலும் பதிவு செய்வோம். நல்ல சிந்தனைகளை நாள்தோறும் வளர்த்து, பிறருடன் பகிர்ந்து கொள்வோம். நல்ல உறவுப் பாலத்தைக் கட்டி எழுப்ப, சிறப்பான உறவுப் பொறிகளை முன்னெடுப்போம். எமது நல்லெண்ண வங்கியில் நிலைவைப்பை மேற்கொண்டு, நிறையின்பம் பெறுவோம்.

**அருட்கலாநிதி வின்சன் பற்றிக் அமதி**

# கிறிஸ்து பிறப்பு நம் வாழ்வில்…?



கிறிஸ்மஸ் என்றால் என்னவென்று ஒரு குழந்தையிடம் கேட்டேன்.” புது ஆடை உடுத்தி கேக் வெட்டிச்சாப்பிடுவது “ என்று மகிழ்ச்சியோடு கூறியது. சற்று வளர்ந்தஇளைஞனிடம் கேட்டேன். அவன் கூறினான். “புது ஆடை, அணிந்து இரவு திருப்பலிக்குச் சென்று நண்பர்களுடன் ஜாலியாகப் பேசி நண்பர்களின் வீடுகளுக்குச் சென்று நேரத்தைக் கழிப்பது. இளம் குடும்பப் பெண்ணிடம் கேட்டேன். ‘இந்த முறை கிறிஸ்மஸ் மாதிரியே இல்லை. புதுப் புடவை எடுக்கல்ல, கேக் அடிக்கல்ல, வீட்டிற்குப் பெயின்ற் அடிக்கல்ல என்று புலம்பினார்.” ஒரு நடுத்தரக் குடும்பத்தலைவரிடம் கேட்டேன். அவர் கூறினார் ,” குடும்பத்தோடு முழுத் திருப்பலியில் பங்கேற்று அன்று ஒரு நாளாவது மனைவி மக்களோடு முகமலர்ச்சியோடு உணவருந்தி உரையாடி மகிழ்வது.” ஒரு வயதான பெரியவர் கூறியது .” என்ர அனுபவத்தில் இந்த மாதிரியான காலத்தைச் சந்தித்ததும் இல்ல, கிறிஸ்மஸ் கொண்டாடாமல் இருந்ததும் இல்ல என்றார் கவலையுடன்.” மேற்கூறப்பட்டவை போல பலவிதமான மாறுபட்ட உணர்வுகளைக் கொண்டவர்களாக , நாம் இந்த கிறிஸ்மஸ் தினத்தைக் கொண்டாடுகின்றோம். பொதுவாக கிறிஸ்மஸ் என்றாலே, புத்தாடைகளுக்கும், பலவித உணவு வகைகளுக்கும், கேக்குகளுக்கும், குடில்களுக்கும் , வண்ண விளக்குகளுமே, நமது தயாரிப்பாக அமைந்து விடுகின்றது. கிறிஸ்து பிறப்பு உண்மையான மறைபொருளால் ஈர்க்கப் படாமல், உலகு சார்ந்த பொருட்களால் ஈர்க்கப்படுவது தான் இன்றைய காலத்தின் கட்டாயமாக மாறிவிட்டது.

கிறிஸ்மஸ் என்றாலே மகிழ்ச்சியின் காலம். அன்பின் காலம், பகிர்வின் நேரம். பாவிகளான நம்மை மீட்கக் கடவுள் மனிதனாகக் கன்னிமரியாளிடம் பிறந்தகாலம். விண்ணையும் மண்ணையும் படைத்தவர். நம்மோடு வாழ்பவராக இம்மானுவேல் ஆக, நம் மத்தியில் தோன்றிய புனிதநேரம். இதுவே கிறிஸ்மஸ் பெருவிழாவின் மறையுண்மையும் ஆகும். இளைப்பாறிய திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள் கிறிஸ்து பிறப்புப் பெருவிழா திருப்பலி ஒன்றில், “இன்றுகிறிஸ்மஸ் ஒரு வியாபார மாயமான கொண்டாட்டமாக மாறி விட்டது. அதன் பிரகாசமான விளக்குகள் கடவுளின் தாழ்ச்சியின் மறையுண்மையை மறைக்கின்றன. ஆனால் நாம் தாழ்ச்சியுடனும், எளிமையாகவும் வாழ அழைக்கப் படுகின்றோம்” என்றார்.

இயேசுவின் பிறப்பு படித்தவர்களுக்கும் படிக்காதவர்களுக்கும் வெளிப்படுத்தப்பட்டது. எங்களுக்கு என்ன தெரியும் என்று வாழ்ந்த தாழ்ச்சியுள்ளம் கொண்ட எளியவர்களுக்கும், (லூக் 2:10) ஏழைகளுக்கும் எங்களுக்கு எல்லாம் தெரியாது என்கிற… ஞானிகளுக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. அதிகாரம் படைத்தவர்களுக்கும், அடக்கு முறைகளைக் கடைப்பிடித்தவர்களுக்கும், எல்லாம் எங்களுக்கு தெரியும், இந்த உலகம் என்னால் தான் இயங்குகின்றது என்று தற்பெருமையிலும் அதிகாரவெறியிலும், வாழ்ந்தவர்களுக்குக் கலக்கத்தையும் அச்சத்தையும் எற்படுத்தியது.

நாம் வாழும் உலகமும், நாடும் பல்வேறுவிதமான அழுத்தங்களுக்கு உள்ளாக்கப்பட்டும், ஒரு புறம் கொரோனாவின் தாக்குதல்களுக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் தடுமாறிய நிலையும் மறுபுறம், புயல் மற்றும் இயற்கை அனர்த்தங்களால் வாடிப்போன நம் உறவுகளுக்கு உதவி செய்யத் தாமதித்து வாழும் நிலையும் அதிகரித்துவிட்டது. இவ்வாறான சுழ்நிலையில் கிறிஸ்து பிறப்பின் உள்ளார்ந்த உண்மையை சவால்கள் நிறைந்த நம் வாழ்வில் உள்வாங்க முயல்வோம். கிறிஸ்து பிறப்பின் மகிழ்ச்சி , அன்பிலும் பகிர்விலும் வெளிப்படுத்தப் படவேண்டும். புனித சிறுமலர் தெரேசா தமது வாழ்வின் அனுபவத்தில் கூறியவை “என்னை வழிநடத்தும் இயேசு என்செயல்களைக்கணக்கிடக்கற்றுக்கொடுப்பதில்லை. ஆனால் எல்லாவற்றையும் அன்புடன் செய்யக் கற்றுக் கொடுக்கின்றார். எனவே நாம் செய்யும் ஆடம்பரமான வீண் செலவுகளைக் குறைத்துக் கொண்டு கடவுள் எவ்வாறு ஏழை எளியவர்களைத் தேடித் தம்மையே தாழ்த்தி இவ்வுலகிற்கு வந்தாரோ அவரின் வாழ்வின் உயர் நோக்கத்தை நாமும் பின்பற்றி நம்முடன் வாழும் ஏழை எளியவரின் நிலையை அறிந்து நம்மால் இயன்ற உதவிகளைச் செய்யமுற்படுவோம். அப்போது அன்று பெத்லேகம் ஊரில் மாட்டு தொழுவத்தில் பிறந்த அதே இயேசு பாலன் இன்று நம் உள்ளம் என்னும் இதயக் குடிலில் நிச்சயம் பிறப்பார். நம் குடும்பங்களையும், சமூகத்தையும், நாட்டையும் தமது அன்பாலும், இரக்கத்தாலும் பாதுகாத்து நம்மை வழிநடத்துவார் “எந்த ஒரு மனிதர் அடுத்தவருடைய பசியை நீக்குகின்றாரோ அந்த மனிதருடைய பசி தானே போய்விடும்”. எனவே நாமும் காலத்தின் நிலை அறிந்து அர்த்தமுள்ள விதத்தில் கிறிஸ்துபிறப்பைக் கொண்டாட முற்படுவோம்.

**அருட்பணி ஆ. நிர்மலராஜ் செதா**

# வாழ்வதற்காகக் கற்றல்

பப்சி மரியதாசன்
விரிவுரையாளர்
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி




வாழ்வு என்பது இறைவன் தந்த மாபெரும் கொடை. கொடை என்பது அன்பின் நிமித்தம் ஒருவர் மற்றொருவருக்கு வழங்குவது. ஆக இறைவன் மனிதன் மேற்கொண்ட அன்பின் நிமித்தம் வாழ்வு என்னும் கொடையை நமக்கு வழங்கினார். ஆனால் மனிதன் பேரவாக் கொண்டான். அதனால் பெருந்துயர் அடைந்தான். படைத்தவனை வென்றிடப் பல முயற்சி மேற்கொண்டான். விளைவு பேரழிவாகப் பேரிடராக மனித குலத் தின் மாண்பு குலைந்து போனது. வெள்ளப்பெருக்கு, எரிமலைக் குமுறல், சுனாமி, தொற்றும் நோய்கள், தொற்றா நோய்கள் எனப் பல அவ்வப்போது வரலாறு நெடுகிலும் அகிலத்தில் தோன்றின. அமைதியைக் களைந்தன.

இது மனித குலத்திற்கு ஒன்றும் புதில்ல. பூமியின் முகத்தில், சுழற்சியில் ஒன்றாய் பேரிடர் காலம் மீண்டும் மீண்டும் வந்து போயுள்ளது. குப்பி விளக்கில் கற்றலும், குடிசையில் வாழ்தலும், குட்டுக்கள் பல தலைமீது வீழ்ந்தபோதும் குனிந்து போகாமல் நிமிர்ந்தெழுந்த காலங்கள் மனித குலம் நடந்து வந்த வரலாற்றுப் பாதையில் ஏராளம்... ஏராளம்.

**கற்றலில் கவனம் இழக்கும் பிள்ளைகளே!**

கடந்து வந்த கற்றோரின் பாதைகள் எவற்றிலும் மலர்கள் இல்லை. கற்களும் முட்களும் மட்டும் தான். ஆனால் கடந்து வந்தோம் என்பது எமக்குள்ள கவர்ச்சியான செய்தி.இளையோரே! தவித்திருக்கும் உங்களுக்குச் சில வரிகள் கற்றலுக்கு நான்கு தூண்கள் என நவீன கல்விச் செல்நெறி நமக்குச் சொல்கிறது.

**அறிவதற்காகக் கல்** (Learn to know)
**செய்வதற்காகக் கல்** (Learn to do)
**இருப்பதற்காகக் கல்** (Learn to be)
**இணைந்து வாழ்வதற்காகக் கல்** (Learn together)

அறிவதற்காய் ஆசிரியரை நம்பியிருந்த காலம் என்றோ மலையேறி விட்டது. அறிவு எங்கள் கைகளுக்குள் செவ்வகமாய் அடங்கிப் போய்க் கிடக்கிறது. விரல் நுனியில் அறிவுக் களஞ்சியம் தகவல்களாய்க் கொட்டித் திறக்கிறது. எதையும் கற்கலாம். எப்போதும் கற்கலாம். தனித்திருந்தும், கூடியிருந்தும், படுத்திருந்தும், எழுந்திருந்தும், தொலைவில் இருந்தும்கூட அறிவை அரை நொடியில் பெற்றுக்கொள்ள எம்மால் முடிகிறதல்லவா, வாழ்நாள் முழுவதும் பரந்த அறிவைப்பெற இயலுகின்றது. பிறகென்ன அறிவுத் தகவல்களை அற்புதமாய்ப் பெற்றிட ஒரு தூண் எம் கையருகில் உற்சாகம் கொண்டிட இது போதும் அல்லவா?

அறிவுத் தகவல்களைப் பெறுவது மட்டுமா கல்வி? இல்லை, அறிவைப் பயன்படுத்தி ஆக்குவது கற்றல். தனித்திருந்து, அறிவை ஆழப்படுத்தி, தன் மன உணர்வுகளை அதன்மேல்செலுத்திப்பகுத்து நோக்க, நோக்க எனக்குள் இருக்கும் புத்தாக்கச் சிந்தனை விழித்துக்கொள்ளும். அதனைச் செயற்படுத்தல் ஒரு கற்றல் ஆகும். கிடைக்கும் வாய்ப்பான வளங்களைப் பயன்படுத்தி ஆக்கச் செயலில் ஈடுபட என்னால் முடியாதா என்ன? ஆகவே அச்சம் செய்ய முனைந்திடுதல் காலம் கடந்தும் நிலைத்து இருக்கும். மற்றொரு தூண் அல்லவா.

**அறிவைப் பெறுதலும், ஆற்றலை வெளிப்படுத்தலும் மட்டுமா கல்வி?**

அல்லவே. எனது இருப்பை உறுதிப்படுத்திக் கொள்வதும் கற்றலே. எனவே, எனது ஆளுமையை நானே செதுக்கிக் கொள்வேன். என்னை நானே சுய ஆய்விற்கு உட்படுத்திக் கொள்ளுதல், சுய அன்பு மற்றும் தன்னம்பிக்கையை வளர்த்தெடுத்தல், சமூக மதிப்பீடுகளையும் விழுமியங்களையும் விசாரணைக்கு உட்படுத்தல் என்பவற்றைச் செய்வதனூடாக எனது மதிப்பீடுகளை நான் வாழும் சூழலில் பதிந்து கொள்ளுதல் என்னை நிலைத்திருக்கச் செய்யும் என்பதை உணர்வேன். கிடைத்த காலத்தைச் கிரமமாய்ப் பயன்பெறுவேன். மூன்றாவது தூணாக முனைந்து செயற்படுவேன்.

**எனக்குள் மட்டும் கல்வியா?**

நான் ஓர் சமூகப் பிராணி என் பதை உணர்கிறேன். எனவே, சக மனிதனுடன் இணைந்துவாழ விளைகிறேன். அதன் இனிமை எனக்குரியதாக மட்டுமல்ல, சக மனிதனையும் மகிழ்விக்கின்றது. எனது ஆரோக்கியமான ஆளுமையால் என் சக மனிதனும் அவனது ஆளுமையால் நானும் பயன் பல பெற்று ஆரோக்கியமான சமூக வாழ்விற்கு உந்து விசையாக அமைய, நான்காவது தூணும் நமதாகின்றது.

**கொவிட் - 19**
**எம்மைக் குழப்புகிறதா?**

சுனாமி, நிலநடுக்கம், எரிமலைச் சீறல், பெருவெள்ளம்,யுத்தம், சாதிய அடக்குமுறை எனப் பல இயற்கை விபத்து மற்றும் மனித அழிவுகளால் அன் றாடம் வாழ்வில் சவால்களை எதிர்நோக்கும் மக்கள் இனங்களையும் நாடுகளையும் ஓர்கணம் நினைவிருத்திப் பாருங்கள். அவை அவ்வரலாற்றின் இயல்புகளுடன் இணைந்து வாழக் கற்றுக் கொள்ளவில்லையா?

- 11 வருடங்களின் முன்பு வரை 30 வருடப் போரில் வாழ்ந்த எம்மினத்தவர் இடர்கடந்து இன்றும் வாழவில்லையா?
- சாதியக் கொடுமைகளால் தாழ்த்தப்பட்டு அன்றாடம் அவமானங்களைச் சந்தித்த சமூகங்கள் போராடித் தன் உரிமைகளைப் பெறவில்லையா?
- அடிமை விலங்குகளாய் கருதப்பட்ட கறுப்பினம் அமெரிக்க ஜனாதிபதி ஒருவரைத் தரவில்லையா?
- மேற்சட்டை போட்டால் வரியிறுக்கும் நிலை கடந்து பெண்ணினம் தன் முலையறுத்துப் போராடி மேல் நிலையை அடையவில்லையா?

**அறிவோம், செய்வோம்,**
**நிலைத்திருப்போம், இணைந்து**
**வாழ்வோம். எந்நிலையிலும் இது**
**எம்மால் கூடும். இளைஞனே!**
**எங்கோ படித்தது இங்கே**
**உன்னால் பறக்க முடியவில்லையா?**
**ஓடு உன்னால் ஓட முடியவில்**
**லையா? நட உன்னால் நடக்க**
**முடியவில்லையா? தவழ்ந்து செல்**
**ஆனால் முன்னோக்கிய நகர்வே**
**உனது குறிக்கோளாய் இருக்கட்டும்.**

அடுத்த வினாடி ஆயிரம் அதிசயங்கள் காத்திருக்கும். இப் புவியில் அன்றாடம் வாழ்வதே கற்றல். ஆம் **வாழ்வதற்காகக் கல்.**

---

# கடவுளின் கருணையா? கையடக்கத் தொலைபேசியா..?



இன்றைய உலகத்தில் மனிதர்களின் நடைமுறைகளை அவதானிக்கும் போது, நாம் கலியுகத்தில் வா ழ்கிறோமா எனச் சிந்திக்கத் தூண்டுகின்றது. அந்த அளவுக்கு விஞ்ஞானம் வளர்ச்சி பெற்று, மெய்ஞானம் மழுங்கடிக்கப்பட்டு தொழில்நுட்ப முன்னேற்றங்கள் உயர்ச்சி பெற்று, பிறரன்புப் பணிகள் ஓரங்கட்டப்பட்டு இன்றைய மனித வாழ்க்கை முறைகள் ஓடிக்கொண்டிருக்கின்றன.

ஒருவன் கிழிந்த ஆடையை அணிந்திருந்தால், அவன் ஏழை. அதே வேளை ஆடைகளைக் கிழித்துப்போட்டு அணிந்தால் அது நாகரிகம். இன்றைய காலத்தில் மனிதன், கணனி, மடிக்கணனி, கையில் இருக்கும் தொலைபேசியைப் பார்த்துத்தான் சிரிக்கிறார்கள். பக்கத்தில் இருக்கும் மனிதனைப் பார்த்துச் சிரிக்க மறுக்கின்றான். எப்படி இருக்கின்றது மனித நேயப் பிறரன்பு.

இன்று எல்லோர் கைகளிலும் தொலைபேசிகள் - டயலொக், மொபிற்றல், எயாடெல் ... என்று எத்தனையோ அலைவரிசைகள்

இன்றைய காலத்தின் கண்ணாடியில் முகம் பார்ப்பது குறைவாகி விட்டது. முகப்புத்தகத்திலும் (Face book), ஸ்கைப்பிலும் (Skype) தான் முகம் பார்க்கிறார்கள். இது இன்றைய நாகரீகம்.

படைத்த இறைவனையே ஓரம் கட்டி விட்டோம். ஒரு பெரியவர் தினமும் வேலைக்குச் செல்வதற்கு முன் இறை வேண்டுதல் செய்வது வழமை. ஒரு நான் வேலைக்குப் போகமுன் இறை வேண்டுதல் செய்வதை மறந்து விட்டார். இடைவழியில் போகும்போதுதான் ஞாபகம் வந்தது. இருப்பினும் வீட்டிற்குத் திரும்பிய பின் அதைப் பார்த்துக்கொள்ளலாம் எனத் தம்மையே சமாதானப் படுத்தித் தொடர்ந்து பயணம் செய்தபோது தொலைபேசியை வீட்டிலே விட்டு வந்தது நினைவுக்கு வந்தது. என்ன செய்திருப்பார் என நீங்களே யூகித்துக் கொள்ளுங்கள். நிச்சய மாக உடனே வீட்டிற்குத் திரும்பியிருப்பார்.

இறைவனுக்கும், மனிதனுக்கும் அலைவரிசை உண்டு இதில் 73 அலைவரிசைகள் உண்டு. அது தான் பரிசுத்த வேதாகமம். இறை வன் நம்மோடு தொடர்பில் இருக்க விரும்புகிறார். நாமோ உலகத்தோடு தொடர்பில் இருக்க விரும்புகிறோம். இப்படியாயின் இறைவனின் பிள்ளைகளாக எப்படி வாழமுடியும்? இறை வார்த்தையை எமது நாளாந்த வாழ்வின்போது சிந்தித்துத் தியானித்து உண்மைக் கிறிஸ்தவச் சீடத்துவப் பணியில் வாழ, வளர மனித அவதாரம் எடுத்து வந்த இறைமகன் இயேசுவின் போதனைகளை எமது வாழ்வாக்க வேண்டும்.

நாம் இறைவனோடு தொடர்பிலிருக்க வழிகாட்டுவதுதான் இறை வார்த்தை. அதேவேளை எமது தொடர்புகள் உலகத்தோடுதான். இறைவனின் தொடர்பு எப்போதும் எம்மோடு இருக்கும்.

ஏதோ ஒருவகையில் தவறுகள் நடந்து கொண்டிருக்கின்றன. இறைவனை விட்டு மனிதன் தூர விலகிச் செல்கின்றார் என்பது மட்டும் புரிகிறது. அது எங்க கொண்டுபோய்ச் சேர்க்கும் என்பதை எதிர்காலம் உணர்த்தப்போகின்றது. நாம் தினமும் இயற்கை வளங்களைக் கண்டு மகிழ்கின்றோம். அதேவளை இவற்றிற்கெல்லாம் காரணகர்த்தா யார்? அவரின் அனுமதியின்றி எதுவுமே அசையாது. எனவே, ஆக்கும், அழிக்கும் அதைக்காக்கும் வல்லமை கொண்ட இறைவனோடு தொடர்பிலிருப்போம்.

ம.சூசைமுத்து

---

# இளையோர் காவியம்

" நிஜாயங்கள்
வாய் மூடுமோ
தெய்வம் இல்லை என்று
போகுமோ"
புதுக் கவிதைகளின் தாத்தா
கவிஞர் மு.மேத்தாவின்
வரிகள்
"நிஜாயங்கள்
வாய்மூடி விட்டது
தெய்வம் இல்லை" என்று

ஆனால்
கடவுள் இருக்கிறார்
உணர்த்திக் கொண்டிருக்கிறது
சமகாலம்

நீ இறந்துபோன
ஆத்மாக்களை
இறக்காதபடி கவனி நெஞ்சில்
மனித வாழ்க்கையில்
நிரந்தரம் இல்லை
மரணம் கூட

உன் உணர்வுகளைக் கூட
கைது செய்ய நினைக்கிறது
அதிகாரத்தின் நப்பாசை

உயிர்களை மதிக்காததால்
இறந்து கொண்டிருக்கிறது உலகம்

மனம்போல் வாழலாம் என்றல்ல
மனம் திரும்பினால் தான்
வாழலாம்

எவ்வளவு நல்ல அறிவிருந்தும்
நல்ல மனம் இல்லாவிட்டால்
அழிவு

இப்போது இருக்கிற சமாதானம்
உயிர்களை அழித்துவிட்டு
கட்டியிருக்கிறது
வெள்ளை வேட்டி

நீ
உயிர்களை வாழ வைக்கிற
சமாதானத்தை உருவாக்கு..

உயிரோவியன்

(தொடரும்)

# மீட்பரான வாழ்வில் மீட்பரின் வருகை

**"காரிருளில் நடந்து வந்த மக்கள்
பேரொளியைக் கண்டார்கள்
சாவின் நிழல் சூழ்ந்துள்ள
நாட்டில் குடியிருப்போர் மேல்
சுடர் ஒளி உதித்தது" (எசா. 9:2)**

ஆதாமால் உடைந்த உறவிற்குப் பாலமமைக்க
ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே அவனியில்
ஆண்டவராம் யாவே இஸ்ராயேலருடனிருந்தே
ஆணித்தரமாய் நிறைவேற்றிய உடன்படிக்கையே
ஆண்டவன் இயேசு மனிதருள் உறையும் மகிமையானது.

காலத்தை வென்ற கடவுள் காலநிறைவில்
கன்னியின் கருவிலே தம் மகனைக் கருவாக்கி
காரிருள் களையும் கலங்கரை ஒளியாய்
காருண்ணிய மைந்தனாய் புவியில் உதித்த
கருணைமிகு பொன்னாளே கிறிஸ்மஸ்!

காலத்தின் குறிகளால் அன்று பேசியவர்
ஞாலத்தின் நெறிகளால் இன்று பேசுகிறார்
விந்தைமிகு உலகிற்கு வியத்தகு ஆலோசகராய்
பந்தைய அரசுகளுக்குப் பரிவே பலமென்ற அரசனாய்
நிந்தைகளகற்றும் நீதியுள்ள தளிராய்ப் பேசுகின்றார்.

பண்பாடுகள் பாதை மாறித் தடம் புரண்டதில்
தண்ணொளி பரப்பும் தார்மீகம் தகர்ந்து வன்மை வெடிக்க
கண்ணுக்குப் புலப்படாக் கொரோனாவின் தாண்டவம்
மண்ணுலகோர் பலருக்கு மரண ஓலையாய் மாறிட
விண்ணுலகம் அனுப்பும் செய்மதியானதே எம் நிலை

உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சிமை
உலகில் நல்மனத்தோர்க்கு அமைதி
உள்ளத் தூய்மையுடன் வானவர் பாடிய
உன்னத கீதம் வெட்டவெளி இடையர்க்கல்ல
உள்ளறைக்குள் வாடும் எம்மவர்க்கும் கேட்குமோ?

இணையவழி வாழ்வுப் பொறியில் சிக்கிய மனிதன்
இணையற்ற இறைவனின் பொன் நெறி மறந்தான்.

இறையுறவின் இடைவெளி அதிகமானதாலோ
இடைவெளி பேணும் வாழ்வியலுக்குள் அகப்பட்டான்
இடையறா இன்னல்களும் வளைத்தனவே
வலையமைப்பாய்

பாவசங்கீர்த்தனத் தொட்டியை அணுகிடோம்
பாவக்கிருமிகள் களையும் எண்ணமற்று
பாவம் மனிதன், இன்று தொட்டதனைத்தும் கிருமி
பாரில் பரிதவித்தவரைக் கைகழுவி விட்டான்
பாரில் மனிதன் கைகள் கழுவியே களைத்திட்டான்.

முகத்தில் மலரும் புன்னகை பலருக்கு மருந்தாகும்
அகத்தில் ஆணவமெழ முகத்தையே திருப்பினோம்
முகக் கவசத்துடன் மூச்சுத்திணற –
வாழும் நிலை இன்று நகர வாழ்வே சிறந்ததென
அடுக்கினோம் மாடிகளை
நகரவே முடியாத முடக்கலால் உடைகின்றன மனங்கள்

மற்றோர் துன்பத்தை எட்டியே பார்க்கவில்லை
தொற்றால் துவண்டு எட்டியே நிற்கின்றோம்
கற்றுணர்ந்தும் நோக்கிலார் பற்றற்ற வாழ்வை
பற்றுடன் வாழ்ந்தோரே எம்மைப் பற்றகற்ற
பற்றுகின்றோம் பாராளும் மீட்பரே நின்பாதமதை

மீட்டரான வாழ்வில் மீளாத்துயருடன்
மீட்பரே உம் வரவிற்காய்க் காத்துள்ளோம்
மீண்டெழுந்து உலகோர் நலமுடன் வாழ்ந்திட
மாண்டிட்ட எம் நம்பிக்கையும் நங்கூரமாகிட
மின்னிடும் விடியலாய் மீட்டிடும் மருத்துவராய்
மண்ணிலே பிறந்திடு பாலகா!
மனங்கள் எல்லாம் மகிழ்ந்தே வாழ்த்திடுமே!

**S.M.வரோறன்ஸ்
(இளவாலை)**



## எனக்கென்று இடமுண்டோ...



அன்றொரு நாள்
மனிதனாய் பிறந்ததையிட்டு
என்னுள்ளே மகிழ்ந்தேன்
மாண்புயர் படைப்பென
என் அன்பை எடுத்துரைத்தேன்

இன்றைய காலத்தில்
அர்த்தமற்ற பேச்சுக்கள்
போலியான சிரிப்புக்கள்
பொய்யான வாக்குறுதிகள்
உறுதியற்ற வாழ்க்கை நிலை

வாழ்க்கைச் செலவில் அல்லாட்டம்
வாடி வதங்கும் திண்டாட்டம்
கற்றவரோ பண ஆசை கொண்டார்
சுற்றவரோ துரோகத்தை விரும்பினார்

இங்கு தானா நீர்
பிறக்கப் போகின்றீர்
பிறக்கத் தான் வேண்டும்
பாலனாக அன்று
உலகையே மாற்றும்
வீரனாய்...

**லோமிதரன்
புனித மடுத்தீனார் சிறுமடம்**

## சிலுவையோடு வந்திடு

அரக்கர்களும் அநீதியும்
இன்று தலைதூக்கி
மாய வலைக்குள் கிடக்கும்
எம் உலகிலே
நீ வந்து பிறப்பாயாயின்
சிலுவையும் கொண்டுவா- ஏனெனில்
உன்னைத் தாலாட்ட மரியாளும்
இங்கு இல்லை
உன்னைக் காப்பாற்ற சூசையும்
இங்கு இல்லை - ஆனால்
உன்னைக் காட்டிக்கொடுக்க யூதாஸ்
இங்கு உள்ளான்
உன்னைச் சிலுவையில் அறைய
பிலாத்து.. ஏரோது...
எனப் பட்டியல் நீள்கிறது
அதனால் நீ சிலுவையோடு
வந்து பிறந்திடு...

**கோ.சாருஜன்
புதுக்குடியிருப்பு**

## முடியாது....? முடியும்

வாடி நலிந்தோருக்கு
வானில் வெளிச்சம்
வாள் வெள்ளி உச்சம்
துரோகக் துர்க்குணமுள்ள
எதிராளிகள் அச்சம்
திருவருகைக் காலம்
அரங்கேறும் திருவுளம்
அமைதியின் தூதனாய்...
மாமரி மடியில்
பிறந்தார் பாலனாய்...
இறையன்புக்கு
அடிமையான
ஏழ்மை, எளியவர்கள்
வாழ்க்கையில் மகிழ்ச்சி
திருவாக்கு மனுப்பேசும்
மானிடர்களால்
மட்டும் முடியும்...
மகிழ்ச்சியை மனதோடு
வாழ... .முடியும்

வருடம் தோறும்
வருவது கிறிஸ்மஸ்
வழமையாக வரவேற்கின்றோம்
இல்லத்திலா...? உள்ளத்திலா...?
என்ன மாற்றம் கண்டோம்..?
இன்று வரை

அறவாழ்வு
இல்லறம் தொலைத்து.
வேத அன்பு, பிறரன்பு
மெய் மறை வழி மறந்து
மறைநெறிக்கு நடவாமல்
வாழுகின்றாய்...?
நன்நெறி தவறி
வாழும் நீ
பிறவாது இருப்பது
எனக்கும் உனக்கும் நலம்
யாதெனில்
பிறந்தால்
தாழ்ச்சியோடு
மனசாட்சியோடு
நன்றியறிதலுள்ளவனாய்... வாழ
பாலனாய்... நீ மாறா விட்டால்
நித்திய பேரின்ப இல்லம்,
உள்ளம் நுழைய முடியாது.

**திரு.S.B.றீற்றர்போல்
யாழ்ப்பாணம்**

## மதத்தின் மதத்தை மிதித்து மனிதத்தை மதித்தவன் ....



அவன் ஒரு ஏழை
அவன் ஒரு தொழிலாளி
அவன் ஒரு சாதாரணன்..
உன் எதிரிலேயே
தெருவில் அலைந்து திரியும்
வழிப்போக்கன்..!

மாளிகையும் மஞ்சள்
விளக்குகளும்
மல்லிகை மெத்தையும் மஞ்சமும்
கொஞ்சமும் தேவையில்லை அவனுக்கு...!

நொறுங்கி விட்ட இதயங்களை
பொறுக்கிச் சேர்க்க...!

பிரிந்து விட்ட மனங்களை
இணைத்துச் சேர்க்க..!

இனமென்றும்
மொழியென்றும்
வீடென்றும் நாடென்றும்
மதமென்றும் ...
கருகிய மனங்களைக்
கட்டிக் கோர்க்க..!
வருகிறான் மீண்டும்....

வாழ்க்கைச் சக்கரத்தில் சிக்குண்டு
கிழிந்து நைந்த கந்தலாடை மனங்களால்
படுக்கை விரிப்போம்..!

பிறக்க இடமின்றி
ஒவ்வொரு கதவாகத் தட்டிய படியே..
வருகிறான்....
திறந்து வைப்போம் நம் மனக் கதவுகளை...!
மீண்டும் பிறக்கட்டும் மனிதம் - நம்
மனங்களில்....!

**கீத்ஸ்**

## துயர் களைய வாராயோ பாலகனே




கன்றைக் காக்கும்
கறவை போல் - தன்
குஞ்சைக் காக்கும்
குருவி போல்
எம்மைக் காக்க ஏழைக்கோலம் பூண்டு
விண்ணிலிருந்து இறங்கி வந்திடுவீர் பாலகனே

கண்ணிமைக்கும் பொழுதினில் கொரோனாவில்
உலகமே மூழ்கி உருண்டோட
புயல்களும் பூகம்பங்களும் பூமியைப் புரட்டிட
புண்ணியன் உம் வரவு எமக்கு
விடுதலை தந்திடட்டும்

ஆயிரம் உறவுகள் எமக்கிருந்தும்
உறவாடி மகிழ வழியில்லையே
விரக்தியின் விளிம்பினிலே
தான் வாடுகின்றோம்
துயர்களைத் துரத்திடும்
தூதுவனாக வந்து பிறந்திடும்

**சேரூபன் அருள்மதி
மல்வம் - உடுவில்**

## என்னதான் செய்யலாம்?



ஆதரவு அற்றவர்க்கு ஏதாவது செய்யலாம்!
அகதி ஆனவர்க்கும் ஏதாவது செய்யலாம்!

ஏழை எளியவர்க்கு ஏதாவது செய்யலாம்!!
இல்லாதவர்க்கும் ஏதாவது செய்யலாம்!

உடல் நொந்தவர்க்கு ஏதாவது செய்யலாம்!
உளம் உடைந்தோர்க்கும் ஏதாவது செய்யலாம்!

பார்வை அற்றவர்க்கு ஏதாவது செய்யலாம்!
நடக்க ஏலாதவர்க்கும் ஏதாவது செய்யலாம்!

கேட்க இயலாதவர்க்கு ஏதாவது செய்யலாம்!
பேச முடியாதவர்க்கும் ஏதாவது செய்யலாம்!

நினைவை இழந்தவர்க்கு ஏதாவது செய்யலாம்!
நிம்மதி குலைந்தவர்க்கும் ஏதாவது செய்யலாம்!

நித்திரைவராதவர்க்கு ஏதாவது செய்யலாம்!
நித்திரைபோல் நடிப்பவர்க்கு என்னதான் செய்யலாம்!

**"மனுவுக்கு மனு" நூலில்
அருட்பணி செ.அன்புராசா (அமதி)**

## மனக் குரோதம்

சமச்சீரற்றுப்போன
சக்கர நாற்காலிகளின்
சிதைவு பாடுகள்
இன்றும்
இவ்வுலகத்தின்
அகிம்சா மனிதத்தின்
முழுமையில்
முற்றுப்பெற முடியாமல்
இன, மத, நிற
குரோதங்களைத்
தொடர்ந்து கொண்டிருக்கிறது ஏன்?

**யோ.ஜோய் ஜெர்சி
சுன்னாகம்**

## மௌனக் கதறல் கேட்கிறதா...

பொல்லாத பாரினிலே
பிறந்திட்ட பாலகனே
கல்லான எம் நெஞ்சங்களைக்
கரைத்திட வருவாயா?

சிதறிப்போன எம் வாழ்வில்
பதறிப்போன எம் மக்கள்
கதறி அழும் காலத்தின் கோலமிது
உதறிவிட்ட எம் இனத்தைக்
காப்பாற்றிட வருவாயா?


வெடிக்கும் புரட்சியையும்
துடிக்கும் உணர்ச்சிகளையும்
வடிக்கக் கரங்களிருந்தும் - வாழ்வை
முடிக்கும் இளம் தலைமுறையை
மனம்மாற்றிட வருவாயா?

வாதாடிப் பெறமுடியாததைப்
போராடிப் பெறமுனையும்
எம் தமிழினத்தின்
மௌனக் கதறல் கேட்கிறதா?
விடிவு ஒன்று உண்டெனின் - நின்
வரவே எமக்கு விடிவாக - எம் வாழ்வின்
ஒளியாய் வருவாயா?

**ச.கிறிஸ்ரின் அபிஷன்
புனித மடுத்தீனார் சிறுமடம்**

## இறைவனின் திட்டம்

ஓடிய மிலேனியத்தை
நலிந்து மெலிந்து கிடந்து
திரும்பிப் பார்க்கின்றேன்.
ஓசைகள் எம் காதுகளில்
ஒலிக்கின்றது
ஓலங்கள் எம் உணர்வுகளை
உறுத்துகின்றது
ஒன்று பட்டு, உலை வைத்து
உண்டு பகிர்ந்த அந்தக்
கூடார உறவுகளை
எண்ணி...
கூனிக் குறுகி
நலிந்து மெலிந்து கிடந்த
எம் வாழ்வியலின்
விடிவுக்காய்
இறைவன் எமக்குக்
கொடுத்த - ஒரு
பயணத்தின் கதைதான்
இறைதிட்டம் தேடும்
இறையாட்சியின் கதை
உணர்வோமாக
நாம்



**ஆ. யோண்பற்றிக்
சுன்னாகம்**

## மெய் இறைவன்

அண்டங்கள் அண்டங்கள் உண்டாக்கி
சில கண்டங்கள் கண்டங்கள் என வகுத்து
சடப்பொருள் உயிர்ப்பொருள் இரண்டினிலே
மாபெரும் பிரபஞ்சம் தந்து வைத்தான்

தந்தவன் எதிரே வந்தானா? இதில்
வந்தவனை எவரும் கண்டாரா?
இல்லாத ஒன்று தான் இடைவெளியாம்
இதில் இருப்பது இல்லாதது இங்கு ஏது

சூரியன் உதிப்பது எதற்காக? பின்பு
மாலையும் வருவது எதற்காக?
மனிதர்கள் பிறப்பது எதற்காக? பின்பு
மண்ணோடு போவதும் எதற்காக?

எங்கும் இருப்பவன் இறைவன் என்றால் பின்பு
இங்கு எதற்குப் பிரிவினைகள்
இனம் மொழி நிறங்களெல்லாம்
பறவைக்கும் உண்டு மறுக்கவில்லை
பகுத்தறிவென்ற ஒன்றாலே
மனிதனைச் செய்தான் மறக்கவுமில்லை

ஆடையின்றி இருப்போருக்கு ஆடைகொடு!
உணவின்றிப் பசித்தோருக்குப் பசிபோக்கு!
உறவின்றித் தவிப்போருக்கு உறவாயிரு!



இங்கு நீயே மெய் இறைவன்
இவை யாவும் உனக்கு அளிக்கப்பட்டால்
அளிப்பவனே அங்கு உனக்கு இறைவன்

**த.அன்றூட் ஜக்சன்
சட்டபீட மாணவன்
யாழ். பல்கலைக்கழகம்**

## எல்லாம் புயலாக...

மாற்றங்கள் வந்திடுமா மனுக்குலம் மாறிடுமா - என்று
மனுமகனே மனிதனாக மண்ணகத்திற்கு வந்தாரே
மாபெரும் இறையவன் மாண்பினை மதிக்காது
மனிதராய் வாழ்ந்து வரும் யுகத்தினிலே
மனிதத்தின் மகுடமாய் மனங்களில் பிறந்திடுவாய்

வஞ்சனையும் வன்செயலும் வைராக்கியமும்
வாள்வெட்டும் நிறைந்த நம் பூமியிலே
வாழ்வு என்னும் கொடையின் வரத்தினை
வாழ்வாக்க நல் மனதுள்ள மனங்களாய்
மாற்றிட வந்திடு பாலகா


பணம் என்னும் மாயைக்காய்
பாடுபட்டு உழைக்காது பல கோடிப் பணம் சேர்த்து
பகட்டாக வாழ்வதற்கு - பல தீய வழிகளில்
பயமின்றி வாழும் மனித மனங்களை
மாற்றிட வந்திடு பாலகா

கைபேசிக் கலாசாரத்தால் காலத்தை இழந்தவரும்
சின்னத்திரையுலக வாழ்வில் சிக்குண்டு தவிப்பவரும்
சினிமா மோகத்தால் சீர்குலைந்து போனவரும் - இன்று
சீரழிந்த வாழ்க்கை வாழும் மனித மனங்களை
மாற்றிட வந்திடு பாலகா

புயலும், பூகம்பமும் வந்திடினும் - கொறோனா என்னும்
கொள்ளை நோய் உலகை வாட்டி வதைத்திடினும்
தெய்வப் பூமகனின் வரகையதில் பூவுலக கொடுமை
எல்லாம் புயலாகச் சென்று மறைந்திடுமே

**யே.அனுஸ்டதாஸ் - மாதகல்**

## மாற்றத்தின் மாற்றம்





சர்ப்பம் தந்த
பாவத்தை
கர்ப்பம் வந்து
தீர்த்த நாள்

மரத்தால் விளைந்த பாவத்தை
வரத்தால் களைந்த
மந்திர நாள்

பைபிள் ஒன்று
மனிதனாய் வடிவெடுத்த
நல்ல நாள்

தொழுவம் ஒன்று
தொழுகை பெற்ற
திருநாள்

ஒதுக்கப்பட்டவை
வணக்கம் பெறும் என
வருகையால் சொன்ன நாள்

ஆட்டிடைக் கூட்டில்
ஆதவன் உதித்த
அதிசய நாள்

# ஆத்மன் காத்திருப்பான்

சிறுகதை

ம. மரின் றேச்சல்

குழலினி போட்டோ பிரதிகள் எடுக்கும் கடையொன்றின் வாசலில் நின்று கொண்டிருந்தாள். வழமைக்கு மாறாக நண்பகல் நேரத்தில் கடை நிரம்பி வழிந்துகொண்டிருந்தது. ஆத்மனிற்கான மாதிரி வினாத் தாள்களை நகல் எடுத்துக்கொண்டு அவனை மேலதிக வகுப்பிலிருந்து அழைத்து வருவதற்காகச் செல்ல வேண்டும். நேரமாக ஆக, ஆத்மன் தனியாகக் காத் திருப்பான் என்ற படபடப்பு அவளிடம் மேலோங்கத் தொடங்கியது.

"தம்பி கனநேரம் செல்லுமோ?" அவள் பொறுக்க முடியாமல் கேட்டே விட்டாள்.

"அடுத்த உங்கட தான் அக்கா, ஒரு பத்து நிமிசம்" அவன் கூறிக்கொண்டே அவள் வழங்கிய புத்தகத்தைக் கையில் தூக்கிச்சென்றான். அந்த இளைஞன் பம்பரம் போலச் சுழன்று கொண்டிருந்தான். தனக்கான வாடிக்கை யாளர்களுள் ஒருவரையும் இழந்துவிடக் கூடாது என்ற முனைப்பு அவனிடம் அதிகமாக இருந்தது.

குழலினி மெதுவான தலை அசைவுடன் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். அவளின் வட்ட டயலினுள் சுழன்று கொண்டிருந்த இரண்டு முட்களும் சில நிமிடங்களில் பன்னிரண்டை நெருங்கிவிடும். சரியான நேரத்தில் அவனது வகுப்பு வாசலில் இல்லை யென்றால் குழந்தை பசியில் துடித்துப் போவான் என்ற ஏக்கம் ஒருபுறமும், இப்போது தாமதமானால் பின் நேர வகுப்புக் களிற்குச் செல்லவதற்குள் அவன் களைத்துப் போவான் என்ற கவலை ஒருபுறம், அவனுடைய வேலைகளிற்குக் கூட நேரம் ஒதுக்க முடியாமல் வேலையைக் கட்டி அழுது கொண்டிருந்த தன் கணவன் மீது பொங்கி வந்த கோபம் ஒருபுறம் என்று அனைத்து சிடுசிடுப்பான உணர்வுகள் அவளை நெருக்கிக் கொண்டிருந்தன.

"இந்த மனுசன் வரேக்க இத ப்ரிண்ட் எடுத்துக் கொண்டு வந்தா இவ்வளவு கரச்சல் இல்ல." அவள் தனக்குத் தானே புறுபுறுத்துக் கொண்டாள்.

நண்பகல் நேரம் உச்சம் கொடுத்துக் கொண் டிருந்த கதிரவனின் வெம்மை தலைக் கவசத்தையும் கிழித்துக் கொண்டு அவள் தலை யில் இறங்க, ஏற்கனவே கொதித்துக் கொண்டிருந்த அவள் இரத்தம் இன்னும் சூடேறியது. வாகன இரைச்சலும், தகித்துக் கொண்டிருந்த தார் வீதியும் உலர்ந்த வியர்வையுடன் ஒருவரை ஒருவர் முட்டித் தள்ளியபடி நின்ற மனிதர் களும் நிறைந் திருந்த அந்த நிதர்சனத்திலிருந்து அவள் தன்னை விடுவித்துக் கொள்ள விரும்பியவளாய் தன் கண்களை மூடிக்கொண்டாள்.

கண்களை மூடிய சில நிமிடங்களிற்குள் அவளின் தொலைபேசி அதிர்ந்தது. அவள் வெறுத்து வெளியேறிய நிதர்சனத்தினுள் அது அவளை மீண்டும் இழுத்து வந்தது.

"அம்மாய் .... ரியூசன் முடிஞ்சு கெதியா வாங்கோ ... பசிக்க்க் - கிது..." அலுவலகத் தொலைபேசியின் முனையிலிருந்து அவன் சிணுங்கினான். காலை யில் அவன் உண்ட நான்கு தோசைகளையும் அந்தத் தகரக் கொட்டில்கள் முழுவதுமாய் உறுஞ்சிவிட்டிருந்தன. உயிரின்றி ஒலித்த அவ னின் குரல் அதற்குக் கட்டியம் கூறியது.

"தங்கம் வெளிக்கிட்டன் குஞ்சு..... இந்தா அஞ்சு நிமிசத்தில் அம்மா அங்க வந்திடுவன் அழா தேங்கோ ...." அவள் தாய்மை பதைபதைக்க அவ னிற்கு ஆறுதல் கூறிவிட்டு கடைக்காரத் தம்பியை நோக்கித் திரும்பினாள். அவன் இன்னும் சுழன்று கொண்டிருந்தான்.

"தம்பி முடிஞ்சோ ...?" என்று மீண்டும் இழுத்தாள்.

"ஓமக்கா...." என்றவாறு அவன் ஒரு கட்டுத் தாள் களையும் அவள் வழங்கிய புத்தகத்தையும் நீட்டினான். "நூறு ரூவா"

அவள் தயாராக வைத்திருந்த தாளை அவனிடம் திணித்துவிட்டு அவசரமாகக் கடை யிலிருந்து வெளியே வந்தாள். நகல்களை ஒருமுறை சரிபார்த்து விட்டு அவற்றைத் தன் கைப்பையினுள் வைத்தாள். அப்படியே தன் மோட்டார் சைக்கிளைத் திருப்ப முயற்சி செய்தவள், ஒரு காட்சியைக் கண்டு உறைந்து போனாள்.

சில நிமிடங்களிற்கு ஆத்மனோ, அவனின் பசியோ கொழுத்திக் கொண்டிருந்த வெப்பமோ எதுவும் அவள் சிந்தனைக்கு எட்ட வில்லை. எதிரிலிருந்த வீடொன்றின் படலைக்குள் நான்கு வயது மதிக்கத்தக்க விஞ்ஞானி ஒருவர் மும்முரமான ஆய்வொன்றில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அவரின் ஆராய்ச்சியை உதாசீனப்படுத்திக் கொண்டு ஒரு அடி நகரவும் குழலினியால் முடியவில்லை.

விசாலமான தன் வீட்டு வளவின் நடுவில் கிளைபரப்பி நின்ற மாமரமொன்றின் நிழலில் அமர்ந் திருந்த அந்தக் குட்டி விஞ்ஞானி தனக்கான உலக மொன்றை உருவாக்கிக் கொண்டிருந்தான். அவ னைச் சுற்றிலும் மணல் கும்பங்கள் அமைக்கப் பட்டிருந்தன. அவனருகில் ஒரு சிறிய பொம்மைக் காரும் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது. இவனும் பம்பரம் போல சுழன்று கொண்டிருந்தான். எனினும் இவன் முகத்தில் வாடிக்கையாளரைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டுமென்ற முனைப்பு இல்லை. மாறாக, முழு உலகிற்கும் பயனுள்ள ஏதோவொரு வேலை யில் மூழ்கி இருப்பது போன்ற ஈடுபாடு இருந்தது. தன்னைச் சுற்றியிருந்த மணல் மேடுகளோடு அவன் பேசிக் கொண்டிருந்தான். பின் அவற்றுள் சிலவற் றிற்கு தண்டனை வளங்கப்பட்டது. அவை தரை மட்டமாக்கப்பட்டன. அவற்றின் நடுவிலிருந்து கூழாங் கற்கள் போன்ற பொருட்கள் வெளிவந்தன. சிறிது நேரத்தில் மணல் மேடுகளைச் சுற்றி ஓர் ஊர் வலம் தொடங்கியது. அந்த ஊர்வலத்தின் தலையாக அவனின் கார் சென்று கொண்டிருந்தது. மணல் தரையில் தன் காருடன் பயணித்தபோது அவன் முகத்தில் ஒரு பரவசம் படர்ந்திருந்தது. அந்த ஊர் வலம் அவன் வீட்டு மாமரத்தின் அடிவரை நீண்டது. கார் மரத்தின் மேல் மெல்ல மெல்ல ஏறத்தொடங்கியது. சிறு தூரம் சென்றவுடனே கார் பட்டென்று நின்றது. அவன் கண்களிலிருந்த பூரிப்பு மறைந்து பேரார்வம் படர்ந்தது. அவன் மரப்பட்டைகளிற்கு நடுவில் எதையோ பார்த்து விட்டான் போலும். அகல விரிந்த கண்களுடன் மெது வாக அவன் கண்ட ஏதோவொன்றைத் தொட்டுப் பார்த் தான். இப்போது பேரார்வத்தைக் கடந்து ஒரு குட்டிக் குறும்பு குடியேறிக் கொண்டது. சட்டென்று மரத்தைக் கட்டிக் கொண்டு பெரிதாகச் சிரித்தான். மீண்டும் கார் பயணம். இப்போது உதிர்ந்து விழுந்த இலையொன்றின் மீதேறி கார் பறந்தது. "அம்ம்ம்ம்மா .. ." மழலைக் கொஞ்சலுடன் கூவிக்கொண்டே திறந்திருந்த தன் வீட்டு வாசலினுள் ஓடி மறைந்தான்.

தன்னையும் அறியாமல் புன்னகை படர்ந்த முகத்துடன் அவனைப் பார்த்துக் கொண்டிருந்த குழலினி சட்டென்று சுயநினைவிற்குத் திரும்பினாள். தகரக் கொட்டிலொன் றின் வெம்மையில் தகித்துப் போய் பட்டினியுடன் காத்திருக்கும் ஆத்மனின் களையிழந்த முகம் ஒரு கணம் அவள் மனக்கண் முன் தோன்றி மறைந்தது. ஆத்மனின் கண்களில் ஓரிரு நிமிடங்களிற்குள் அத்தனை உணர்வு மாற்றங்களை கவனித்ததாக குழலினிக்கு நினைவில்லை. அவன் கண்கள் எப்போது கடைசியாக அகல விரிந்தன என்பது அவளிற்குத் தெரியவில்லை. விரல்களின் இடுக்கிலிருந்து நழுவத் துடிக்கும் சுடுமண லின் ஸ்பரிசத்தை உணரும் சுகத்தைஎன்றேனும் தன் குழந்தை அனுபவித்திருப்பானா என்ற கேள்வி அவ ளைத் துளைக்கத் தொடங்கியது. பளிங்கு பதித்த தங்கள் வீட்டு வாசலைத்தாண்டி வெறுங்காலாய் பவனிவர என்றாவது அவனிற்கு அனுமதி வழங்கப்பட்டதா என்பது குறித்து உறுதியாய் அவளால் கூற முடியவில்லை. இத்தனைகணி ரென்ற தோரணையில் அவன் மழலைக் கொஞ்சல் எதிரொலித்ததாய் அவள் செவிகளிற் கும் நினைவில்லை. ஆத்மன் பிறந்த காலம் தொட்டு வயதுக்கிரமமாக அவனிற்குத் தேவை யான, பொருந்தக் கூடிய சகல சாதனங்களையும், சிறுவர் நூல்களையும், கார்டூன் திரைப்படங் களையும் மேலும் பல பயிற்சிப் பொருட்களை யும் அவள் தேடித் தேடிச் சேர்த்திருந்தாள். அவை அனைத்துமே அவனின் வளர்ச்சிக்காக, அவன் சிறந்த மனிதனாக உருவாக வேண்டுமென்ற அவளின் ஆசைக்காக.

எனினும் இவை அனைத்தையும் வைத்திருந்த ஆத்மனின் முகத்தில் என்றும் கண்டிராத ஒருவித நிறைவை, சில மண்குவியல்கள் நடுவில் ஒய்யார மாய் அமர்ந்து கதை பேசிக்கொண்டிருந்த அந்தப் பாலகன் முகத்தில் அவள் கண்டாள். மாவிலையில் பறந்த காருடன் மறைந்த அந்தக் குட்டி விஞ் ஞானியின் குரலில் தொனித்த நம்பிக்கை, ஏதோ ஒன்றைக் கண்டு பிடித்துவிட்டோம் என்ற பூரிப்பு, ஆத்மனிடம் வெளிப்பட்டதேயில்லை என்பதை அவள் உணர்ந்துகொண்டாள்.

அனைத்திற்கும் மேலாக, அந்தக் குழந்தையின் கண்ணிலும் உதட்டிலும் நிரம்பி வழிந்த மகிழ்ச்சியின் சாயல் தன் ஆத்மனின் உலகிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாய் மறைந்து விட்டதோ என்ற கேள்வி அவளிடம் ஊடுரு வத் தொடங்கியது.

அவனின் வளர்ச்சிக்காய் ஓடிக்கொண்டி ருந்ததில் அவன் மகிழ்ச்சி தொலைவதைக் கவனியாது விட்டுவிட்டதாய் அவள் உணர்ந்தாள். தான் தவமிருந்து பெற்ற ஒரே மகனின் குழந்தைப் பருவத்தைத் திருடிக் கொண்டோமோ என்ற குற்ற உணர்வு அவளைத் துளைக்கத் தொடங்கியது.

கண்களின் ஓரமாய்த் துளிர்த்த ஈரத்தைக் துடைத்துக் கொண்டே தன் மோட்டார் சைக்கிளின் ஆர்முடுக்கியைத் திருகினாள் குழலினி.

ஆத்மன் காத்திருப்பான்.





## ஒரு ஈசலைப்போல....

மழைவெளியொன்றில்
மரணித்துக்கொண்டிருந்தன
மானிட நீர்க்குமிழிகள்

முள்ளுக் குத்திய
பலூனைப்போல
முடிந்து போனது மனிதன் கதை

ஈசலைப்போல
இறந்து போவதா
இந்த மானிட வாழ்வு?
இந்த மானிட இருப்பிற்குள்
அர்த்தம் இருக்கிறது
என்று சொன்னது ஒரு பிறப்பு

கால் தூசு என்று
எண்ணிய மனிதத்தை
கடவுள் துகள் என்றது

சுடுகாட்டு
விறகுகளை எடுத்து
வீணை செய்து கொண்டது

ஏதேன் தோட்டம்
பிரசவித்த காரிருளை
கழுவியது இப்பேரொளி

மதிப்பில் நாம் உயர்ந்தோம்
கடவுள் சாயலானோம்
இனி எமக்கு மரணமில்லை
..

ஞா.கவினா
உருத்திரபுரம்




# என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி. செ. அன்புராசா அமதி**

*(கமல், மன்னார்)*

**கேள்வி: கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தை இம்முறை கொண்டாட முடியாமல் போகும்போல தெரிகின்றது? கிறிஸ்மஸ்கொண்டாடாமல்வாழ்க்கையில் என்ன கொண்டாட்டம்?**

**ப:** உண்மைதான் கமல்! ஆனால், கொண்டாட்டம் என நீங்கள் எதனைக் கருதுகின்றீர்களோ தெரியவில்லை! கொண்டாட்டம் என்ற சொல் இன்று ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பொருளைத் தருகின்றது! எது எப்ப டியோ, இம்முறை கொரோனாவாலும் அது ஏற்படுத்திய பொருளாதார நெருக்கடிகளாலும் வாழ்க்கை திண்டாட்டம் ஆகாமல் இருப்பதே என் மன்றாட்டு!

*(கலா, யாழ்ப்பாணம்)*

**கேள்வி: இவ்வுலகம் கொரோனா நோய்த்தாக்கத்திலிருந்து குணம் பெறுமா?**

**ப:** கலா, கொரோனா நோயிலிருந்து குணம்பெறும்! ஆனால், திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிடும் சமூகத் தீமைகளாகிய நோய்களிலிருந்தும் சுகம்பெற வேண்டும். திருத்தந்தை பிரான்சிஸ், "இந்த நம் உலகம், இந்தக் கொள்ளை நோயிலிருந்து மட்டுமல்ல, இந்த மனித குலத்தின் நம் சகோதரர் சகோதரிகளுக்குப் பெரும் துயர்களை அளித்து வரும் அநீதி, சரிநிகரற்ற தன்மை, மக்களை ஒதுக்கிவைத்தல் போன்ற சமூகத் தீமைகளிலிருந்து குணம் பெற வேண்டும்" என்ற அவரின் அழைப்பைக் கருத்தில் கொள்வோம்.

*(மேரி, கிளிநொச்சி)*

**கேள்வி: போர்க் காலத்திற்கு ஈடாகக் கொ.மு.(கொரோனாக்கு முன்) பலர் வீதி விபத்துக்களில் கொல்லப்பட்டார்கள், இலங்கையில் மட்டும் ஆண்டுக்கு மூவாயிரம் பேர் அளவில்! சராசரியாக நாள் ஒன்றுக்கு எட்டுத் தொடக்கம் ஒன்பது பேர்கள்! இப்போது கொ. பி. (கொரோனாவுக்குப் பின்) இதனைத் தற்கொலைகள் பிடித்துக்கொண் டதோ என எண்ணத் தோன்றுகின்றது! நான் கருதுவது சரியா?**

**ப:** மேரி, நீங்கள் ஆதங்கப்படுவதில் அர்த்தம் இருக்கின்றது! அது எனக்குப் புரிகின்றது! அனைவருக்கும் புரிந்தால்தான் அல்லது புரியவைத்தால்தான் அநியாயச் சாவுகளைத் தடுத்து நிறுத்தலாம்.

*(மரியா, முல்லைத்தீவு)*

**கேள்வி: கரவையூர்ச் செல்வம் அடிகளார் பாதுகாவலனில் தரமான கட்டுரைகளை எழுதி வருகின்றார். ஆனால், 2020.10.25 அன்று எழுதிய கட்டுரையில் "நான் சிறுவனாக இருந்தபொழுது ஆயர் நியமனம் தூய ஆவியினால்தெரியப்படுகின்றது என்று சொன்னார்கள். நானும் அதை நம்பினேன். அது வேறு கதை. இன்று ஆயரை நியமிப்பது மகாநாயக்கர்கள் என்பது புதிய கதை" என்று எழுதியிருக்கின்றார். இது உண்மையா?**

**ப:** மரியா, ஆயரைத் திருத்தந்தைதான் நியமனம் செய்கின்றார் என்றுதான் நான் இதுவரை அறிந்திருக்கின்றேன். திடீரென மாற்றிவிட்டார்களோ தெரியாது! எனினும், அப்படியிருக்க வாய்ப்பில்லை என்றுதான் நான் நினைக்கின்றேன்! எதற்கும், உங்கள் கேள்விக்கான விளக்கத்தை கரவையூர்ச் செல்வம் அடிகளாரிடமே கேட்பதுதான் நல்லது. அவர், தென் கோப்பாய், சங்கமம் என்ற இல்லத்தில் 'ஞானவழி' காட்டிக்கொண்டிருக்கின்றார்.

*(செல்வி, கிளிநொச்சி)*

**கேள்வி: "தனிமைப்படுத்தப்பட்ட வீட்டைத் தொற்றுநீக்கச் சென்ற ஊழியர்கள் யுவதிகளுடன் சேர்ந்து செல்பி! அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டனர்!" என்றொரு செய்தியினை அண்மையில் வாசித்தேன். நிலைமை எப்படி இருக்கின்றது!?**

**ப:** கைகளைக் கழுவுங்கள், முகக்கவசம் அணியுங்கள், ஆட்களுக்கிடையில் இரண்டு மீற்றர் இடைவெளியைப் பேணுங்கள் என இவர்களுக்கான ஒழுங்குகளை விளக்கியிருப்பார்கள். செல்பி எடுப்பது போன்ற செயற்பாடுகளைச் செய்யக்கூடாது என்பதை அறிவுறுத்த அதிகாரிகள் யோசித்திருக்க மாட்டார்கள். அதனால், தொற்றுநீக்கம் செய்யும்போது கவனிக்கப்படவேண்டிய ஒழுங்குகளைப்பற்றி ஊழியர்களுக்கு அடுத்தமுறை விளக்குகின்றபோது செல்பி எடுக்கக்கூடாது என்ற ஒழுங்கையும் சேர்த்துக்கொள்ள வேண்டியதுதான்! செல்விகளுடன் செல்பி எடுப்பதில் தவறில்லைச் செல்வி! பிழையான நேரத்தில், தவறான சூழலில் - நிலைமையில் எடுப்பதைத்தான் தவிர்த்திருக்க வேண்டும்!

*(அமல், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: ஒருசில நாட்களுக்கு முன்பாக யாழ்ப்பாணத்தில் குறிப்பிட்ட ஓரிடத்தில் டைனமட் வெடிப்பொருள் தயாரிக்கும் நோக்குடன் ரிஎன்ரி ரக வெடிப்பொருளை கிறைண்டரில் போட்டு அரைத்தவேளை அது வெடித்துச் சிதறியதில் எட்டுப்பேர் படுகாயமடைந்து யாழ். மருத்துவமனையில்சேர்க்கப்பட்டிருப்பதாக ஒரு தகவல்! இப்பேர்ப்பட்டவர்களை என்ன செய்யலாம்?**

**ப:** அமல், பாவம் அவர்கள்! படுகாயமடைந்திருப்பதால் இப்போது அவர்களுக்கு ஒன்றும் செய்யக்கூடாது! காயங்கள் ஆறி வந்ததும் வெடிபொருளைக் கிறைண்டரில் போட்டு அரைக்கக் காரணமாய் இருந்த சூத்திரதாரியை அரைக்கவேண்டும்!

*(கமலா, யாழ்ப்பாணம்)*

**கேள்வி: வயதான பெற்றோர் கவனிக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டுப் பரவலாக முன்வைக்கப்படுகின்றதே! என்ன காரணம்?**

**ப:** கமலா, ஒரு முதியவர் தன்னுடைய கைத்தொலைபேசி செயலிழந்து விட்டதாகக்கூறி அதனைத் திருத்துனரிடம் கொண்டு செல்கின்றார். அவரோ அதனைப் பரிசோதித்துவிட்டு, "அதில் எவ்விதமான பிழையும் இல்லை!" என்கின்றார். அம்முதியவரோ, "அப்படியென்றால், ஏன் என் பிள்ளைகள் என்னை அழைப்பதில்லை!?" எனக் கண்ணீருடன் கூறுகின்றார். நாம் எல்லோருமே, குறிப்பாக முதிர்ந்த வயதில் தாய்தந்தை உள்ளவர்கள் ஆழந்து சிந்திக்கவேண்டிய விடயம் இது!

*(ஆனந்தன், கிளிநொச்சி)*

**கேள்வி: நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரக்குமார் பொன்னம்பலம் அவர்களின் உரைகளைக் கேட்டிருக்கின்றீர்களா? உண்மையில் இவர் தமிழர்தானா? இப்படியான தமிழர்களும் நாடாளுமன்றப் பிரதிநிதிகளாக இருக்கின்றார்களா?**

**ப:** அவர் சாதாரண தமிழன் அல்ல, பச்சைத் தமிழன்! உண்மைத் தமிழன்!

*(ஜெயசீலன், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: தன்வினை தன்னைச் சுடும் என்கிறார்கள். இதனைக் 'கர்மா' என அழைக்கலாமா?**

**ப:** தனிமையில் இருப்பவனைப் பைத்தியம் என்று சொன்ன உலகம்தான் இன்று தனிமையில் இருப்பதையே வைத்தியம் என்கிறது. என ஒருவன் குறிப்பிட்டது என் நினைவுக்கு வருகின்றது. எப்படி வேண்டுமானாலும் அழையுங்கள்! சரக்கு ஒன்றுதான் ஜெயசீலன்!

*(ஜனா, வவுனியா)*

**கேள்வி: என் கேள்விக்கு என்ன பதில் என்ற பகுதியில் பதில்கள் 'படிர் படிர்' எனப் பறக்கின்றது. சில-வேளைகளில் 'பளீர் பளீர்' எனவும் தெறிக்கின்றது! இவ்வாறே படிர் படிர் எனத் பறந்துகொண்டு, பளீர் பளீர் எனத் தெறித்துக்கொண்டு இருக்குமா?**

**ப:** படிர் படிர் எனவும், பளீர் பளீர் என்றும் பதில்கள் வருவதைப் பார்த்திருக்கின்றீர்கள்! பளார் பளார் எனவும் வெடிப்பதைப் பார்க்கவில்லையா ஜனா!?

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

# இயேசுவின் பிறப்பு துன்புறுவோரின் உள்ளங்களிலும் இல்லங்களிலுமே!



**அருட்தந்தை. றமேஸ் அ.ம.தி**

இறைதந்தையின் திட்டத்தினாலும், இறைவாக்கினரின் முன்னறிவிப்பினாலும் மெசியா பற்றிய ஆழமான நம்பிக்கை இஸ்ராயேல் மக்கள் மத்தியில் வலுகாகப் பேசப்பட்டது. காலத்துக்குக் காலம் பல்வேறு நாடுகளின் அடிமைத்தனங்களாலும், துன்புறுத்தல்களாலும் தங்களையே இழந்து, மாற்றானின் வழிச்செல்ல நிர்ப்பந்திக்கப்பட்ட மக்கள், இறைவன் தங்களை மீட்டு விடுதலை வாழ்வை மீண்டும் தருவார் என்ற நம்பிக்கையை கைவிடவில்லை. மெசியா பற்றிய அவர்களது எதிர்பார்ப்பு வேறு கோணத்தில் இருக்க மெசியாவாகிய இயேசுவின் பிறப்பு வேறுகோணத்தில் அமைந்தது. இந்த உலகத்தில் தனது பெற்றோரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை எந்தவொரு மனிதனுக்கும் இல்லை. ஆனால் கடவுள் தன் மகனுக்கான மண்ணகப்பெற்றோரைத் தேர்ந்தெடுக்கிறார். அக்காலத்தில் அதிகார வர்க்கத்தினரும், சமூகத்தில் அந்தஸ்து மிக்க பெரியவர்களும் இருந்த போதிலும், இறைவன் ஏழைப் பெற்றோர்களையே தெரிந்தெடுக்கிறார். மெசியாவை அரசனாகவும், பெரிய வீரனாகவும் எதிர்பார்த்த இஸ்ராயேல் மக்களின் எதிர்பார்ப்புக்கு மாறாக ஆனால் திருச்சட்டத்திற்கும், இறைவாக்கினரின் முன்னறிவிப்புக்கும் உட்பட்டதாக தாவீதின் ஊராகிய பெத்தலகேமில் இயேசு பிறந்தார்.

இந்த மாபெரும் உலகத்தை உருவாக்கிய ஆண்டவருக்கு உலகில் பிறக்க இடமில்லை என்றால் மனிதரின் கொடூரம்தான் எம்மாத்திரம். மாளிகையில் பிறக்க வேண்டிய இறைமைந்தன் மாடடைக்குடிலில் பிறந்தார் என்றால் அவரது தாழ்மையும் ஏழ்மையும் மனிதர்களால் எண்ணிப்பார்க்க முடியாதவை. "இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்" (லூக் 2:11) ஏழைவடிவில் ஏழைகளுக்காகப் பிறந்த இறைமகனின் பிறப்புச்செய்தி முதலில் ஏழைகளுக்கே அறிவிக்கப்பட்டது. கடவுளை ஏழையாகப்பிறந்தவர் என ஏற்றுக்கொள்ள வேண்டும். செல்வராக இருந்த அவர் ஏழைகளாகிய நாம் செல்வராகும்படி நமக்காக ஏழையானார் (2கொரி 8:9). ஆனால் உலகம் அவரின் ஏழ்மையை உணர்ந்ததா? அவரது பிறப்பின் அர்த்தத்தைதானும் அறிந்ததா? ஏன் இறைவன் மனிதனானார் எனப் புரிந்து கொண்டதா?.....உலகம் இயேசுவின் போதனையை ஒதுக்கியது. தன்னுடைய மாயை நாடகத்தை ஆரம்பித்தது. அவரது போதனைகளை தூக்கி எறிந்தது. பேதமையால் அழிவை நோக்கி நகர்ந்தது. விளைவு…?

இன்றைய சமுதாயத்தை ஆழமாக ஊடுருவி நோக்கும்போது ஒரு மாபெரும் உண்மையை நாம் உணர முடியும். யாதெனில் ஒருபுறம் மக்கள் வாழ்வுக்காக ஏங்குகின்றனர் வாழ்வை முழுமையாகப் பெறுவதற்காகப் போராடுகின்றனர். மறுபுறம் மனிதர் அழிவை நோக்கிப் பயணமாகின்றனர். வாழ்வுக்கும் சாவுக்கும், ஆக்கத்திற்கும் அழிவுக்கும், எழிச்சிக்கும் வீழ்ச்சிக்கும் இடையே மனித சமுதாயம் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கிறது. உலகத்தொடக்கத்திலே மனிதனோடு கூடிப்பிறந்த வன்முறை மனித வரலாற்றில் தொடர்ந்து அவனைக் காயப்படுத்திச் செல்வது வரலாறு தரும் பாடம் மட்டுமல்ல இன்றைய யதார்த்த உலகிலும் நாம் அனுபவிப்பது வெளிப்படையுண்மை. மனித மாண்பைச் சிதைத்து, மனித உரிமையை நசுக்கும் எல்லா செயற்பாடுகளும் வன்முறையின் வெளிப்பாடுகளே. அகதி வாழ்வு, காரணமின்றிய சிறைவைப்பு, உரிமைகள் மறுக்கப்படல், பாலியல் துஷ்பிரயோகம், சீதனக் கொடுமைகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள், முதியோர் புறக்கணிப்பு, வறுமை, வேலையில்லாமை, சமூகச் சீர்கேடுகள், கலாசார அழிவுகள், ஆன்மீக வறட்சி என்பனதான் வன்முறை மனிதனுக்கு அளித்த வெகுமதிகள்.

மனிதனின் கொடூரத்தின் விளைவே இன்றைய இயற்கையின் வெளிப்பாடாகும். நாளை என்ன நிகழுமோ என்ற நம்பிக்கையில்லா, எதிர்நோக்கில்லா வாழ்வைத்தான்

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

# காவு கொள்ளும் கொரோனாவும் காப்பாற்றும் பாலன் இயேசுவின் பிறப்பும்

அ. யேசுராஜன் டபரேரா
நான்காம் வருட இறையியல்.

இன்றைய உலகம் இருபது நூற்
றாண்டுகளைக் கடந்து நிற்கின்றது.
இருபத்தொராம் நூற்றாண்டின் தொடக்
கமே போர் மூட்டமும், வல்லரசுகளின்
ஆட்டமும், சாதியத்தின் மூர்க்கத்தன
மும் மதவாதத்தின் உச்சக்கட்ட கூச்ச
லும் எமது மனிதசமூகத்தை அச்சுறுத்திக்
கொண்டிருந்த காலப்பகுதியில் தான்
இந்த கொரோனா என்கின்ற கொள்ளை
நோய் உலகில் பரவ ஆரம்பித்தது.
இதில் மானிடம் சந்தித்த இழப்புக்களும்
துன்பங்களும் ஏராளம். அதேவேளை
யில் பல நாடுகளின் பொருளாதாரம்
பன்மடங்கு இழப்புக்களை சந்திக்கக்
காரணமாகியது. இன்னும் சந்திக்க
போகின்ற இடர்களும், இறப்புக்களும்
மனித சமூகத்துக்கும் உலகத்துக்
கும் பேரிழப்பாகும். மக்களுடைய
தொழில்கள் முற்றாக முடக்கப்பட்டு
விட்டன, கோடிக்கணக்கான மக்கள்
கொடிய கொள்ளை நோயினால் பாதிக்
கப்பட்டுத் தங்களுக்கும் தங்கள் குடும்
பங்களுக்கும் அடுத்து என்னவாகுமோ?
என்று ஏங்கிப் பெருமூச்சு விடுகின்ற
காலம் இது. இச்சூழலில் இயேசு
பிறப்பு என்ன செய்தியை எமக்குத்
தருகின்றது என்பதைச் சற்றுச் சிந்திப்
போம்.

இயேசுவின் பிறப்பைப் பற்றி சிந்
திக்கின்ற போது சிறிது கற்பனை
கலந்து இன்றும் இயேசு மீண்டும்
பிறக்கமாட்டாரா? எனும் ஏக்கம்
கலந்த கேள்வி எழுகின்றது. இயேசு
மீண்டும் பிறக்க வேண்டும் இந்தக்
கொள்ளை நோயில் நாம் காணும்
எல்லாத் தீமையையும் அழித்துவிட
வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் தோன்று
கின்றது. இவ்வுலகம் கொள்ளை
நோயற்ற புத்துலகமாக மாற வேண்
டும் என்ற ஆவல் வளர்கின்றது. அப்படி
யெனில் இன்றைக்கு நாம் காணு
கின்ற அழிவுகளும், இடர்களும்
இழப்புக்களும், பொருளாதார வீழ்ச்சி
களும் நீங்கி உலகத்தை இயேசு
காப்பாற்றுவாரா? என ஏங்க வைக்
கின்றது. இயேசுவின் பிறப்பானது
ஏழை, எளிய மக்களின் வாழ்க்கை
யில் மாற்றம் நிகழவேண்டும் என்ற
ஆதங்கமும் இச்சிந்தனைகளால்
வெளிப்படுகின்றது. கொரோனா என்
கிற கொடும் நோயினால் சூழப்பட்
டுள்ளது இந்த உலகம். செய்தித்தாளை
பிரித்துப் பார்க்கமுடியவில்லை.
தொலைக்காட்சி பார்ப்பதற்கு பய
மாயிருக்கிறது அந்தளவிற்கு
கொரோனா வைரஸ் நோயினால்
இறக்கின்றவர்களின் தொகையும்,
பாதிப்புக்குள்ளாகும் நபர்களின்
எண்ணிக்கையும் நாளுக்கு நாள்
அதிகரித்த வண்ணமே உள்ளது.
இப்படிப்பட்ட நோய் சூழ்ந்துள்ள உல
கில் கண்டிப்பாய்க் கிறிஸ்து பிறப்பு
கொண்டாடப்படவேண்டுமா? என்ற எண்
ணம் கற்பனையில் எழுகின்றது.

இயேசுவின் பிறப்பை ஆன்மீகக்
கண்கொண்டு பார்க்கிறபொழுது நம்மு
டைய மக்கள் அனுபவித்து வருகின்ற
இறப்புக்களையும், வலிகளையும், வேத



னைகளையும் தாங்கிக் கொண்டு எல்லா
துன்பங்களையும், தடைகளையும் தாண்டி
இலக்கைத் தொடுவதற்கான நம்பிக்கையை
அளித்து நிற்கின்றது. ஈராயிரமாண்டுக
ளுக்கு முன் பிறந்த இயேசு கொணர்ந்த
மகிழ்ச்சி இன்றைய சமூகத்தில் வேதனை
யில் வாடுகின்ற மக்களுக்கு அர்த்தமுள்ள
ஒன்றாக மாறவேண்டும். இன்று சமூ
கத்தில் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ள
நோயாளிகளை புறந்தள்ளப்பட்டுள்ள,
தனிமைப்படுத்தப்பட்டுள்ள, மக்களைத்
தொட்டு குணமாக்க இயேசு பாலகனாக
எம்மத்தியில் வர இருக்கின்றார் எனும்
நம்பிக்கை தோன்றுகின்றது. இவ்வருடம்
எம்மால் புத்தாடைகள, பட்டாசுகள்,
வண்ண வண்ண மின்விளக்குகள்,
அழகான அலங்காரங்கள், பலவித
பலகாரங்கள், போன்றவற்றில்
கவனம் செலுத்தாமல் நம்முடன்
வாழும் ஏழை எளிய ஓரங்கட்டப்பட்ட
தனிமைப்படுத்தப்பட்ட மக்களுக்கு
இயேசுவின் பிறப்புச் செய்தியைப் பகிர
அனைவரும் அழைக்கப்படுகின்றோம்.

இயேசுவின் பிறப்பு மானிடத்திற்கே
ஒரு மாபெரும் அடையாளமாய் இருந்தது.
வானத்தில் விண்மீன் தோன்றியது.
வானதூதர்கள் வாழ்த்துப்பாடினர்.
அன்று இடையர்களுக்கு நள்ளிரவில்
செய்தி கொடுக்கப்பட்டபொழுது அவர்
கள் அளவில்லா மகிழ்ச்சி அடைந்த
தைப்போல, இயேசுவின் பிறப்பு
இந்தக் காலத்திற்கு ஒரு விடியலாக
அமைகின்றது. பல நூறு ஆண்டுகளாக
மக்கள் மெசியா வருவார் நம்
பாவங்களிருந்து நம்மை மீட்பார்
என்று நம்பியது போல, இன்றும்
மக்களையும் உலகத்தையும் கொள்ளை
நோயிலிருந்தும், அழிவில் இருந்தும் ,
இயற்கை அனர்த்தங்களில் இருந்தும்,
மீட்கும் பிறப்பாக இயேசுவின் பிறப்பு
அமைய வேண்டும் என்று எதிர்பார்த்துக்
காத்துக்கொண்டிருக்கிற மக்களுக்கு
நிச்சயம் விடுதலை அளிக்கும்
ஒன்றாக இயேசு பாலகனின் பிறப்பு
அமைந்துள்ளது. அத்துடன் இயேசு
பாலகன் தாழ்நிலையிலுள்ள எல்லா
மக்களையும் கவர்ந்திழுக்கவும்
அவர்களின் மனித இதயங்களை
ஆட்கொள்ளவும் அவர்களுக்கு
அன்பையும் இரக்கத்தையும்
கனிவையும் கொடுக்கவும்
பாலகனாக மீண்டும் பிறக்கவுள்ளார்.
தொழுநோயாளியை குணப்படுத்திய
இயேசு இந்த கொடிய நோயிலிருந்து
எமக்கு விடுதலை அளிக்க எம்மை
தேடிவருகின்றார். நோயுற்றவர்களை
அன்று தேடி வந்த அற்புத பாலகன்,
தெய்வீக குணமளிக்கும் இயேசு பால
கனின் பிறப்பானது இறைவனால்
எமக்கு கொடுக்கப்பட்ட ஆசீராகக்
கருதுவோம்.

இயேசுவின் பிறப்புச் செய்தி எல்லா
மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும்
நற்செய்தி (லூக்: 2: 10). வாக்கு மனித
ரானார் நம்மிடையே குடிகொண்டார்
என்று புனித யோவான் கூறுவதைப்
போன்று பாலன் இயேசு கொரோனா
தொற்றுக்குள்ளாகிய மனிதர்களோடு
குடிகொள்ளவும் தனிமைப்படுத்தப்பட்
டுள்ள மக்களை, பாதிக்கப்பட்டுள்ள
ஏழைகளை அரவணைக்கவும், எளிய
நிலையில் உள்ளவரை ஆதரிக்கவும்,
ஒடுக்கப்பட்டவர்களுக்கு விடுதலை
அளிக்கவும், ஓரங்கட்டப்பட்டுள்ள
கொரோனா நோயாளிகளுக்கு வாழ்வு
கொடுக்கவும், ஒளியான இயேசு பால
கன் நம் வாழ்வில் ஒளிகொடுக்க
எம்மைத் தேடிவருகின்றார். ஆகை
யால் இயேசுவின் பிறப்பு உண்ண
உணவின்றி உடுக்க உடையின்றி,
இருக்க இடமின்றி, வாழும் மனுக்
குலத்தினரையும், புறந்தள்ளப்பட்டுள்ள,
ஒடுக்கப்பட்ட மக்களுடைய வாழ்வில்
இயேசு பாலகன் பங்கெடுக்க இருப்பதை,
அவருடைய தெய்வீகப் பிறப்பு எமக்கு
எடுத்துரைக்கின்றது. மேலும் கொரோனா
நோயினால் சமூகத்தின் கடை நிலைக்கு
தள்ளப்பட்டுள்ள வறுமையில் வாடும்,
உணவிற்காக அலையும் மக்களுக்கு
விண்ணின் மைந்தனுடைய பிறப்பு
மாபெரும் மகிழ்ச்சியூட்டும் பிறப்பு விழா
மட்டுமன்றி உலகில் அவருக்கு உகந்த
மக்களின் உள்ளங்களில் அமைதி
உண்டாகவும் கடவுள் நம் அனைவ
ரோடும் இருக்கின்றார் என்பதை எடுத்
தியம்பும் விழாவாகும். எனவே இயேசு
வின் பிறப்பு ஒரு தனி மனிதனின் பிறப்பு
மட்டுமன்றி மாறாக எல்லோரையும் அர
வணைத்து ஒட்டுமொத்த மானிட சமூ
கத்தையும் புதுப்பிறப்பிற்கு அழைத்துச்
செல்லும் ஒரு நிகழ்வு. சாவின் நிழலின்
பிடியில் சிக்குண்டு தவிக்கும் மானிட சமூ
கத்திற்கு ஒரு விடியலைத் தரும் மாபெரும்
மகிழ்ச்சியூட்டும் மேன்மைமிகு பிறப்பு
விழாவாகும்.

## நல்ல மனிதர்...?

ஆதியில் ஆண்டவன்
இந்தப் பூமியைப் படைத்தானே
அவன் ஆசையைப் போலவே
இந்தப் பூமி அமையலையே
ஆண்டவன் ஆசையே
இங்கு பொய்யாய் போய்விடில்
மனிதரின் ஆசைகள்
மெய்யாவது சாத்தியமா?

நாம் இத்தனை நூற்றாண்டுக
ளாக இந்த நவீன உலகத்தைக் கட்டி
யெழுப்ப உழைத்திருக்கிறோம் என்றால்,
இது அறிவியலின் வெற்றி என்றால், இதில்
உண்மை என்பது ஒரு பாதியே.

நவீன தொழில்நுட்பங்களைக்
கொண்டு மனிதர்கள் செய்தவை அனைத்
தும் மகத்தான வெற்றியைப் பெற்றுவிட்
டன. ஆனால், தொழில்நுட்பத்தின் மீது
வெற்றிகரமாகச் செயற்பட்ட நம் அறிவியல்
மனிதர்களோடு ஒப்பிடுகையில், மனித
நேயத்தோடு ஒப்பிடுகையில் பரிதாபகர
மாகத் தோற்றுவிட்டது.

அறிவியலின் ஆற்றலைப் பொறுத்
தவரை நவீனத்தைப் புகுத்தும் தொழில்
நுட்பங்களைப் படைத்து வென்றுவிட்
டோம். ஆனால் சீர்மிகு சமுதாயம் படைக்க
முடியும் என்ற வாக்குறுதியில் தோற்று
விட்டோம். நம் வசதிக்கென்று தொழில்
நுட்பங்களைப் மட்டும் படைத்து இயந்
திரங்களாகிப் போனோம். ஒரு நல்ல
மனிதரையாவது மனித சமூகம் உரு
வாக்கும் என்று நம்மால் உத்தரவாதம்
தரமுடியுமா? ஆற்றல் படைத்தவர்களாக
நாம் வளர்ந்துவிட்டோம். மனிதர்களாக
உயர்ந்து விட்டோமா?
இல்லை. இல்லவே இல்லை.
இதற்காகத்தான்

**“மண்ணுலகில் நின்று
தேவன் இறங்கி
வருகிறார்,**

## இயேசுவின் பிறப்பு.... (11ம் பக்கத் தொடர்ச்சி)

இன்றைய யதார்த்தமாகக் கொள்ள முடிகிறது. உலகை மிகவும் பாரியளவில் அச்சுறுத்திவரும் கொரோனா வைரஸ் பல்லாயிரக்கணக்கிலான மனிதஉகளின் வாழ்வைப் பறித்துள்ளதோடு பல மனிதர்களை அவர்கள் குடும்பத்தாரிடமிருந்து பிரித்து தனிமைப்படுத்தியுள்ளது. மனிதர்க ளின் சாதாரண வாழ்வியல் ஓட்டத்தையும், உலகின் இயக்கத்தையும் பலவழிகளிலும் முடக்கி யுள்ள அதேவேளையில் இயற்கை அன்னையை மனிதனின் கையிலிருந்து ஓரளவு பாது காத்துள்ளது. கொரோனா வைரஸின் தாக்கம் மனிதன் மட்டில் இயற்கையின் வெளிப்பாடா? அல் லது மனிதனை நோக்கிய மனிதனின் தொழிற்பாடா? என்ற கேள்விகள் பலராலும் முன்வைக் கப்படுகின்றது. இத்தகைய ஒரு துன்பியல் நிலையில் வாழும் மனிதர்களுக்கு நம்பிக்கையை கொடுப்பதுதான் கிறிஸ்து பிறப்பு பெருவிழா. ஏனெனில் இந்த உலகத்திலே எங்களை ஏற்றுக்கொள்ள யாருமில்லையே, எங்கள் உணர்வுகளைப் புரிந்து கொள்வார் ஒருவர் கூட இல்லையே என்று மனவிரக்தியோடும், வேதனையோடும் எல்லாவற்றையும் இழந்து வறுமை யில் வெறுமையோடு வாழும் எம்மக்களுக்கு ஆறுதல் தருவது இயேசுவின் ஏழைக் கோலம் தானே. இன்று வாழ்வுக்காக போராடிக்கொண்டிருக்கும் மக்களுக்கு, அன்றாட உண வுக் காக, வேலைவாய்ப்புக்காக அலைந்து திரியும் மனத உள்ளங்களுக்கு இயேசுவின் பிறப்புச் செய்தி ஒரு உற்சாகத்தையும் நம்பிக்கையையும் கொடுக்கும் என்றால் மிகையாகாது. இந்த ஏழை களை தன்னுள் உள்வாங்க, தன் அன்பை அவர்களுக்கு கொடுத்து அவர்களை ஆறுதல் படுத்த அவர் மீண்டும் பிறப்பது துன்புறும் எம்மக்களின் தற்கால இல்லக்குடிசைகளிலும் உள்ளக் குடிசைகளிலுமே. கிறிஸ்து பிறப்பு விழா கடவுளின் பேரன்பை எமக்கு வெளிப்படுத்தும் ஒரு மகத்தான பெருவிழா. கிறிஸ்துவின் பிறப்பு எமக்கு அருளும் கொடைகள் அன்பு, மகிழ்ச்சி, அமைதி என்பனவாகும். இக்கொடைகள் நிலையாக எம்மில் தங்க வேண்டுமாயின் நாம் கடவுளின் திருவு ளத்திற்கு கிழ்ப்படிவுள்ளவர்களாக மாறவேண்டும். ஏழைகளில் இயேசுவை கண்டு மகிழும் நிலையை, துன்புறும் எம்சகோதரரின் முகத்தில் இயேசுவின் பிரசன்னத்தை கண்டு உறவுகொள்ளும் உன்னத நிலையை எங்களில் உருவாக்கிக் கொள்ள வேண்டும். இயேசு துன்புறும் எங்கள் உள்ளக் குடிசையில் வந்து பிறக்க எங்களை தயார் செய்து அமைதியின் வேதனை எங்களில் ஏற்று உலகில் அமைதியை காண புறப்படுவோம்.

## விண் மண்ணில்



காலம் கனிந்தது. கடவுளின் கருணை விழி மலர்ந்து, கன்னியின் கருவில இறைவனின் திருமகன் முழு உருப்பெற்றார். மண்ணுலகில் விண் ணக வேந்தன் பிறக்கும் நேரம் வந்தது. மண்ணி னின்று முதல் மனிதன் உருவாக்கப்பட்டான் என்ற இஸ்ரயேலின் தத்துவத்திற்கு இணங்க மானிடரின் தலைமகனாக இயேசுவும் மண் வாசனையோடு பிறக்கிறார். சுற்றுச் சூழலையும், அதில் வாழும் மானிடரையும் தம் திரு உடலால் தொட்டுத் தூய்மை யாக்குகிறார். ஒளி உதித்தது! பழி தொலைந்தது! வழி பிறந்தது! விழி திறந்தது! வரம் பலித்தது! அறம் பிழைத்தது! அருள் மலர்ந்தது! நெறி தவழ்ந்தது! இறைவன் சமுதாயத்தில் முகவரி இல்லாத ஏழைக ளோடு கரம் கோர்த்து உலகைச் சந்திக்கிறார். கிறிஸ்து வின் பிறப்பு நமக்கு விண்ணக வீட்டின் திறப்பாக அமையுமா? கிறிஸ்து பிறப்பு வாழ்த்துக்கள்.

# சமூக ஒன்றிப்பை ஏற்படுத்தும்

# கிறிஸ்மஸ் கால "ஒளிவிழாக்கள்"



கிறிஸ்மஸ் வந்துவிட்டால் எங்கும் மகிழ்ச்சி தாண்டவமாடும் புத்தாடை புனைவது, கிறிஸ்மஸ் குடில் அமைப்பது, கிறிஸ்மஸ் மரம் உருவாக்குவது, அலங்காரங்களால் ஆலயங்களையும் வீடுகளையும் நிரப்புவது, ஆடம்பரமான இரவுத் திருப்பலியில் பங்குகொள்வது, விதம் விதமான உணவுப்பொருட்கள் தயாரிப்பது உறவினர் இல்லங்களுக்குச் சென்று வருவது, பட்டாசு வாணங்கள் வெடிப்பது.. என்று ஒரு தொகையான மகிழ்ச்சி கொட்டிக்கிடக்கும் காலம் இதுவாகும். குறிப்பாக சிறுவர்களின் எல்லையில்லா மகிழ்ச்சியின் காலம் இதுவென்று கூறலாம். உலகிற்கு ஒளியாக வந்த இறைமகன் இயேசுவின் பிறப்புவிழா உலகெங்குமே இவ்வாறான மகிழ்ச்சியை கொடுக்கின்றது. டிசம்பர் மாதம் முழுவதையுமே இவ்வாறான மகிழ்ச்சி நிரம்பிய மாதமாக உலக வர்த்தக சூழல் மாற்றி விட்டிருக்கின்றது. இந்த மகிழ்ச்சி சாகரத்தில் நடைபெறுகின்ற முக்கியமான மற்றொரு நிகழ்ச்சியாக பங்குகள் தோறும் நடைபெறுகின்ற 'ஒளிவிழா' நிகழ்ச்சிகளைக் குறிப்பிடலாம்.

பங்கு மக்களை ஆன்மீக ரீதியாகவும், கலாசார ரீதியாகவும் ஒன்றிணைக்கின்ற மிக முக்கிய விழாவாக ஒளிவிழா திகழ்கின்றது அதுபற்றி ஓர் பார்வையை இக்கட்டுரை தருகின்றது.

ஒளிவிழாக்கள் அண்மைக் காலங்களில் எல்லாப் பங்குகளிலும். தொழில் தாபனங்கள் , பாடசாலைகள் எங்கும் பெரும்பாலும் கொண்டாடப்படுகின்றது. இந்தவருடம் 'கொரோனா' இதற்குத் தடையாக அமைந்தாலும் ஆங்காங்கே சிறிய அளவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. 'ஒளிவிழா' என நாம் கொண்டாடும் கலை நிகழ்வு ஐரோப்பாவில் 'கரோல்' நிகழ்வு என்ற பெயரிலேயே அழைக்கப்பட்டு வந்தது. குழுவாக இணைந்து பல்வேறு புகழ்ச்சிப் பாடல்களைப் (கரோல் கீதங்கள்)பாடுவதும், பாடல்களுக்கிடையே விவிலிய வாசிப்பு இறையியல் சிந்தனைகள் என பரிமாறப்படுவதாகவும் மட்டுமே இந்நிகழ்வுகள் நீண்டகாலமாக நடைபெற்றன. ஈழத்திலும் காலனித்துவ காலத்தில் அவ்வாறான கரோல் நிகழ்வுகளே நடைபெற்றன. ஆனால் இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப் பின்னர் பல்வேறு கலை நிகழ்வுகளும் நடைபெறுகின்ற களங்களாக, ஒளிவிழாக்கள் மாற்றமடைந்தன. குறிப்பாக எமது நாட்டில் பண்பாட்டுமயப்பட்ட தமிழ் காலாசாரக் கூறுகள் இணைந்த நிகழ்ச்சிகளாக மாற்றமடைந்தன.

இந்த ஒளிவிழாக்கள் கிறிஸ்மஸ் காலத்தில் நடைபெறுகின்ற கலைநிகழ்வுகளின் தொகுப்பாக அமைந்திருந்தாலும் இந்த விழாக்களுக்காகவே பங்குகளில் கலைநிகழ்வுகள் பயிலப்பட்டன. பலர் அரங்கேறுகின்ற முதற் களங்களாக ஒளிவிழாக்கள் இருந்துள்ளன. பெற்றோர் தமது பிள்ளைகளை மேடையேற்றி அழகு பார்க்கின்ற அரங்கப் பெருநிகழ்வாக ஒளிவிழாக்கள் இருந்துள்ளன. பாடுதல் ஆடுதல், நாடகம் நடித்தல், வில்லுப்பாட்டிசைத்தல், மேடைப்பேச்சு நிகழ்த்துதல்.. எனப் பல ஆற்றுகைக் கலைகளுக்குரிய களமாக இந்த விழா அமைந்தமையை யாவரும் அறிவர். அது மட்டுமன்றி கிறிஸ்து பிறப்பு விழாவையொட்டி சிறுவர்களுக்காக போட்டிகள் நடத்துதல், அவற்றுக்கான பரிசளிப்புக்கள் என நீட்சிபெற்று ஒரு பங்குத் தளத்தின் உயிர்ப்பு மிக்க கலை நிகழ்வாக மாற்றமடைந்துள்ளது.

### குழுப்பாடல்கள்

ஒளிவிழாக்களின் இன்றியமையாத நிகழ்வுகளாக 'கிறிஸ்மஸ் கரோல் கீதங்கள்' அமைந்திருந்தன. ஆங்கிலத்தின் பாரம்பரியமான உலகப் பிரபல்யம் பெற்ற 'சைலன் நைற்' (Silent Night) உட்படப் பல பாடல்கள் இந்த நிகழ்வுகளில் பாடப்பட்டன.காலப்போக்கில் பல தமிழ்ப்பாடல்கள் இங்கேயே இயற்றப்பட்டும் தென்னிந்திய பாடல்களை எடுத்தும், பாடுகின்ற இசைக் கச்சேரிகளாக அவை மாறின. இதனால் பாடுதல் இசைக்கருவிகள் இசைத்தல் ஒலிப்பதிவு செய்து அவற்றினை இறுவெட்டுக்களாக வெளியிடுதல், எனத் தொடர் செயற்பாடுகள் வளர்ச்சி பெற்றன. மேற்கத்தைய இசை மரபில் மட்டுமன்றி எமது கீழைத்தேய இசைமரபி யேயே பாடல்கள் உருவாக்கப்பட்டன. திருமறைக் கலாமன்றத்தின் 'குடிலின் கானங்கள்' 'தாலேலோ' 'புல்லணைச்சுடர்' மன்னார் கலையருவியின் 'கிறிஸ்மஸ் இராகங்கள்', ஏ.ஆர்.விஜயகுமாரின் 'வந்தாரே வந்தாரே'... என பல இசை இறுவெட்டுக்கள் இதனை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கம் பெற்றன.

### நடனங்கள்

ஒளிவிழாக்களில் முக்கிய பங்களிப்புச் செய்த மற்றொரு கலை நிகழ்வாக நடனங்கள் அமைந்திருந்தன. பரத நாட்டியத்தினைப் பயிலும் மாணவர்கள் கிறிஸ்தவ பாடல்களுக்கு ஆடல் உருப்படிகளை உருவாக்கி ஒளிவிழாக்களில் தனி நடனங்களையும் குழு நடனங்களையும் நிகழ்த்துவர். அதேவேளை கிராமிய முறையிலும், மேற்கத்தைய முறைமையிலும் நடனம் ஆடுவதனையும் வழக்காகக் கொண்டுள்ளனர். நடன நாடகங்கள் உருவாகுவதற்கான களங்களாகவும் ஒளிவிழாக்களே இருந்துள்ளன. முதன் முதலாக கிறிஸ்தவ நடன நாடகத்தினை அருட்திரு நீ.மரியசேவியர் அடிகள் எழுதி திருமறைக் கலாமன்றத்திற்கூடாக 'அருளும் இருளும்' என்ற பெயரில் 1971 ஆம் ஆண்டு மேடையேற்றினார். அதனைத் தொடர்ந்து நடன நாடகங்கள் கிறிஸ்தவ மரபில் உருவாகத் தொடங்கின.

### வில்லிசை (வில்லுப்பாட்டு)

எமது தமிழ்ப் பாரம்பரியத்தில் கதை சொல்லும் கலை வடிவமாகக் காணப்படுவது 'வில்லிசை' ஆகும் நடுவர் ஒருவர் வில்லிசைத்துக் கதைகூற சீர்கள் சூழ இருந்து கதை கேட்கின்ற பாடலும் உரையும் நகைச் சுவையும் இணைந்த வடிவம். இந்து சமயக் கதைகளை கோவில்களில் சொல்லுகின்ற இந்தப் பாரம்பரியம் கதாப்பிரசங்கம் போன்ற கதைசொல்லும் முறையில் இருந்து உருவாகியதாகக் குறிப்பிடுவர். இம்முறையைப் பயன்படுத்தி ஒளிவிழாக்களில் கிறிஸ்துவின் பிறப்பு வரலாற்றினையும் சமகாலப்பிரச்சனைகளையும் பேசுகின்றவையாக மேடையேற்றுவர். நகைச்சுவை நிறைந்த இந்தக் 'கதைசொல்லும் கலையைப்' பார்ப்பதற்குப் பலரும் விரும்புவர்.

**காவலூர் யோவான்**

### நாட்டுக் கூத்துக்கள்

தமிழர்களின் தேசிய நாடக வடிவமாகக் கொள்ளப்படுகின்ற கூத்துவடிவங்கள் புனிதர்கள் வேத சாட்சிகளின் வரலாற்றினைக் கொண்டதாக நிகழ்த்தப்படும் பாரம்பரியத்தினை அனைவரும் அறிவர். ஆனால் மிகப்பழைய காலத்தில் இருந்தே கிறிஸ்மஸ் காலங்களில் கூத்துக்கள் மேடையேற்றும் வழக்கமும் இருந்துள்ளது. ஒளி விழாக்கள் எனப் பெயரிட்டு விழாக்கள் கொண்டாடப்படுவதற்கு முன்னமே இவ்வழக்கம் இருந்துள்ளது.. பழம்பெரும் கிறிஸ்தவ கூத்தாகிய 'மூவிராசாக்கள்' இக்காலத்துக்குரிய முக்கிய கூத்தாகக் காணப்படுகின்றது. தமிழில் மலையாளத்தில், சிங்களத்தில் (ஈஜதுங் கட்டுவ) எல்லாம் இக்கூத்துக்கள் இருந்துள்ளன. மன்னார் பிரதேசத்தில் வழங்கி வருகின்ற மூவிராசாக்கள் கூத்தானது மிகவும் பழமையானது. அவ்வாறே 1856 அளவில் கரையூரைச் சேர்ந்த புலவர் சந்தியோகு அவர்களும் மூவிராசாக்கள் என்ற கூத்தினை எழுதியுள்ளார். அவ்வாறே மட்டக்களப்பில் திரவியம் இராமச்சந்திரன் அவர்கள்'பாலன் பிறந்தான்' என்ற வடமோடிக் கூத்தினை எழுதியுள்ளார். அவ்வாறே நீ.மரியசேவிய அடிகளின் 'மூவேந்தர்கள்,' பாலதாசின் 'ஏமாந்தான் ஏரோதன்', 'இடமில்லை'... எனப் பல கூத்துக்களை உதாரணமாகக் குறிப்பிடலாம். முழு இரவும் மேடையேற்றப்பட்ட கூத்துக்கள் ஒளிவிழாக்களில் குறுங்கூத்துக்களாக அரங்கேறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது

### நாடகங்கள்

ஒளிவிழாக்களின் இறுதி நிகழ்வாகவும் சிறப்பு நிகழ்வாகவும் நாடகங்கள் இருந்துள்ளன. நன்கு ஆயத்தம் செய்து நெறிப்படுத்தும் நாடகங்கள் பல எழுந்தமானமாக அதிலேயே வசனம் பேசி நடிக்கின்ற நாடகங்கள் வரைஒளிவிழாக்களில். மேடையேற்றப்படுவதுண்டு. இந்நாடகங்களை இரண்டு வகையாகப் பாகுபடுத்தலாம் ஒன்று கிறிஸ்து பிறப்பு வரலாற்றினை சொல்லுகின்ற நாடகங்கள் உதாரணமாக மரியசேவியர் அடிகளின் 'அமைதியின் அண்ணல்,' 'கன்னிபெற்ற கடவுள்', ஆசிரியர் ஆனந்தராஜாவின் 'பாத காணிக்கை', கவிஞர் வாகரை வாணனின் 'ஒரு பூ மலர்கிறது' யோண்சன் ராஜ்குமாரின் 'புதுயுகத்தின் பூபாளம்'...போன்ற பல நாடகங்களைக் குறிப்பிடலாம்.

அதேவேளை மற்றொரு நாடகப்போக்காக சமகாலப்பிரச்சினைகளைப் பேசுகின்ற நவீன நாடகங்கள் இக்காலத்தில் அதிகமாக ஒளிவிழாக்களில் அரங்கேறின. குறிப்பாகக் கடந்த கால் நூற்றாண்டுகளாக எமது மண்ணில் நடைபெற்ற யுத்தம் இடப்பெயர்வுகள் உயிரிழப்புக்கள் காணாமல் போதல்.. என்ற துயர் மிகுந்த நாட்களில் மக்களை ஆற்றுப்படுத்தும் நாடகங்கள் பலவும் எழுதப்பட்டு ஒளிவிழாக்களில் மேடையேற்றப்பட்டன. கவிஞர் நாவண்ணனின் 'தெருமாறிய திருக்குடும்பம்' ஆசிரியர் பிலிப்நேரி அவர்களின் 'இருள் அகலுமா' 'புதுவாழ்வு' பி.ஏ.சி. ஆனந்தராஜா அவர்களின் 'விடியலின் கீதம்' அழகராஜாவின் 'பயணங்கள்,' யோண்சன் ராஜ்குமாரின் 'யாழ்ப்பாணத்தில் தாத்தா'.. போன்ற பல நாடகங்களை உதாரணமாகக் குறிப்பிடலாம். இந் நாடகங்கள் ஆற்றுப்படுத்தலாக மட்டும் அமையாமல் சமூகப் பிரச்சனைகளைப் பேசிய வலுவுள்ள வடிவங்களாகவும் இருந்தன.

### கிறிஸ்மஸ் தாத்தா

ஒளிவிழாக்களின் உச்ச நிகழ்வாகக் கிறிஸ்மஸ் தாத்தா வருவதும் நடனம் ஆடுவதும் பரிசில் வழங்குவதும் என்ற நிகழ்வு காணப்படும் கிறிஸ்மஸ்சின் அடையாளங்களில் ஒன்றாகக் கிறிஸ்மஸ் தாத்தா கொள்ளப்படுவதனை நாம் அறிவோம். ஒளிவிழாக்களில் இந்நிகழ்வு முக்கியத்துவம் பெறுவது மட்டுமன்றி சிறுவர்களுக்கு 'பிறருக்குக் கொடுப்பதில்' உள்ள மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்ற ஒன்றாகவும் அமைகின்றது.

இவ்வாறு கிறிஸ்மஸ் காலங்களில் நிகழ்த்தப்படும் ஒளி விழாக்களில் நிகழ்வுகள் நடைபெறுகின்ற அதேவேளை நிகழ்வுக்கு விசேடமாக அழைக்கப்படும் விருந்தினர்களின் உரை, அருட் தந்தையர்களின் அருள் உரை, என அனைத்தும் சமூகத்தினை நல்வழிப் படுத்துவனவாக அமைகின்றன. ஒட்டு மொத்தமாக நோக்குகின்றபோது பங்குச் சமூகத்தின் ஒன்றுபட்ட இந்த விழாவானது

- இறைமகன் இயேசுவின் பிறப்பின் நாளை இற்றைப்படுத்துகின்றது.
- அதன் அர்த்தப்பாடுகளை வலியுயுறுத்துகின்றது, மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றது,
- சமூகத்தினை ஒன்றுபடுத்துகின்றது,
- திறமைகளை வெளிப்படுத்தும் களமாகின்றது,
- சமூகப்பிரச்சினைகளை பேசுகின்ற, விமர்சிக்கின்ற களங்களாகின்றது,
- பங்குமக்கள் தமது அன்பினையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்ளும் சந்தர்ப்பமாகிறது,
- திருநிலையினரும், பொது நிலையினரும் சந்திக்கின்ற இடமாகிறது,
- பாரம்பரியங்களைப் பேணுகின்ற சந்தர்ப்பமாக அமைகிறது

இத்தகைய விழாக்களை நன்கு திட்டமிட்டு மேற்கொள்ளுகின்ற போதே மேற்கூறிய நன்மைகளை அடையக்கூடியதாக இருக்கும் சில இடங்களில் ஏனோ தானோ என்று செய்யப்படுவதும், சமூகப்பங்களிப்பு மிகவும் குறைவாகவும், முன்னாயத்தமின்றிய செயற்பாடுகளாகவும், போட்டிமனப்பாங்குடன் குழப்பங்களை ஏற்படுத்துவனவாகவும் மாறிவிடுவது துரதிஸ்டவசமானது. எனவே பங்குத்தந்தையர்களும் மக்களும், இவ்விழாவின் சிறப்புக்களையும் நன்மைகளையும் நன்குணர்ந்து அர்த்தமுடையவையாக இதனை மாற்றுவதற்கு முற்படவேண்டும்

# துயரப் புயல் வீசினும் நினைவுத் தடத்தை மீள நினைந்து...




மெல்லத் தமிழ் இனி வாழும் என்பதை
நிலைத்திடச் செய்த மரியசேவியர் அடிகளார்
சாதனைத் தமிழன் விருது பெற்று
தன்னிகரில்லாத் தமிழனாய் தலை நிமிர்ந்தார்



பணி தொட்டு அமருமுன்
ஆசிபெற்று நிமிர்ந்தார்
ஆயரிடம் ஆளுநர்:



தமிழர் தம் அரசியல் சமூக பொருளாதார
வாழ்வு மேம்பட இத்தாலிய தூதுவருடன்
யாழ் ஆயரின் சமகாலப் பகிர்வு..




இலக்கியப்
பணியின்
ஆளுமைக்கு
யாழ் ரத்னா
விருது பெற்று
யாழ் திருஅவைக்கு
பெருமை சேர்த்தார்
அருட்பணி
இராசேந்திரம் ஸ்ராலின்
அடிகள்



நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீதான அகோரத்
தாக்குதலில் இன்னுயிர் நீத்த தமிழ் நெஞ்சங்களை
நினைவுகூரும் 25ம் ஆண்டு நிறைவு நினைவுநாள்




நற்கருணைத் தியானத்தில் தினமும் ஈடுபட்டு
பக்தி வாழ்வு நாம் நலமே பெற
மரியன்னை பேராலயத்தில் எழுந்தது
நற்கருணைச் சிற்றாலயம்



**வைரசுக்குள்ளும்
இறைமறை விசுவாசம்
கைநெகிழோம்**



கொரோனா தொற்றுக் காலத்தில் ஆன்மீக வாழ்வில் மக்களை
நிலைநிறுத்த ஆயர் இல்லத்திலிருந்து நேரடி ஒளிபரப்பாகும்
ஞாயிறு திருப்பலிகள்



கொழும்பு உயர்
மறைமாவட்டத்தின்
துணை ஆயராகும்
பேறுபெற்ற
யாழ் மண்ணின்
மைந்தன்
பேரருட்திரு அன்ரன்
ரஞ்சித் ஆண்டகை



பல்துறை விற்பன்னராய் கத்தோலிக்க
கலைப்பணியில் தடம்பதித்து
**"தர்மபிரபாஷ்வர"** விருது பெற்ற
பொதுநிலையினர்
இசிதோர் மரியதாஸ்ஜெயசீலன்
மற்றும் பிலோமினா ஜேசுராசா



யாழ் மறைமாவட்டம், மன்னார் மறை மாவட்டம் திருநிலையினர்,
பொதுநிலையினர் விசுவாச வாழ்வில் வேரூன்றி வாழ கோதுமை
மணியான இறைபணியாளர் தம் வாழ்வை வரைந்த
வரலாற்று ஏடு வெளியீடு

**2020**
**மீள் பார்வை**



யாழ் மண்ணில்
திரு அவை
உயிர்த்திட
தன்னையே
உருக்கிய
முதலாவது ஆயர்
அதிவணக்கத்துக்குரிய
பெற்றகினி
ஆண்டகை
ஆயர் இல்ல
வளாகத்தில்
சிலையாக
நிமிர்கிறார்



200 ஆம் ஆண்டு நிறைவில் நிலைக்கும் திருக்குடும்ப கன்னியர் சபை



நதிகள் சங்கமிப்பது கடலில்.. மதங்கள் சங்கமிப்பது கடவுளில்..
மதங்களின் மாண்பு போற்றும் சர்வமதக் கருத்தமர்வு



குருத்துவ உருவாக்கலில் பன்னெடுங்காலம் நிமிர்ந்து நிற்கும் யாழ் மண்ணின்
புனித மடுத்தீனார் குருமட சிற்றாலயம் புதுப்பொலிவுடன்...

# 30ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**திரு. B.S. நிக்கலஸ்**
(ஓய்வு நிலை அதிபர் )



அமரர்
**திருமதி. மேரி றோசம்மா நிக்கலஸ்**
(ஓய்வு நிலை ஆசிரியை)

"வாழ்ந்தாவும் இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்கள் "
(உரோ 14:5)

கண்ணின் மணியாக காலமெல்லாம் காத்தவர்களே!
கருத்தோடு வாழும் வழிகாட்டிச் சென்றவர்களே
எண்ணத்தில் என்றும் இறையன்பை வளர்த்தவர்களே
உண்மை நெறி வாழும் வழியைக் காட்டியவர்களே
தன்மை மிகு உயர் வாழ்வு எம்மவருக்கீந்தவர்களே
பாரினில் பல்லாண்டு வாழ்ந்து பரமனின் பாதம் அடைந்தவர்களே
நித்தமும் வான் வீட்டில் இளைப்பாற இறைவனிடம்
வேண்டுகின்றோம்.

Mr.Mrs, P.J.Patrick
Swarth Lane,
Jaffna

AD-86

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

# இறை இல்லத்தில் ஓர் ஆண்டு

மலர்வு
23 . 06 . 1939



உதிர்வு
28 . 12 . 2019

அமரர்
**திருமதி பிலோமினம்மா யோண் பெப்ரிஸ்**
(செல்லமணி)
மண்டைதீவு

ஆண்டொன்று ஆனபோதும்
ஆறவில்லை எம் துயரம்
ஐயாவின் இறப்பின் பின்னால் 20 ஆண்டுகள்
கண்ணின் மணிபோல் எமை நாளும்
கலங்காமல் என்றும் நீர் காத்தீரே
உங்களின் நினைவு இன்றும் எம்
உணர்வுகளோடு வாழ்கின்றது.
கனவிலும் நினைவிலும் கனிவான
உம் இன் முகமே
நீர் காட்டிய பாதை இன்றும்
மறையாமல் இருக்கையிலே
நீர் மட்டும் மறைந்ததேனோ அம்மா...

உமது ஆன்மா இறை இல்லத்தில் அமைதி காண தினமும்
இறைவனை வேண்டுகின்றோம்.

இல 88.A, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்

AD- 91

இவரின் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

# 31ம் நாள் நினைவில்

பிறப்பு
05 . 01 . 1941



இறப்பு
04 . 12 . 2020

AD

அமரர்
**மரியநாயகம் ஆசீர்வாதம்பிள்ளை**

அப்பா!
உம் பிரிவின் துயர்
எரிகிறது எம் நெஞ்சில்
நீங்கள் இனி இல்லை
என்னும் போது
துயிலுற இயலவில்லை
உங்கள் முகமும்
உடனிருப்பும்
எப்படி மறப்போம்

குடும்பத்தின் விளக்காய்
சலனமற்று எரிந்தீர்களே
இறைவன் திருவடியிலும்
தீபமாகுங்கள்
தீராத அன்புடன்
பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமகள்,
பேரப்பிள்ளைகள்

முல்லைத்தீவு

**எம் இறந்த உறவுகளின்
நினைவு நாட்களை
இப்பக்கத்தில் பிரசுரிக்கலாம்**

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
19 . 07 . 1946



இறப்பு
04 . 12 . 2019

AD88

அமரர்
**திருமதி பி. செபமாலையம்மா**
(நேசமணி)

அம்மா
வாழ்வெல்லாம் வேண்டி
காத்திருந்து கிடைத்ததுபோல்
ஓர் உறவானீர்
அமைதி பூண்டபோதும்
மிகத்தீர்க்கமான ஒரு தாயானீர்
மொழிகடந்து நீண்டு விரிகிறது
உங்கள் பிரிவு
பார்க்கும் திசையெல்லாம் உங்கள் வேதம்
நெஞ்சை விட்டகலாத முகமும்
நேசமும் என்றென்றைக்கும்
இறையை அலங்கரிக்கட்டும்

நவாலி

பிள்ளைகள்

# தேவ மாடத்தின் தெய்வ தரிசனம்



**பேரருட்கலாநிதி
விக்டர் ஞானப்பிரகாசம் (அ.ம.தி)
ஆண்டகை**


ஆயர் விக்டர் ஞானப்பிரகாசம் ஆண்டகை
திருஅவை கோபுரத்தின் உச்சிமீது
ஒளி வீசிய ஞானப் பிரகாசம்
பாசையூர் மண்ணில்
அருள்பெற்ற திருமைந்தன்
பாகிஸ்தான் மண்ணில்
பேரருள் பெற்ற பெருமைந்தன்
நமது உள்ளத்தில் நிலைபெற்று
இறைவன் இல்லத்தில்
அமைதியில் இளைப்பாறும்

**தாயக உறவுகள்**

# விண்ணக பிறப்பின்

## 2ம் ஆண்டு நிறைவில் | 16ம் ஆண்டு நிறைவில்

AD 90



அமரர்
**அந்தோனிப்பிள்ளை ஜோசேப்**

பிறப்பு 18.09.1948 இறப்பு 31.12.2018



அமரர்
**மேரி றொக்சி யோசேப்**

பிறப்பு 09.02.1987 இறப்பு 26.12.2004

"உள்ளம் கலங்க வேண்டாம்
கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள்"

இளமையின் துடிப்புக்கு
முற்றுப்புள்ளியிட்ட ஆழிப்பேரலையும்
முதுமைக்கு விடைகொடுக்க முன் கூட்டியே
மரண வாயிலைத் திறந்து விட்ட பரம் பொருளும் – நீங்கள்
எம்மை விட்டு போனாலும்
எமக்காய் வேண்டிடுவீர் விண்ணகம் வாழும் வேந்தனிடம்.

கோயில் குடியிருப்பு
முல்லைத்தீவு

பிரிவால் துயருறு
மனைவி, பிள்ளைகள்
குடும்பங்கள்

# 9ம் ஆண்டு நினைவலைகள்

தாய் மடியில்
12 . 07 . 1942



இறையடியில்
22 . 12 . 2011

AD 87

அமரர்
**வைத்திய கலாநிதி மரிசலீன்பிள்ளை மரியதாசன் JP**
(பேரின்பம் – வல்வெட்டித்துறை)
சுகாதார வைத்திய அதிகாரி (2001-2011) யாழ் மாநகர சபை

**எங்கள் அன்பே நீங்கள் எங்கே? – உங்களை
காணத் தவிக்கும் உறவுகள் இங்கே!**
(பேரன். அருண்)

'ஆவே மரியா'
72, கோயில் வீதி
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்

கண்ணீர் மல்க
குடும்பத்தினர்

**வாசக நெஞ்சங்களை
வாழ்த்துகின்றோம்**



கையறு நிலையில்
கதிகலங்கி நிற்பினும்
மெய்யுறு இறைவன்
எம்மோடு என்பதால்
அன்பிய ஆண்டில்
அன்புக் கரம் நீட்டி
உயிர்ப்புறும் மக்களாய்
உயர்வோம்!
வாழ்வோம்!
கிறிஸ்மஸ் புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்

# "அஞ்சாதிருங்கள்! துன்பமும் துயரமும் பறந்தோடும்"
## குரு முதல்வரின் கிறிஸ்மஸ் செய்தி



கிறிஸ்துவில் அன்பார்ந்த பாதுகாவலன் வாசகர்களே!

உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி பொங்கும் கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்களையும், அமைதி நிறைந்த புத்தாண்டு ஆசீர்வாதங்களையும் வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.எனது கிறிஸ்மஸ் புத்தாண்டுச் செய்தியாக எனது மட்டுப்படுத்தப்பட்ட சிந்தனைகளிலிருந்து நான் எதையும் கூற விரும்பவில்லை. மாறாக, இறைவாக்கினர் எசாயா வழியாக இறைவன் நமக்குத் தரும் நம்பிக்கையின் வாக்குறுதிகளையே உங்களுக்கு ஞாபகப்படுத்துகின்றேன். என்றுமே பொய்க்காத இவ்வாக்குறுதிகளை அமைதியாக, நம்பிக்கையோடு, செப உணர்வோடு வாசித்துத் தியானித்து உள்வாங்கிக் கொள்ளுங்கள். அயலவர்களோடும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

*“பாலை நிலமும் பாழ்வெளியும் அகமகிழும். ஆண்டவர் மாட்சியையும் நம் கடவுளின் பெருமையையும் அவர்கள் காண்பார்கள். தளர்ந்துபோன கைகளைத் திடப்படுத்துங்கள். தள்ளாடும் முழங்கால்களை உறுதிப்படுத்துங்கள். உள்ளத்தில் உறுதியற்றவர்களை நோக்கி “திடன் கொள்ளுங்கள் அஞ்சாதிருங்கள் இதோ உங்கள் கடவுள் பழிதீர்க்க வருவார். அநீதிக்குப் பழிவாங்கும் கடவுளாக வந்து உங்களை விடுவிப்பார்.” ஆண்டவரால் விடுவிக்கப்பட்டோர் திரும்பி வருவர். மகிழ்ந்து பாடிக் கொண்டே சீயோனுக்கு வருவர்.அவர்கள் முகம் என்றுமுள மகிழ்ச்சியால் மலர்ந்திருக்கும். அவர்கள் மகிழ்ச்சியும் பூரிப்பும் அடைவார்கள்.துன்பமும் துயரமும் பறந்தோடும்.” (எசாயா 35).*

# குருத்துவ வாழ்வில் 57 ஆண்டுகள்

**மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் குருத்துவ அபிஷேக நாள் (21.12.2020)**



ஐம்பத்தேழு அகவை
குருத்துவ வாழ்வில்
ஆயன் உமது நாமம் வாழ்க!
உடல் உள நலன்கள் பலவும் பெற்று
அருள் நிறை வாழ்வில்
நிலைமின்... தொடர்மின்...

# வலைப்பாடு மக்களுக்கு அனர்த்த நிவாரணம்



“புரெவி” புயலினால் வலைப்பாடு கிராமத்தில் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக படகுகள், இயந்திரங்கள், வலைகள், அட்டைப் பண்ணைகள், மற்றும் சிறு தொழில்கள் முற்றாகவும், பகுதி அளவிலும் பாதிக்கப்பட்டுள்ளன.

காலநிலை இன்னும் வழமைக்குத் திரும்பாத காரணத்தினால் தொழிலுக்கு செல்ல முடியாது எந்தவிதமான உதவிகளும் கிடைக்காது மக்கள் வாழ்வாதாரமின்றி வாழ்ந்த நிலையில் பங்குத்தந்தை அருட்பணி அலோய் அடிகளாரின் ஆலோசனைக்கு அமைவாக வலைப்பாடு புனித அன்னம்மாள் ஆலய அருட்பணி பேரவையின் அனுமதியுடன், யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் ஒப்புதலுடன் பேரவையின் சொந்த நிதியில் பங்குமக்கள், தொழிலின் நிமித்தம் கிராமத்தில் தங்கி நிற்கும் குடும்பங்கள், கிராமத்தில் வாழும் பிறமத சகோதர குடும்பங்கள் மற்றும் அயல் கிராமங்களில் உதவி தேவைப்பட்ட குடும்பங்கள் என 400 குடும்பங்களுக்கு ரூபா 3500/- மற்றும் ரூபா 2500/- பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

# புனித மடுத்தீனார் குருமடத்திற்குப் புதிய அதிபர்



யாழ்ப்பாணம் புனித மடுத்தீனார் சிறிய குருமடத்தின் புதிய அதிபராக அருட்பணி A.J. அன்ரனி ஜெயரஞ்சன் அடிகளார் 20.12.2020 பணிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டார். யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி P. J. ஜெபரட்ணம் அடிகளாரின் தலைமையில் காலை நடைபெற்ற திருப்பலியை தொடர்ந்து இந்நிகழ்வு இடம்பெற்றது.

இவரின் பணிக்கு துணையாக அருட்பணி M. A. ஜெராட் அடிகளார் நியமனம் பெற்றுள்ளார். கடந்த பல வருடங்களாக குருமட அதிபராக பணியாற்றி பணிமாற்றம் பெற்றுச்செல்லும் அருட்பணி S.J.C. பாஸ்கரன் அடிகளார் சிறப்பான முறையில் பணியாற்றி பல செயற்றிட்டங்களை முன்னெடுத்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# பெரிய விளான் பங்கிற்கு புதிய பங்குத்தந்தை



பெரியவிளான் பங்குத்தந்தையாக நற்கருணைநாதர் சபையைச் சேர்ந்த அருட்பணி அன்ரனி மேரியன் அடிகளார் யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் P. J. ஜெபரட்ணம் அடிகளார் முன்னிலையில் பணிப்பொறுப்பேற்றுக் கொண்டார். கடந்த 4 ஆண்டு காலமாக பணியாற்றிய நற்கருணை நாதர் சபையைச் சேர்ந்த அருட்பணி A. மனுவல் அடிகளார் மாத்தளை நவசந்நியாச மட அதிபராகப் பணி மாற்றம் பெறுகின்றார்.

# ஆயர் விக்டர் ஞானப்பிரகாசம் இறைவனடி சேர்ந்தார்



பாஷையூர் பங்கை பிறப்பிடமாகக் கொண்டவரும், அமலமரித் தியாகிகள் சபையைச் சார்ந்தவரும், பாகிஸ்தானின் குவேற்றா மறைமாவட்ட ஆயருமாகிய பேரருட்கலாநிதி விக்ரர் ஞானப்பிரகாசம் அமதி ஆண்டகை அவர்கள் 12/12/2020 அன்று பாகிஸ்தானில் இறைவனடி சேர்ந்தார்.

ஆண்டகையின் மேய்ப்புப்பணி வாழ்விற்காக இறைவனுக்கு நன்றி கூறி யாழ் ஆயரினால் இரங்கல் திருப்பலியானது கொழும்புத்துறை புனித டி மசனெட் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

NVQ
PATRICIAN INSTITUTES
DON BOSCO
COMPUTER EDUCATION
பயிற்சி நிறைவில் அரச அங்கீகாரம் பெற்ற
சான்றிதழ் வழங்கப்படும்
தகவல் தொடர்பாடல் மற்றும் ஆங்கில பாடநெறி
Computer Application & English Course
காலம்
03 மாதங்கள்
NVQ Level 3 ICT
இடம்
பற்றீசியன் இன்ஸ்டிரியூட்
பற்றீக்ஸ் வீதி யாழ்ப்பாணம்
தொடர்புக்கு
பணிப்பாளர்:-0764639821
அலுவலகம்:-0776569929

நெவாட் பௌண்டேஷன் லிமிட்டெட்
NEFAD
மீன்வலை உருவாக்கல் தொழிற்சாலை
வடக்கு கிழக்கு மக்களின் கடல் உணவுத்தேவையைப் பூர்த்தி செய்யவும்,மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் உங்கள் தேவைக்கேற்ப வலைகளை உற்பத்தி செய்து வழங்கும் நிறுவனம்.



- ஜப்பானிய தொழில்நுட்பத்துடன் கூடிய உலகத்தரத்தில் முன்னணிவகிக்கும் யாணைக் (Yarn) கொண்டு, வாடிக்கையாளரின் தேவைக்கேற்பவும் விருப்பத்திற்கேற்பவும் மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்து வழங்கி வருகின்றோம்.
- நன்னீர் மீன் பிடிப்பதற்கான வலைகளையும் உங்கள் தேவைக்கேற்ப பெற்றுக் கொள்ளலாம்.
- 3 இழை - 60 இழை வரையிலான வலைகளை உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப உடனடியாக உற்பத்தி செய்து வழங்கி வருகின்றோம்.
- விவசாய தேவைகளுக்கான வலைகளும் உற்பத்தி செய்து வழங்கி வருகின்றோம்.
- உங்களுக்கு தேவையான நைலோன் நூல்களையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். (3 இழை – 60 இழை வரை 100 கிராமாக பெற்றுக் கொள்ளலாம்)

எம் அன்பார்ந்த வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவருக்கும் எம் இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்.

No.647, Beach Road, Jaffna, Sri Lanka E-mail: nefadfishnets@yahoo.com
Tel: +(94) 21 222 8919 Fax: +(94) 21 222 4781

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2020ம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.